# பொருளடக்கம்


1. நபி ஸலவாத்தின் நற்பலன்கள் 7

2. பெருமானாரின் மாண்பு 37

3. பெருமானாரின் மீது அன்பு 64

4. முஹம்மத் (ஸல்) அவர்கள் ஹயாத்துன்னபி 78

5. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறுதல் 86

6. பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துக் கூறுதல் 99


# நபி ஸலவாத்தின் நற்பலன்கள்

நூரெ முஹம்மதிய்யா! நூரெ முஹம்மதிய்யா! என்று நாம் கூறும்பொழுது நம்முடைய வாயெல்லாம் மணக்கிறது. நம்முடைய உடலெல்லாம் சிலிர்க்கிறது. நம்முடைய உள்ளமெல்லாம் இனிக்கிறது. ஆ! அந்த மாண்பாரும் திருப்பெயரிலேதான் எத்துணை இனிமை பொதிந்து கிடக்கின்றது! எத்துணை பெருமை நிரம்பித் துளும்புகிறது!! அண்ட கோளங்களின் வரலாறுகள் அத்தனையும் ஆதி முதல் அந்தம் வரை அதில் அடங்கிக் கிடக்கின்றனவே. ஆ! இஃதென்ன புதுமை! இஃதென்ன புதுமை!!

ஆம்! அல்லாஹ் படைத்தவற்றிலெல்லாம் மிகப் பெரும் புதுமை அந்த நூரெ முஹம்மதிய்யாவை எல்லாவற்றிற்கும் முதலாவதாக, எல்லாவற்றையும் விட மேலானதாக படைத்ததுதான். தான் மட்டும் தனித்து, மறைந்த மாபொருளாக விளங்கி அவன் தன்னை வெளிப்படுத்த எண்ணி அதற்கு முதற்கட்டமாகத் தன் பேரொளியிலிருந்து ஒரு சிறு திவலை எடுத்து இந்த நூரெ முஹம்மதிய்யாவைப் படைத்தான். அது அவனின் திருமுன் அருட்பெரும் ஜோதியாக எண்ணத் தொலையா ஆண்டுகள் இலங்கிக் கொண்டிருந்தது. அதனைப் பார்த்துப் பார்த்துப் பெரிதும் மகிழ்ந்து கொண்டிருந்த இறைவன் அதிலிருந்து அண்ட கோளங்களையும் படைத்தான். இதனையே இறைவன் பெருமானார் (ஸல்) அவர்களை நோக்கி, 'லவ்லாக லமா கலக்துல் அஃப்லாக்' (நீர் இல்லையெனில் நான் கோளங்களைப் படைத்திரேன்) என்று இயம்பினான். இதனையே எம்பெருமானார் (ஸல்) அவர்களும் 'அனமின் நூருல்லாஹி வகுல்லு ஷய்யின் மின் நூரி' (நான் இறைவனின் பேரொளியிலிருந்து ஆனேன். அண்ட கோளங்களும் என் பேரொளியிலிருந்து ஆனது) என்று திருவாய் மலர்ந்தார்கள். இதனையே நாமும்,

இறைவன் தன்னுடைய பேரொளியில் அணுவே அளவு
ஒளி எடுத்து
நிறைவாம் மனிதர் எம்பெருமான் நூராம் ஒளியைப்
படைத்தனனே
நிறைவாம் மனிதர் எம்பெருமான் நூராம் ஒளியில்
அணுவெடுத்து
நிறைவாய்ப் படைப்புகளத்தனையும் நெடியோன்
படைத்து மகிழ்ந்தனனே

என்று பாடிப் பரவசமுறுகின்றோம். இதனையே கீலானியும், 'இன்ஸான் ஐனுல் உஜூத்' என்று இயம்புகின்றார். இதன் பொருள் எம்பெருமானார் (ஸல்) அவர்களே படைப்பு என்னும் கண்ணின் மத்தியிலுள்ள பாவை என்பதாகும். இந்தத் தத்துவத்தையே இப்னு அரபியும் 'ஹகீகத்தெ முஹம்மதிய்யா' என்று அழைக்கின்றார்.

எண்ணத் தொலையா ஆண்டுகள் இறைவனின் திருமுன் பேரொளியாக இலங்கிக் கொண்டிருந்த அந்த நூரெ முஹம்மதிய்யா பின்னர் அர்ஷிலே துலங்கிக் கொண்டிருந்தது.

இதன் பின் மனித இனத்தைப் படைக்க விரும்பிய இறைவன் ஆதம் (அலை) அவர்களைப் படைப்பதற்காக மண்ணகம் சென்று மண்ணெடுத்து வருமாறு வானவர்களுக்குக் கட்டளையிட்டான். அக்காலை பெருமானார் (ஸல்) அவர்களையும் படைக்க விரும்பி மதீனாவில் இப்பொழுது பெருமானார் (ஸல்) அவர்கள் அடங்கப் பெற்றிருக்கும் இடத்திலிருந்து மண்ணெடுத்து வருமாறு ஜிப்ரீல் முதலான வானவர்களைப் பணித்தான். அவ்வாறே அவர்கள் மண்ணெடுத்து வந்ததும் அதனை தஸ்னீம் என்னும் சுவர்க்கத்து ஆற்றுத் தண்ணீரைக் கொண்டு குழைத்தான். அதிலே நூரெ முஹம்மதிய்யாவை இறைவன் பாய்ச்சியதும் அது ஒரு நன்முத்தாகப் பரிணமித்தது. அந்த நன்முத்தை ஆதம் (அலை) அவர்களின் மண்ணோடு சேர்த்துக் குழைத்தான் இறைவன்.

எனவேதான் இதைப் பற்றிப் பெருமானார் (ஸல்) அவர்கள் பிற்காலத்தில் கூறும் பொழுது "ஆதம் (அலை)



மண்ணுக்கும் தண்ணீருக்கும் இடையில் இருந்தபொழுது நான் நபியாக இருந்தேன்" என்று நவின்றனர். எனவேதான் விண்ணேற்றத்தின் போது ஆதம் (அலை) எம்பெருமான் (ஸல்) அவர்களை வரவேற்ற பொழுது, "உடற் பிறப்பால் என் மகனாகவும் ஆன்மீகப் பிறப்பால் என் தந்தையாகவும் உள்ள தங்களுக்குச் சுபசோபனம்" என்று நன்மாராயம் மொழிந்தனர். எனவேதான் பெருமானார் (ஸல்) அவர்கள் முதல் மாநபி என்றும் கூறப்படுகின்றனர்.

பின்னர் இறைவன் ஆதம் (அலை) அவர்களின் உருவைச் சமைத்து அதில் தன் ஆன்மாவை ஊதியதும் மண் உருவாக இருந்த ஆதம் (அலை) அவர்களின் உடல் சதையும் எலும்புமாக மாறியது. தலையிலே நுழைந்த அந்த ஆன்மா கண்களிலே இறங்கியதும் ஆதம் (அலை) அவர்கள் கண்களைத் திறந்து பார்த்தார்கள். அப்பொழுது சுவனத்து வாயிலின் மீது 'லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி' என்ற திருக்கலிமா பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டதும் இறைவ எம்பெரும! உன் திருப்பெயருடன் வேறொருவரின் பெயரும் பொறிக்கப் பட்டுள்ளதே, அவர் யார்?" என்று வினவினர். அதற்கு இறைவன், "அவர்தாம் உம்முடைய வழியில் ஐம்பத்தொன்றாம் தலை முறையில் தோன்றவிருக்கும உலக மாநபியாவார். அவரைப் படைக்கவில்லையாயின் நான் அகிலத்தையும் படைக்கப் போவதில்லை. அண்ட கோளங்களையும் படைக்கப் போவதில்லை" என்று கூறினான். *

* இறைவன் இக்காலை ஆதம் (அலை) அவர்களை நோக்கி, "அவரின் பொருட்டால் உம் பவம் பொறுப்பேன்" என்று கூறினான். அதைக் கேட்ட ஆதம் (அலை) அவர்கள், "தந்தையின் பொருட்டால் மகனின் பவம் பொறுக்கப் பெறுவதுதானே முறை. இஃதென்ன மாற்றமாயுள்ளது" என்று எண்ணியபொழுது, இறைவன் ஜிப்ரீலை நோக்கி, "நீர் ஆதமிடம் சென்று அவருடைய தவறான எண்ணத்தை அவருடைய உள்ளத்திலிருந்து அப்புறப்படுத்துமாறு கூறும். இல்லையெனில் அவ்வெண்ணத்தாலேயே அவர் அழிந்து விடுவார் என்றும் கூறும்" எனச் சொல்லி அனுப்பினான் என மற்றொரு வரலாறு எடுத்தியம்புகின்றது.

இதன் பின் இறைவன் வானவர்களை நோக்கி, ஆதம் (அலை) அவர்களுக்குப் பணியுமாறு பணித்தான். இப்லீஸைத் தவிர்த்து ஏனையோர் அனைவரும் தம்முன் பணிந்தெழுந்ததைக் கண்டு வியப்புற்ற ஆதம் (அலை) அவர்கள் அதற்கான காரணம் யாது என்று வினவினர். அதற்கு இறைவன் நூரெ முஹம்மதிய்யா உம் முதுகந்தண்டில் இருப்பதனால் அவர்கள் உம் முன் பணிந்தெழுந்தனர் என்று மறுமொழி பகர்ந்தான்.

அப்பொழுது ஆதம் (அலை) அவர்கள் அந்த நூரெ முஹம்மதிய்யாவைத் தம்முன் அருளுமாறு வேண்ட அதனை அவர்களின் நெற்றியில் ஒளிரச் செய்தான் இறைவன். அதனை அமரர்கள் கூட்டம் கூட்டமாக வந்து தரிசித்து மகிழ்ந்தார்கள். அப்பொழுது ஆதம் (அலை) அவர்களுக்குத் தாமும் அதனைக் கண்டு களிக்க இயலவில்லையே என்று பெருவருத்தம் ஏற்பட்டு தாமும் அதனைத் தரிசித்து மகிழ அருள் பாலிக்குமாறு இறைவனிடம் இறைஞ்சினர். உடனே இறைவன் அதனை அவர்களின் இரு பெருவிரல்களிலும் ஒளிரச் செய்தான். அது கண்டு பெரிதும் மகிழ்ந்த ஆதம் (அலை) அவர்கள் தம் பெருவிரல்கள் இரண்டையும் முத்தமிட்டு தம் கண்களில் ஒற்றிக் கொண்டனர்.*

* இதனைப் பிற்காலத்தில் ஜிப்ரீல் (அலை) பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து கூறியபொழுது, "பாங்கு சொல்லப்படும் பொழுது என் திருப் பெயரைச் செவியுற்றதும் ஒருவன் தன் இரு பெரு விரல்களையும் முத்தமிட்டு தன் கண்களில் தடவிக்கொளின் அவனுக்கு ஒரு போதும் கண் நோய் வராது" என்று நவின்றனர். அப்பொழுது, "மர்ஹபன் பிஹபீபி வகுர்ரத்தி ஐனி முஹம்மதிப்னி அப்தில்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்" என்று கூற வேண்டும் என 'ஷன்வானி' என்ற நூலில் எழுதப்பட்டுள்ளது.



இதன் பின் ஆதம் (அலை) அவர்களின் முதுகந்தண்டிலிருந்தும் அவர்களின் வழித்தோன்றல்களாகிய நல்லார், பொல்லார் ஆகிய அனைவரையும் இறைவன் வெளிவரச் செய்தான். அவர்கள் சிற்றெறும்பினும் சிறியதாக வெளியே வந்தனர். அப்பொழுது இறைவன் அவர்களை நோக்கி, "உங்களில் முஹம்மத் என்பவர் என்னுடைய நபியாக வருவார். அவர் மீது நீங்கள் ஈமான் கொள்ளுங்கள், அவர் மீது அன்பு செலுத்துங்கள்" என்று கூறினான்.

இக்காலை எம்பெருமானார் (ஸல்) அவர்களின் புனித ஆன்மா அவர்களின் முன்னே வந்து நின்றது. அப்பொழுது இறைவன் அவ்வான்மாவை நோக்கி, 'முஹம்மதே! உம்மைப் படைத்தவன் யார்?' என்று வினவினான். 'நீ தான்' என்று அது பதிலுரைத்தது. 'உன்னை வளர்ப்பவன் யார்?' என்று வினவினான் இறைவன். 'நீதான்' என்று அவ்வான்மா பதிலுரைத்தது. அதன் பின் தனக்கு சஜ்தாச் செய்யுமாறு கூற அவ்விதமே செய்தது அந்த ஆன்மா.

இதன் பின் அல்லாஹ் கூறினான்: "இந்த முஹம்மத் இறுதி மாநபியாக உங்களிடம் வருவார். உண்மைபேசக் கூடியவராகவும் உண்மையை அறிவிப்பவராகவும் வருவார். நீங்கள் இவர்மீது ஈமான் கொள்ளுங்கள். இவர் எதைச் சொல்கின்றாரோ அதனை நம்புங்கள்."

அப்பொழுது நபிமார்கள் இறைவனை நோக்கி, "இறைவ எம்பெரும! நாங்கள் அவரின் தூதுத்துவத்தை ஏற்றுக் கொள்கிறோம்" என்று ஒருமித்து இயம்பினர்.

அது கேட்ட இறைவன், "இஃது நிகழ்ந்ததற்கு நீங்கள் ஒருவருக்கொருவர் சாட்சியாயிருங்கள். நானும் உங்களுக்கு சாட்சியாய் இருக்கிறேன்" என்று கூறினான்.

பின்னர் ஆதம் (அலை) அவர்களை நோக்கி, "ஆதமே! நீர் இதற்கு ஷீத் மீது சாட்சியாய் இரும்" என்று கூறினான். பின்னர் ஷீத் (அலை) அவர்களை நோக்கி, "ஷீதே! நீர் இதற்கு இத்ரீஸின் மீது சாட்சியாக இரும்" என்று கூறினான். இவ்வாறே ஒவ்வொரு நபியிடமும் கூறி முடித்த

இறைவன் எல்லா நபிமார்களையும் ஒருமித்து நோக்கி, "நீங்கள் அனைவரும் இறுதி மாநபியாக வரும் முஹம்மதின் மீது சாட்சியாய் இருங்கள். அவருக்கு உதவி புரியுங்கள். அவரின் மீது ஈமான் கொள்ளுங்கள். உங்களுடைய கூட்டத்தினரை முஹம்மதுக்கு உதவி செய்யுமாறு இறுதி உரை கூறிவிட்டுச் செல்லுங்கள்" என்று கூறினான்.

இதனையே இறைவன் தன் திருமறையில், "நபிமார்களிடம் அல்லாஹ் வாக்குறுதி வாங்கிய சமயத்தில் (அவர்களை நோக்கி) '"வேதத்தையும், ஞானத்தையும் நான் உங்களுக்கு வழங்கியுள்ளேன். இதற்கும் பின் உங்களிடமுள்ளதை உண்மைப்படுத்தும் ஒரு தூதர் உங்களிடம் வருவாரானால் அவரை நீங்கள் உண்மையாக விசுவாசித்து, நிச்சயமாக அவருக்கு உதவி செய்ய வேண்டும்" (என்று கூறி) "இதனை நீங்களும் உறுதிப்படுத்தினீர்களா? என்னுடைய இக்கட்டளையை ஏற்றுக் கொண்டீர்களா?" என்று வினவிய பொழுது அவர்கள், "நாங்கள் அதனை ஏற்றுக் கொண்டோம்'' என்றே இயம்பினர். அதற்கு (இறைவன், இதற்கு) நீங்கள் சாட்சியாயிருங்கள். நானும் உங்களுடன் சாட்சியாயிருக்கின்றேன்'' என்று கூறினான் *(3:81)* என இயம்புகின்றான்.

ஒரு நாள் ஆதம் (அலை) அவர்கள் துயிலுறுங்கால் அவர்களின் இடது புற எலும்பிலிருந்து ஒருகோணலான எலும்பை எடுத்து ஹவ்வாவைப் படைத்தான் இறைவன். கண் மலர்ந்த ஆதம் (அலை) அவர்கள் தம் அருகே ஓர் ஆரணங்கு வீற்றிருப்பதைக் கண்டு, 'யார் இவர்?' என்று இறைவனை வினவிய பொழுது, 'பெண்' என்று ஒரே சொல்லில் மறுமொழி பகர்ந்தான் இறைவன்.

இதன்பின் ஆதம் (அலை) அவர்கள் ஹவ்வா மீது தன் கையை நீட்டிய பொழுது, 'நீர் எவ்வாறு அவர் மீது கையை நீட்டல் சாலும்?' என்று வினவினர் அமரர்கள். 'அவர் என் மனைவியல்லவோ' என்று மறுமொழி பகர்ந்தார்கள் ஆதம் (அலை) அவர்கள். 'அவருக்கான மஹரைக் கொடுத்து விட்டல்லவோ நீர் அவர்பால் கையை நீட்ட வேண்டும்'



என்றனர் அமரர்கள். 'அவ்விதமாயின் அவருக்கான மஹர் என்ன?' என்று வினவினர் ஆதம் (அலை) அவர்கள். 'மூன்று தடவை முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்வது' என்றனர் அமரர்கள். அது கேட்டு ஆதம் (அலை) அவர்கள் பெரிதும் வியப்புற்றனர், பெருமானார் (ஸல்) அவர்கள் மீது மூன்று தடவையல்ல, பத்துத் தடவை ஸலவாத்து மொழிந்த பின் ஹவ்வாவை மணமுடித்து மகிழ்ந்தனர்.

பின்னர் தடுக்கப்பட்ட கனியை உண்டதன் காரணமாக சுவனத்திலிருந்து தாரணியிலே தூக்கி எறியப்பட்ட ஆதம் (அலை) அவர்கள் இரு நூறாண்டுகளாகத் தம் பவம் பொறுத்தருளுமாறு அழுது, அழுது கண்ணீரையல்ல, செந்நீரைச் சிந்திக் கொண்டிருந்தார்கள். எனினும் இறைவன் அவர்களின் பவம் பொறுக்கவில்லை. ஒரு நாள் அவர்களுக்குத் திடீரெனப் பெருமானார் (ஸல்) அவர்களின் நினைவு வரவே "இறைவ எம்பெருமு! சுவனத்து வாசலில் உன் பெயருடன் எழுதப்பட்டிருந்த உன் அருமை நேசர், என் குலக் கொழுந்து, என் உயிரனைய மாமகன், இறுதி மாநபி முஹம்மதின் பொருட்டாலாவது என் பவம் பொறுத்து என்னை ஆட்கொள்வாயாக!" என்று இறைஞ்சினர். அடுத்த கணம் வானவர்கோன் ஜிப்ரீலின் சிறகொலி கேட்டது, "ஆதமே! கவலை விடும். உம் இறைவன் தன் இறுதி மாநபியின் பொருட்டால் உம் பவம் பொறுத் தருளினான்" என்று நன்மாராயம் மொழிந்து புன்முறுவல் பூத்து நின்றார். அது கேட்டு ஆதம் (அலை) அவர்களின் அகமும் முகமும் ஒருங்கு சேர்ந்து மலர்ந்தன. அவர்களின் நா இறைவனுக்கு ஆயிரமாயிரம் முறை நன்றி செலுத்திக் கொண்டிருந்தது.

இக்காலை ஜிப்ரீல் (அலை) அவர்கள் மீண்டும் ஆதம் (அலை) அவர்களிடம் வந்து, "இறைவன் உமக்கு ஸலாம் கூறினான். நீர் சுவனத்தில் முஹம்மதின் பெயரைக் கூறிப் பாவமன்னிப்புத் தேடியிருப்பின் தான் உம்மை மண்ணுலகிற்கே அனுப்பி இருக்க மாட்டேன் என்று கூறி வருமாறு எனக்கு ஆணையிட்டான்" என்று இயம்பிச் சென்றனர்.

ஆதமும் ஹவ்வாவும் இவ்வுலகில் பல மக்களை ஈன்றெடுத்தனர். அவர்களில் காபீல் என்ற தீயோன் தன் உடன் பிறந்தார் ஹாபீலைக் கொன்றொழித்தது கண்டு வெகுண்ட ஆதம் (அலை) அவனுடைய காலைப் பிடிக்குமாறு மண்ணுக்கு ஆணையிட்டனர் தன் தந்தை இறுதி மாநபி (ஸல்) அவர்களின் பொருட்டால்தான் தம் பவம் பொறுக்கப் பெற்றார் என்று தன் தந்தை வாயிலாகவே கேள்வியுற்றிருந்த காபீல் அத்திருமாநபியின் பொருட்டால் தன் காலை விடுமாறு மண்ணிடம் வேண்ட மண்ணும் இறைவனின் ஆணைப்படி அவனின் காலை விட்டது.

தம் அருமை மகன் ஹாபீல் கொலை செய்யப்பட்ட பின் ஆற்றொணாத் துயரில் மூழ்கிய ஆதம் (அலை) அவர்கள் தமக்கு ஒரு நன் மகனைத் தந்தருளுமாறு இறைவனிடம் இறைஞ்சிய வண்ணம் இருந்தனர். அப்பொழுது ஜிப்ரீல் (அலை), ஆதம் (அலை) அவர்களிடம் சுவனப் பழங்களுடன் திருத்தோற்றம் வழங்கி, "இவற்றை உண்டு, சுனை நீரில் குளித்து மருவும். ஏனெனில் இன்று நூரெ முஹம்மதிய்யாவை உம் முதுகந்தண்டிலிருந்து ஹவ்வாவின் மணிவயிற்றில் இறைவன் வைக்கப் போகிறான்'' என்று கூறிவிட்டு சென்றனர்.

அவ்விதமே அவர்கள் செய்ய அந்த நூரெ முஹம்மதிய்யா சிலகாலம் ஹவ்வாவின் மார்பில் ஒளிர்ந்து கொண்டிருந்தது. கருமுதிர்ந்து பிள்ளைக் கனி அமுதாக ஷீத் (அலை) அவர்கள் இவ்வவனி தோன்றும் வரை இப்லீஸை நாற்பதாண்டுத் தொலைக்கு அப்பால் வைத்தான் இறைவன்.

இதன் பின் நூரெ முஹம்மதிய்யா தம் திரு நுதலிலே ஒளிர ஷீத் (அலை) அவர்கள் இவ்வுலகில் தோன்றினர். அவர்கள் வளர்ந்து பெரியவரான பொழுது ஆதம் (அலை) அவர்களின் இறுதிக் காலமும் நெருங்கிக் கொண்டுவந்தது. ஒரு நாள் அவர்கள் தம் அருமை மகன் ஷீதை அருகழைத்து அவரின் திருநுதலிலே ஒளிர்ந்து கொண்டிருக்கும் நூரெ முஹம்மதிய்யாவை நன்முறையில் பேணிப் பாதுகாத்து வருமாறு கூறினர். அப்பொழுது ஷீத் (அலை) அவர்கள் தம் தந்தையை நோக்கி, "தந்தையே! தாங்கள் முஹம்மத் (ஸல்) அவர்களின் மாண்பினைப் பற்றி என்னிடம் அதிகமாகக் கூறியுள்ளீர்கள். அவ்விதமாயின் தாங்கள் இருவரிலும் யார் சிறந்தவர்?" என்று வினவினர்.



ஆதம் (அலை) பதிலளிக்கவில்லை. இரண்டாம் தடவை கேட்டபொழுதும் அவர்கள் பதிலளிக்கவில்லை. மூன்றாம் தடவை அவர்கள் வற்புறுத்திக் கேட்க, "மகனே! முஹம்மத் (ஸல்) அவர்களின் மாண்பு எல்லாவற்றையும்விட மேலானதாகும். அவர்கள் எல்லா நபிமார்களுக்கும் தலைவராவார். அவர்கள் மெய்ஞ்ஞானிகளுக்கு அத்தாட்சியாக உள்ளனர் அல்லாஹ் அவர்களின் உம்மத்துகளுக்கு ஆறு நற்பேறுகளை அளித்துள்ளான். ஆனால் அந்த நற்பேறுகளை அவன் எனக்கு அளிக்கவில்லை" என்று கூறினர்.

''என்ன அந்த நற்பேறுகள்? தந்தையே!'' என்று ஆவலுடன் வினவினர் ஷீத் (அலை) அவர்கள்,

ஆதம் (அலை) அவர்கள் கூறினார்கள்:

(1) மகனே! நான் ஒரு குற்றம் செய்ததற்காக இறைவன் என்னைச் சுவனத்திலிருந்து வெளியேற்றினான். அவர்களின் உம்மத்துகள் பல பாவங்களைச் செய்தபோதினும் அவர்களின் பவம் பொறுத்து அவர்களைச் சுவனத்தில் புக வைப்பான்.

(2) நான் செய்த ஒரு குற்றத்திற்காக இறைவன் என்னை உலகில் அனாதையாக்கி விட்டான். மேலும் என்னுடைய இந்தக் குற்றத்தையும் எல்லோருக்கும் பகிரங்கப்படுத்தி விட்டான். ஆனால் அவர்களின் உம்மத்துகளோ ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான குற்றங்களை இழைப்பர். எனினும் இறைவன் அவற்றைப் பிறர் கண்ணில் படா வண்ணம் மறைத்து விடுவான்.

(3) நான் செய்த ஒரு குற்றத்திற்காக என் மனைவி ஹவ்வாவிடமிருந்து என்னை இறைவன் பிரித்து விட்டான். ஆனால் முஹம்மத் (ஸல்) அவர்களின் உம்மத்துகள் நூற்றுக்கணக்கான சிறிய, பெரிய பாவங்களைப் புரிவார்கள். ஆனால் அவர்களின் நண்பர்களிடமிருந்து கூட அவர்களைப் பிரித்து வைக்க மாட்டான்.

(4) நான் செய்த ஒரு குற்றத்திற்காக முந்நூறு ஆண்டுகள் அழுது இறைவனிடம் மன்னிப்புக் கேட்டேன். அதன் பின் தான் இறைவன் என் பாவம் பொறுத்து என்னை ஆட் கொண்டான். ஆனால் முஹம்மத் (ஸல்) அவர்களின் உம் மத்துக்களோ அழத் தேவை இல்லை. அவர்கள் தம் பவம் நினைத்து மனமார வெட்கப்பட்டால் போதும், இறைவன் அவர்களின் பவம் பொறுத்து அவர்களை ஆட்கொண்டு விடுவான்.

(5) நான் செய்த ஒரு குற்றத்திற்காக இறைவன் என்னை நிர்வாணமாக்கி அதே நிலையில் என்னை உலகிற்கு அனுப் பினான். ஆனால் அவருடைய உம்மத்துக்களையோ இறைவன் எக்காரணத்தை முன்னிட்டும் நிர்வாணமாக்க மாட்டான்.

(6) நான் என்னுடைய 'தவ்பா' வை இறைவன் ஏற்றுக் கொள்வதற்காக 'அரபாத்' வெளி சென்று அழுதேன். அப் பொழுது என் 'தவ்பா' ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் முஹம்மத் (ஸல்) அவர்களின் உம்மத்துகள் தங்களின் இல்லங்களை விட்டு கால்களை வெளியே கூட எடுத்து வைக்கமாட்டார்கள். "இறைவனே! நாங்கள் பவம் செய்து விட்டோம்" என்று மட்டும் கூறுவர். உடனே இறைவன், "மன்னித்து விட்டேன்" என்று பதிலிறுத்து விடுவான்.

இவ்வாறு கூறிய ஆதம் (அலை) அவர்கள் தமக்கருளப் பட்ட ஸுஹ்பு (கட்டளை)கள் அடங்கிய பேழையை ஷீத் (அலை) அவர்களிடம் ஒப்படைத்து அவர்களைத் தம் முடைய பிரதிநிதியாக இவ்வுலகில் நியமித்து, அல்லாஹ் வுக்கு அஞ்சி ஒழுகி வருமாறும் அவனின் இறுதி மாநபி முஹம்மத் (ஸல்) அவர்களை அடிக்கடி நினைவு கூறு மாறும் அறிவுரை பகர்ந்தனர்.

ஒரு நாள் ஷீத் (அலை) அவர்களிடம் ஜிப்ரீல் எழுபதா யிரம் வானவர்களுடன் வந்து, "ஷீதே! உம்மிடமுள்ள நூரெ முஹம்மதிய்யாவை மிகமிகத் தூய்மையானவனிடமே யன்றி வேறு எவரிடமும் வைக்கக் கூடாது" என்று கூறினர். அவ்விதமே செய்வதாக வாக்குறுதி அளித்தனர் ஷீத்.



இதன்பின் சுவனத்துப் பழங்களை ஆதம் (அலை) அவர்கள் உண்ண விரும்ப அவற்றை ஒரு மரவையில் வைத்து ஒரு வானுலகத்துக் கண்ணழகியின் (ஹூரின்) தலையில் வைத்துக் கொண்டு ஜிப்ரீல் வந்தார். அந்த வானுலகத்துக் கண்ணழகியைத் தம் மகன் ஷீதுக்கு மணமுடித்து மகிழ்ந்தனர் ஆதம் (அலை) அவர்கள். அக் கண்ணழகி கருவுற்ற பொழுது, "உம்முடைய வயிற்றிலிருக் கும் குழந்தைக்குச் சுப சோபனம்! அதன் முதுகந்தண்டில் தான் 'நூரெ முஹம்மதிய்யா' உள்ளது" என்று அசரீரியாக ஒரு சப்தத்தைக் கேட்டார்கள்.

அவரின் மணிவயிற்றிலிருந்து 'அனுஷ்' பிறந்த பொழுது அதன் திரு நுதலில் 'நூரெ முஹம்மதிய்யா' ஒளிர்ந்து கொண்டிருப்பதைப் பெற்றோர்கள் கண்டு பரவசமுற்றனர். அனுஷ் பருவம் எய்தும் வயதை அடைந்ததும் ஷீத் (அலை) அவர்கள் தம் அருமை மகன் அனுஷை அருகழைத்து, "என் தந்தை இந்த 'நூரெ முஹம்மதிய்யா'வைப் பாதுகாத்து வருமாறு என்னிடம் வாக்குறுதி பெற்றார். அதே போன்று பாதுகாத்து வருமாறு உன்னிடமும் வாக்குறுதி வாங்க விரும்புகிறேன். பாதுகாத்து வருவாயா?" என்று வினவினர். "பாதுகாத்து வருவேன்" என்று அனுஷ் பதிலிறுத்தார்.

பின்னர் அந்த நூரெ முஹம்மதிய்யா கைனன், மஹ லைல், பர்த் ஆகியோர் வழியாக வந்து இத்ரீஸ் (அலை) அவர் களின் திருநுதலில் திகழ்ந்தது, அதன் பின் முதஉஸலக், லமக் ஆகியோர் வழியாக நூஹ் (அலை) அவர்களிடம் வந்து தங் கியது. அப்பொழுது உலகத்தையே அழிக்க வல்ல மா பெரும் பிரளயம் ஏற்பட்ட காலை அந்த நூரெ முஹம்மதிய்யாவின் பொருட்டால் இறைவன் நூஹ் (அலை) அவர்களையும் அவர்களுக்கு வழிபட்டவர்களையும் காத்தருள் புரிந்தான்.

பின்னர் நூஹ் (அலை) அவர்களின் மகன் ஷாமிலிருந்து அர்பகஷ்த், அமீர், ஷாலிக், மாலிக், ரயூ, ஷரூஹ், நஹூ, தாரிஹ் வழியாக இப்ராஹீம் (அலை) அவர்களின் திரு நுதலில் வந்து இலங்கியது அந்த நூரெ முஹம்மதிய்யா. இப்ராஹீம் (அலை) அவர்களை நம்ரூது நெருப்புக் குண்டத் தில் தூக்கி எறிந்தபொழுது அந்த எரிதழல் குண்டத்தை

மலர்ப் பூம்பொழிலாக இறைவன் மாற்றியமைத்து அவர்களைக் காத்தருள் புரிந்ததும் அம்மாநபியின் திரு நுதலில் ஒளிர்ந்து கொண்டிருந்த நூரெ முஹம்மதிய்யாவின் பொருட்டாலேயாகும்.

ஒரு நாள் இறைவனிடமிருந்து இப்ராஹீம் (அலை) அவர்களுக்குச் செய்தி வந்தது, "இப்ராஹீமே! உம் வழியில் மாண்பார்ந்த ஒரு நபி பிறக்க உள்ளார். அவரின் பெயர் முஹம்மத் என்பதாகும். அவரின் பொருட்டால் நான் உம்மை என்னுடைய கலீல் (நண்பனாக) ஆக்கிக் கொண்டேன்" என்று அச்செய்தியில் இறைவன் நன்மாராயம் மொழிந்தான்.

இதன் பின் இப்ராஹீம் (அலை) அவர்கள் ஹாஜராவை மருவிய பொழுது ஹாஜராவின் நெற்றியில் அந்த நூரெ முஹம்மதிய்யா ஒளிர்ந்தது. பின்னர் இஸ்மாயீல் (அலை) அவர்களின் திரு நுதலில் வந்து அந்த நூரெ முஹம்மதிய்யா தரித்தது. அது கண்டு ஸாராவுக்கு பொறாமை பொறாமையாக வந்தது. "எனக்கு ஒரு மகன் பிறந்திருப்பின் அப்பேரொளி அவன் திரு நுதலில் அன்றோ ஒளிர்ந்திருக்கும்" என்று எண்ணினார் ஸாரா.

பின்னர் இஸ்மாயீல் (அலை) அவர்களுக்குப் பதிலாக சுவனத்து ஆடு ஒன்றினை அவ்விடத்தில் கிடத்தாட்டி அறுக்கப் பெறுமாறு செய்த இறைவன் அக்காலை இப்ராஹீம் (அலை) அவர்களை நோக்கி "நாம் உம் மகன் இஸ்மாயீலின் உயிரைக் காத்தருள் புரிந்ததற்குக் காரணம் என் இறுதித் தூதராம் முஹம்மதின் பேரொளியை அவரில் வைத்திருப்பதாலேயன்றி வேறில்லை" என்று கூறி, வருங் காலத்தை மூடி இருந்த திரையை நீக்கினான். அப்பொழுது எம்பெருமானார் (ஸல்) அவர்களையும் அவர்களின் நற்குடும்பத்தினரையும் இப்ராஹீம் (அலை) அவர்கள் கண்ணுற்றனர். அப்பொழுது இறைவன், "இப்ராஹீமே! இவர்களெல்லாம் உம்முடைய அன்புச் செல்வன் இஸ்மாயீலின் வழித்தோன்றல்கள்தாம்" என்று கூறினான்.

இப்ராஹீம் (அலை) அவர்கள் தம் மகன் இஸ்மாயீலுடன் கஃபாவை நிர்மாணித்த பின் ஒரு தடவை ஸாராவுடன் ஹஜ்ஜுச் செய்ய வந்தக்கால் கஃபாவின் அருகில் நின்று கொண்டு எவர் பொருட்டு இறைவன் தம்மைத் தன்னுடைய 'கலீல்' ஆகத் தேர்ந்தெடுத்துக் கொண்டானோ அவர்களின் உம்மத்துக்களுக்காக இறைவனிடம் பின்வருமாறு இறைஞ்சினர்.



"இறைவனே! உன்னுடைய ஹபீப் முஹம்மத் (ஸல்) அவர்களின் உம்மத்தில் எவர் இந்தப் புனித இல்லத்தை தவாஃப் (சுற்றி) வருகிறாரோ அவரை நரக நெருப்பை விட்டும் காத்தருள் புரிவாயாக!"

அதற்கு இறைவன் 'ஏற்றேன்' என்று மறுமொழி பகர்ந்தான்.

பின்னர் இஸ்மாயீல் (அலை) அவர்கள், "இறைவனே! முஹம்மத் (ஸல்) அவர்களின் உம்மத்துகளுக்கு சுவனப் பூங்காவை நற்கூலியாக வழங்குவாயாக!" என்று இறைஞ்சினர். 'அங்கீகரித்தேன்' என்று மறுமொழி பகர்ந்தான் இறைவன்.

அதன் பின் ஸாரா அம்மையாரும், "இறைவனே! முஹம்மத் (ஸல்) அவர்களின் உம்மத்திலுள்ள பெண்களின் பாவம் பொறுத்து அவர்களை ஆட்கொள்வாயாக!" என்று இறைஞ்சினர்.

'ஆமீன்' என்று பதிலிறுத்தான் இறைவன். *

இப்ராஹீம் (அலை) அவர்கள் இறந்தபின் இஸ்மாயீல் (அலை) அவர்கள் தம் இளவல் இஸ்ஹாக் (அலை) அவர்களை நோக்கி, 'தந்தையின் சொத்தில் அவர்களின் நினைவாக வைத்துக் கொள்ள ஏதாவது சிறிது தாரும்' என்று கூறினர். அது கேட்ட இஸ்ஹாக் (அலை) அவர்கள், "தாங்கள் என்னுடன் சரி நிகர் சமமாக முடியாது. தங்களுக்கு வாரிசு பாத்தியமே கிடையாது. தங்களுக்குத் தந்தையின் சொத்தில் யாதொரு பங்கும் கிடையாது" என்று கூறினர். அது கேட்டு இஸ்மாயீல் (அலை) அவர்கள் வருந்தினர்.

* இதற்கு நன்றி செலுத்தும் பொருட்டே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அத்தஹிய்யாத்தில் இப்ராஹீம் (அலை) அவர்களுக்காகவும், அவர்களின் குடும்பத்தாருக்காகவும் இறைஞ்சும் 'ஸலவாத்தெ இப்ராஹீமிய்யா'வைச் சேர்த்தனர் என்று கூறப்படுகிறது.

அப்பொழுது ஜிப்ரீல் (அலை) அவர்கள் இஸ்ஹாக் (அலை) அவர்களிடம் வந்து, "நீர் இஸ்மாயீலைவிட உம்மை உயர்ந்தவராகக் கருதிக் கொள்ளாதீர். ஏனெனில் இறுதி மாநபி முஹம்மத் (ஸல்) அவர்கள் இஸ்மாயீலின் முதுகந்தண்டிலிருந்துதான் வர இருக்கின்றனர். இறை நம்பிக்கையாளர்கள் அனைவரும் அவர்களின் முதுகந் தண்டிலிருந்தே வர இருக்கின்றனர்" என்ற இறை செய் தியை அறிவித்தனர். அது கேட்டு அழுது அழுது இஸ்ஹாக் (அலை) அவர்களின் கண்களும் மங்கின.

இஸ்மாயீல் (அலை) அவர்களின் திருநுதலில் இலங்கிக் கொண்டிருந்த 'நூரெ முஹம்மதிய்யா' பின்னர் அவர்களின் மகன் கைதரின் திருநுதலில் இலங்கலாயிற்று இஸ்ஹாக் (அலை) அவர்களின் வழித்தோன்றல்களே பல்கிப் பெருகி வருவதைக் கண்ட அவர் ஜுர்ஹும் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு மங்கை நல்லாளை மணமுடித்து மருவினார். எனினும் அந்த நூரே முஹம்மதிய்யா அப் பெண்ணின் வயிற்றிற்குள் செல்லவில்லை.

ஓரிரவு அவர் அயர்ந்து உறங்குங்கால் கனவொன்று கண்டார். அதில் "உம் திருநுதலில் இலங்கிக் கொண்டி ருக்கும் நூரே முஹம்மதிய்யா ஓர் அரபிப் பெண்ணிடம் தான் செல்லும். நீர் ஏன் விதிக்கு மாறாக முயற்சி செய்கிறீர்" என்று அசரீரி மூலம் அறிவிக்கப்பட்டார்.

விடிந்தெழுந்த கைதர், காலிரா என்ற அரபி குலத்து மங்கையை மணமுடித்து மருவினார். அவரின் திருநுதலில் இலங்கிக் கொண்டிருந்த நூரெ முஹம்மதிய்யா, காலிரா வின் மணி வயிற்றில் தரித்தது.

தம் தந்தையார் தம்மிடம் ஒப்படைத்த தாபூத்தை (பேழையை) கைதர் திறக்க முயன்ற பொழுது, "இந்த அடைக்கலப் பொருளைத் திறக்க உமக்கு ஆற்றலில்லை. இதனைக் கன்ஆன் எடுத்துச் சென்று யாஃகூபிடம் ஒப் படைத்து விடும்" என்ற இறை கட்டளை வர அவ்விதமே செய்தார் கைதர். கன்ஆனை நெருங்கியதும் அந்தத் தாபூத்தி லிருந்து ஒரு சப்தம் வர அதனைச் செவியுற்று அந்தத் தாபூத்தை வரவேற்க ஊருக்கு வெளியே வந்தனர். யஃகூப்



(அலை) அவர்கள், அதனை அவர்களிடம் ஒப்படைத்தார் கைதர். அதனைப் பெற்றுக் கொண்ட யஃகூப் (அலை) அவர் கள் அகமகிழ்ந்து "இன்றிரவு காலிரா மூலம் உமக்கு ஒரு நன் மகன் பிறந்துள்ளான்" என்று கூறினர். இல்லம் திரும்பிய கைதர் தமக்கு அழகுத் திருமகன் பிறந்திருப்பதையும் அவரின் திருநுதலில் நூரெ முஹம்மதிய்யா இலங்கிக் கொண்டிருப் பதையும் கண்டு அளவிலா மகிழ்வெய்தினார்.

அதன் பின் அந்த நூரெ முஹம்மதிய்யா, ஸயீத் யஷ்ஹுப், யாஅரப், யர்ஜ், நகர், இலைஸ், முத்ரிகா, குஸைமா, கினானா ஆகியோர் வழியாக வந்து கொண்டே இருந்தது.

இதற்கிடையே இறைவன் அந்த நூரெ முஹம்மதிய்யா வைப் பற்றியும் அது இறுதி மாநபியாக மக்கமா நகரிலே திருத்தோற்றம் வழங்கி மதீனமா நகரிலே அரசோச்சப் போ வதைப் பற்றியும் அவ்வக் காலங்களில் தோன்றிய நபிமார் களுக்கெல்லாம் நல்லறிவிப்புச் செய்து கொண்டிருந்தான்.

இறைவன் மூஸா (அலை) அவர்களுக்கு அருளிய 'தவ்ராத்' வேதத்தில் அந்த இறுதி மாநபி தோன்றப் போவதை முன்னறிவிப்புச் செய்து அவர்களின் திருப் பெயர் 'அஹ்மத்' என்றும் தெளிவாகக் குறிப்பிட்டிருந் தான். இத்னை மூஸா (அலை) அவர்கள் பனீ இஸ்ராயீல் களிடம் எடுத்துரைத்தார்கள். *

---

* ஒரு நாள் மூஸா (அலை) அவர்கள் பாரான் பள்ளத் தாக்கில் இறுதி மாநபி தோன்றப் போவது பற்றியும் அவர் கள் மாண்பினைப் பற்றியும் அவர்கள் பிறந்தகம் விட்டுப் புறப்பட்டு தௌர் என்ற மலையில் ஒளிந்திருந்து யத்ரிப் புறப்பட்டுச் சென்று ஆங்கு செங்கோலாச்சப் போவதைப் பற்றியும் கூறியதை ஒரு பாம்பு கேட்டுக் கொண்டிருந்தது. அந்த இறுதி மாநபியைக் காண வேண்டுமென்ற ஆசை யினால் அது அங்கிருந்துப் புறப்பட்டு தௌர் மலையை அடைந்து அங்கு அவர்களைக் காண்பதற்காகக் காத்திருந் தது. பெருமானார் (ஸல்) அவர்களும், அபூ பக்ர் (ரலி) அவர்களும் அங்கு வந்த பொழுது அவர்கள் அங்கு வந்து

ஒரு நாள் இறைவன் மூஸா (அலை) அவர்களை நோக்கி, "உம்முடைய நாவும் பேசும் ஆற்றலும், கண்ணும் பார்க்கும் ஆற்றலும், காதும் கேட்கும் ஆற்றலும், உடலும் உயிரும் எவ்வாறு ஒன்றுக்கொன்று நெருக்கமாக உள்ளதோ அதை விட அதிகமாக நீர் என்னை அணுகி இருக்க விரும்பின் நீர் என்னுடைய இறுதி மாநபி முஹம்மதின் மீது ஸலவாத்துச் சொல்வதை அதிகப்படுத்திக் கொள்வீராக! மேலும் மறுமையில் உமக்குத் தாகவிடாய் ஏற்படா திருக்க விரும்புவீராயின் அம்மாநபியின் மீது ஸலவாத்துச் சொல்வதை அதிகப்படுத்திக் கொள்வீராக!" என்று அருண் மொழி பகர்ந்தான்.

மூஸா (அலை) பனீ இஸ்ராயீல்களை அழைத்துக் கொண்டு எகிப்தை விட்டு நீங்கிய பொழுது கடல் குறுக்கிட்டகாலை என் செய்வதென அறியாது அவர்கள் திகைத்தபொழுது, "உம் கைத்தடியால் கடலை அடியும்" என்று இறை ஆணை வந்தது. அவ்விதமே மூஸா (அலை) அவர்கள் செய்யக் கடல் பிளக்கவில்லை. அப்பொழுது இறைவனிடமிருந்து மீண்டும் செய்தி வந்தது, "என் இறுதித் தூதராம் முஹம்மதின் மீது ஸலவாத்து ஓதி அடியும்" என்று. அவ்விதமே மூஸா (அலை) செய்யக் கடல் பிளந்து வழிவிட்டது.

இதன் பின் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. பனீ இஸ்ராயீல்களில் நூறாண்டுகளாக இறைவனுக்கு மாறு செய்து கொண்டிருந்த ஒருவர் திடீரென இறப்பெய்தினார். அப்பொழுது அவரை மக்கள் புதைக்கவும் செய்யாது குப்பைத் தொட்டியிலே வீசி எறிந்தார்கள். அப்பொழுது இறைவன் அவரை நல்லடக்கம் செய்யுமாறு மூஸா (அலை) அவர்களுக்கு 'வஹீ' அறிவித்தான். அவ்விதமே செய்த மூஸா (அலை) இறைவனை நோக்கி, "இறைவ என் பெரும! அவனோ ஒரு நூறாண்டுகளாக உனக்கு மாறு செய்து கொண்டிருந்தான் என்பதை நீ அறிவாய். அவ்விதமிருக்க நீ ஏன் அவனை நல்லடக்கம் செய்யுமாறு எனக்கு 'வஹீ' அறிவித்தாய்!" என்று வினவினர். அதற்கு இறைவன், "அவர் ஒரு நாள் தவ்ராத்தை ஓத எடுத்தபொழுது அதில் என் இறுதி மாநபி முஹம்மதின் திருப்பெயர் பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டதும் அதனைக் கண்களில் ஒற்றி அவர் மீது ஸலவாத்துச் சொன்னார். அதன் காரணமாக அவரின் பவம் பொறுத்து அவரை ஆட்கொண்டேன்" என்று பதிலிறுத்தான்.

---

விட்டதை உணர்ந்து மகிழ்ச்சி மீக்குற்ற அப்பாம்பு அவர்களைக் காண வெளியே வர முயன்ற பொழுது எல்லாப் பொந்துகளும் அடைக்கப்பட்டிருப்பதைக் கண்டது. பின்னர் ஒரு பொந்து மட்டும் திறந்திருப்பதைக் கண்டு அதன் வழியாக வந்து பெருமானார் (ஸல்) அவர்களைக் காண முன் வந்த பொழுது அதனைத் தம் பாதத்தால் அபூ பக்கர் (ரலி) அவர்கள் அடைக்க முற்பட்டக்கால் அது சீறிச் சினந்து அவர்களைத் தீண்டியது. அதன் கடி தாங்க இயலாது அவர்கள் தம் காலை எடுத்த பொழுது அது வெளியே வந்து பெருமானார் (ஸல்) அவர்களைத் தரிசித்து விட்டுச் சென்றது என ஸூஃபியாக்கள் கூறுகின்றனர்.



காலம் உருண்டோடியது. ஒரு நாள் சுலைமான் (அலை) அவர்கள் வானவூர்தியிலே சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் மதீனா மாநகருக்கு மேலே பறந்து செல்லுங்கால், "இது இறுதி மாநபி குடியேறும் எழிலார் நற்பதியாகும். அவரை விசுவாசிப்பவர்களுக்கே சோபனம். அவரைப் பின் பற்றுபவர்களுக்கே சோபனம்" என்று மகிழ்ச்சி மொழி பகர்ந்து, பெருமானார் (ஸல்) அவர்கள் மீது.

வள்ளலை ஒரு நான் மறைக்கரும் பொருளை
மறைபடா திலங்கு(ம்) ஒண்மணியை
தள்ளுதற் கருமமும் மலத்தையும் கடந்தோர்
தவத்தினுள் விளங்கிய கனியைக்
கள்ளவிழ் மறவ மலர்த்தொடைப் புயரைக்
கருணையங் கடலினிற் பிறந்த
தெள்ளமு தனைய முகம்மது நபியைத்
தெரிசிக்கும் கண்களே கண்கள்

என்று புகழ்மாலை தொடுத்தனர்.

அதன் பின் சுலைமான் (அலை) அவர்கள் மக்காவின் மீது பறந்து சென்றக்கால் அங்கு இறங்கி தன்னை இடம் சுற்றி வராததைக் கண்ட கஃபா இது பற்றி இறைவனிடம் முறையிட்டபொழுது, "கஃபாவே! கவலற்க! என் இறுதித் தூதுவராம் முஹம்மதை இம்மண்ணிலே நான் தோன்றச் செய்வேன். அவர் உன்னை உருவச் சிலைகளை விட்டும் தூய்மைப்படுத்துவார். அவரைப் பின்பற்றியவர்கள் உன்பால் வருவதைத் தங்களின் கடமைகளில் ஒன்றாகக் கொண்டு ஒட்டகம் தன் குட்டிகள் பாலும், புறா தன் குஞ்சுகளிடத்திலும் பாசத்தால் பிணைக்கப்பட்டு விரைந்தோடி வருவது போன்று விரைந்தோடி வருவர். அவர்களின் நெற்றிகளால் உன்னுடைய தலத்தை நான் நிரப்புவேன்" என்று ஆறுதல் மொழி பகர்ந்தான் இறைவன்.

இதன் பின் வந்த நபிமார்களெல்லாம் அந்த இறுதி மாநபி தோன்றப் போவதைப் பற்றி மக்களுக்கு நல்லறிவிப்புச் செய்து கொண்டே வந்தார்கள்.

ஈஸா (அலை) அவர்கள் தம் மக்களை நோக்கி, "நான் பிதாவை வேண்டிக் கொள்வேன். அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்கும் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்." (யோ: 14அ. 16வ)

"நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்குப் பிரயோசனமாயிருக்கும். நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார். நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து பாவத்தைக் குறித்தும் நியாயத் தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்தும் உணர்த்துவார்.

"அவர்கள் (யூதர்கள்) என்னை விசுவாசியாதபடியினாலே (ஏற்படும்) விசுவாசத்தைக் குறித்தும் நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்தில் போகிறபடியினாலே (உங்களுக்கு நீங்கள் நடக்க வேண்டிய)



நீதியைக் குறித்தும் இந்தஉலகத்தின் அதிபதி நியாயம் தீர்க்கப்பட்டதினாலே நியாயத் தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார்.

"இன்னும் அநேக காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அவற்றை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்.

"சத்திய ஆவியாகிய அவர் வரும் பொழுது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாகப் பேசாமல் தாம் கேள்விப்பட்ட யாவையும் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்" (யோ: 16அ, 7முதல் 14வரை) என்று நன்மாராயம் மொழிந்தனர். *

---

* இங்கு தேற்றரவாளன் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எம்பெருமானார் (ஸல்) அவர்களின் திருப்பெயராகிய அஹ்மத் என்பதையேயன்றி வேறில்லை. ஈஸா (அலை) அவர்களுக்குப் பழைய சிரிய மொழியில் அருளப்பெற்ற இஞ்சீல் வேதம் இப்பொழுது இல்லை; ஆனால் அதன் ஹீப்ரு மொழி பெயர்ப்பில், 'வயலூ ஹிம்தத் கோல் ஹக்காயிம்' என்ற வாக்கியம் பொறிக்கப்பட்டுள்ளது. அதன் பொருள் 'எல்லா இனத்தவருடையவும் ஹிம்தா வருவார்' என்பதாகும். இதில் கூறப்பட்டுள்ள ஹிம்தா என்பதே அஹ்மத் என்பதாகும். அதன் பொருள், 'மிகவும் புகழுக்குரியவர்' என்பதாகும். அதனை கிரேக்க மொழியில் பெரிக்லிட் என்று மொழி பெயர்த்துள்ளனர். அதன் உண்மைப் பொருள் மிகவும் புகழுக்குரியவர் என்பதாகும். ஆனால் அதே தொனியில் உள்ள பரக்லிடாஸ் என்ற சொல்லோடு அதனைக் குழப்பி அதனைத் தேற்றரவாளன் என்று சிலர் மொழி பெயர்த்து விட்டார்கள்.

மேலும் இந்த முன்னறிவிப்போடு, "இந்தப் பள்ளியை மாண்பால் நிரப்புவேன்; ஷலோமையும் உங்களுக்கு அருள்

ஈஸா (அலை) அவர்களின் காலத்தில் யஹ்யா (அலை) அவர்கள் தோன்றித் தம்மை நபியென அறிவித்த பொழுது ஜெரூஸலத்திலுள்ள யூதர்கள் அவர்களிடம் ஆள் அனுப்பி, 'நீர் யார்? கிறிஸ்துவா? (மஸீஹா)' என்று வினவினர். அவர்கள் 'இல்லை' என்று பதில் கூறினார்கள். அதன் பின் 'நீர் எலியாவா (இல்லையா?)' என்று வினவினர். அதற்கும் அவர்கள் 'இல்லை' என்று மறுமொழி பகர்ந்தார்கள். மீண்டும் அவர்கள் யஹ்யா (அலை) அவர்களை நோக்கி, 'நீர் தீர்க்கதரிசியானவரா?' என்று வினவினர். அதற்கும் அவர்கள் 'இல்லை' என்று விடை பகர்ந்தார்கள். (சுவிசேஷம் 119-25)

இவ்வாறு இறைவன் மூஸா (அலை) அவர்களுக்கு அறிவித்த அந்தத் தீர்க்கதரிசியானவரை யூதர்கள் எதிர் பார்த்த வண்ணம் இருந்தார்கள். தாம் அந்தத் தீர்க்கதரிசி

---

வேன்" என்ற இறை செய்தியும் பொறிக்கப்பட்டுள்ளது. இங்கு 'ஷலோம்' என்று கூறப்படுவது இஸ்லாத்தையேயன்றி வேறில்லை.

சால்டியன்கள் பைத்துல் முகத்தஸ் பள்ளிவாயிலை எரித்துச் சாம்பராக்கி பனீ இஸ்ராயீல்களைச் சிறை செய்து எழுபது ஆண்டுகள் அடிமைகளாக வைத்து விட்டுப் பின்னர் அவர்களுக்கு உரிமை அளித்து ஜெரூஸலம் திரும்ப அனுமதியளித்த பொழுது அவர்கள் சுலைமான் (அலை) அவர்கள் நிர்மாணித்த பள்ளிக்கு மீண்டும் கடைக்கா லிட்டக்கால் இளைஞர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அப்பொழுது அதனைத் தம் கண்ணால் முன்னர் கண்டிருந்த வயோதிகர்கள் ஆற்றொணாத் துக்கத்தால் அழுது கண்ணீர் வடித்தபொழுது அக்காலை வாழ்ந்து வந்த ஹக்காய் என்ற தீர்க்கதரிசிக்கு இந்நன்மாராயத்தை இறைவன் அனுப்பி னான் என்று பைபிள் கூறுகிறது.

ஈஸா (அலை) அவர்கள் பெரிக்லிட் என்ற பெருமா னார் (ஸல்) அவர்களைப் பற்றிக் கூறும் பொழுது அவர் சத்திய ஆவியென்றும் சத்தியத்தைப் பற்றிச் சான்று பகர்



அல்லர் என்று கூறிய யஹ்யா (அலை) அவர்கள் "அவர் எனக்குப் பின் வருவார். நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். அவர் பரிசுத்த ஆவி யினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். அவர் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப் பார். தூற்றுக் கூடை அவர் கையிலிருக்கிறது. அவர் தம் களத்தை நன்றாய் விளக்கி, தம் கோதுமைக் களஞ்சியத்திற் சேர்ப்பார். அவர் என்னும் வல்லவர். அவருடைய அக்கினி அவியாது. அவருடைய பாதரட்சைகளைச் சுமப்பதற்குக் கூட நான் பாத்தியன் அல்லன்" என்று கூறினர்.

பைபிளின் புதிய ஏற்பாட்டின் ஒரு பகுதியாக ஸெண்ட்பர்னபாஸ் என்பவரின் சுவிசேஷம் ஒன்றுள்ளது. ஆனால் அதனைக் கிறிஸ்துவர்கள் ஏற்றுக் கொள்வதே இல்லை. எம்பெருமானார் (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பேயே அதனைக் கிறிஸ்தவர் களின் மகாசபை தவறானது என்று தீர்ப்பளித்து விட்டது. காரணம், அதில் ஈஸா (அலை) அவர்களை ஒரு நபியே யன்றி வேறில்லை என்றும் எம்பெருமானாரின் வரவைப் பற்றியும் எவ்வித ஐயத்திற்கும் இடமில்லாமல் தெளிவாகக்

---

வார் என்றும் கூறியுள்ளார்கள். ஆம்! சத்திய ஆவியாகிய எம்பெருமானார் (ஸல்) அவர்கள் வேதங்களில் யூதர்களும் கிறிஸ்தவர்களும் செய்த திருத்தங்களையெல்லாம் வெளிப் படுத்தி மர்யம் (அலை) அவர்களின் கற்பைப் பற்றியும் ஈஸா (அலை) அவர்களின் பிறப்பைப் பற்றியும் அவ்விரு இனத்த வரும் கற்பித்திருந்த மாசைத் துடைத்து அவர்களை மாண் புறச் செய்தனர். மேலும் லூத் (அலை) அவர்களைப் பற்றி யும் சுலைமான் (அலை) அவர்களைப் பற்றியும் இன்னும் பல நபிமார்களைப் பற்றியும் அவர்கள் கூறிய அபவாதங் களை நீக்கி அவர்களையெல்லாம் மாண்புறச் செய்ததோடு அல்லையோ, நபிமார்களையோ இறைவன் எனக் கருதி வணங்கக் கூடாது என்றும் அல்லாஹ் ஒருவனென்றும் அவனையே வணங்க வேண்டும் என்றும் சத்தியப் பிரச்சாரம் செய்தார்கள்.

குறிப்பிடப்பட்டிருப்பதுதான். யஹ்யா (அலை) அவர்கள் கூறியதாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன்னறி விப்பு பர்னபாஸின் சுவிசேஷத்தில் ஈஸா (அலை) அவர்கள் கூறியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அதில் பின் வரும் செய்திகளும் பொறிக்கப்பட்டுள்ளன.

“அவ்விதமாயின் அந்தத் தேற்றரவாளர் எவ்வாறு அழைக்கப் பெறுவார்? அவரின் வரவு பற்றி என்னவென்ன அறிகுறிகள் தோன்றும்?” என்று மத குருக்கள் வினவினர்.

ஏசு பதில் கூறினார்: “தேற்றரவாளரின் பெயர் புகழுக்குரியவர் என்பதாகும். அப்பெயரை இறைவனே அவருடைய ஆன்மாவைப் படைத்து அதனை விண்ணுலக மகத்துவத்தின் நடுவே வைத்தபொழுது அவருக்கு வழங்கினான். அப்பொழுது இறைவன் அவரை நோக்கி, “முஹம்மதே! பொறுத்திரும். உமக்காக வேண்டி நான் சுவனத்தைப் படைப்பேன் உலகத்தைப் படைப்பேன். இன்னும் அதிகமதிகமான படைப்புகளை படைப்பேன். அவற்றிற்கு உம்மை அன்பளிப்புச் செய்வேன். உம்மை ஆசீர்வதிப்பவர்களை நானும் ஆசீர்வதிப்பேன். உம்மைச் சபிப்பவர்களை நானும் சபிப்பேன். நான் உம்மை உலகிற்கு அனுப்பும் பொழுது நான் உம்மை மோட்சம் நல்கும் தூதுவராக அனுப்பி வைப்பேன். உம் சொல் உண்மையானதாய் இருக்கும். வானம், பூமி ஆகியவை தவறி விடினும் உம்முடைய மார்க்கம் ஒரு போதும் தவறி விடாது” என்று கூறினான்.

“அவருடைய புனிதமான பெயர் முஹம்மத் என்பதாகும்.”

அப்பொழுது அங்கு கூடியிருந்தோர் உரத்த குரல் எழுப்பி, “இறைவனே! உன்னுடைய (அந்தத்) தூதுவரை அனுப்பிவை. முஹம்மதே! உலகம் உய்ய விரைவில் வருவீராக!” என்று வேண்டினர். *

* வியன்னாவிலுள்ள அரசாங்க நூல் நிலையத்திலுள்ள பர்னபாஸ் சுவிசேஷத்தில் இத்தாலிய மொழி பெயர்ப்பிலிருந்து ஆங்கிலத்தில் 1907-ஆம் ஆண்டில் மொழி பெயர்க்கப்பட்டதிலிருந்து இது எழுதப்பட்டது.



“எச்சரிக்கை செய்பவர் (அதாவது நபி) அனுப்பப் பெறாத எந்த இனத்தவரும் இல்லை” (35:24) என்றும், “ஒவ்வோர் இனத்திற்கும் ஒரு தூதுவர் அனுப்பப் பெற்றார்” (10:47) என்றும், “உமக்கு முன்னால் நாம் அனுப்பிய தூதுவர்களைப் பற்றி நாம் உமக்கு அறிவித்தும் உள்ளோம்; அறிவிக்காமலும் உள்ளோம்” (4:164) என்றும் இறைவன் தன் திருமறையில் கூறியதற்கேற்ப இறைவன் பற்பல நாடுகளுக்கும் பல்வேறு தூதுவர்களையும் அவர்களுக்குத் திருமறைகளையும் அனுப்பி வைத்தான். அவற்றில் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் வரவைப் பற்றி முன்னறிவிப்பும் செய்து வந்தான். அவை பிற்காலத்தில் சுயநலமிகளால் தங்களுக்கேற்ற வண்ணம் திருத்தியும் மாற்றியும் அமைக்கப்பட்டன. எனினும் உண்மையை அவர்களால் மறைக்க இயலவில்லை.

பார்ஸிகளின் திருமறை இரண்டு பிரிவுகளாக உள்ளது. அவற்றில் முதல் பிரிவு ‘தஸாத்திர்’ என்றும் இரண்டாம் பிரிவு ‘ஸெண்ட் அவஸ்தா’ என்றும் அழைக்கப்படுகிறது. அதில் முதல் பிரிவு 14-ஆம் அத்தியாயத்தில் இறுதி மாநபியாம் எம்பெருமானார் (ஸல்) அவர்களைப் பற்றிப் பின்வருமாறு முன்னறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது:

“பார்ஸிகள் ஒழுக்கத்தில் இழியும் பொழுது அரேபியாவில் ஒரு மனிதர் பிறப்பார். அவரைப் பின்பற்றுவோர் அவர்களின் (பார்ஸிகளின்) அரசாங்கம், மதம் ஆகிய அனைத்தையும் நிலை குலையச் செய்வர். பாரஸீகத்தின் தருக்கு மிகுந்த வல்லபம் உடையவர்களெல்லாம் வெற்றி கொள்ளப்படுவார்கள். உருவச் சிலைகள் பல வைக்கப்பட்டிருந்த (இறை) இல்லத்திலிருந்து அச்சிலைகள் அப்புறப்படுத்தப்படும். அதை நோக்கி மக்கள் தங்களின் வணக்கங்களை நிகழ்த்துவர். பார்ஸிகளுடையவும் தாக்குகளுடையவும் பால்குகளுடையவும் நகரங்களையும் அதைச் சூழவுள்ள பெரிய இடங்களையும் அவரைப் பின்பற்றுவோர் கைப்பற்றுவார்கள். மக்கள் ஒருவரை மற்றொருவர் துன்பத்திற்குள்ளாக்கிக் கொள்வார்கள். பாரஸீகத்தின் அறிவாளர்களும் ஏனையோரும் அவரைப் பின்பற்றியவர்களுடன் இணைந்து விடுவார்கள்.”

பௌத்தர்களின் வேதத்திலும் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் வரவு பற்றிப் பின்வருமாறு முன்னறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது.

ஆனந்தா, புனிதரை (அதாவது புத்தரை) நோக்கி, "தாங்கள் சென்றபின் எங்களுக்கு அறவுரை பகர்பவர்யார்?" என்று வினவினார்.

அதற்குப் புனிதர் கூறினார், "இவ்வுலகிற்கு அனுப்பப் பட்ட முதல் புத்தர் நானல்லன். இறுதி புத்தரும் நானாக இருக்கப் போவதில்லை. காலக்கிரமத்தில் இவ்வுலகில் மற்றொரு புத்தர் தோன்றுவார். அவர் புனிதர். உன்னதமான விளக்கம் உள்ளவர்; அறிவு வாய்க்கப் பெற்றவர்; அழகு சால் நற்பண்புகளுள்ளவர். உலகை நன்கு விளங்கியவர், மனிதர்களின் நிகரற்ற தலைவர். மனிதர்களுடையவும் அமரர்களுடையவும் எஜமானர். நான் உங்களுக்குப் போதித்த அந்த நிரந்தரமான உண்மைகளையே அவர் உங்களுக்குப் போதிப்பார். அவர் தம்முடைய மதத்தைப் போதிப்பார். அதுவோ அதன் மூலத்திலும் மாண்புடையது. உச்சத்திலும் மாண்புடையது. குறிக்கோளிலும் மாண்புடையதாகும். நான் இப்பொழுது உங்களுக்குப் போதிப்பது போன்ற சம்பூரணமான புனித மார்க்கத்தையே போதிப்பார். அவரைப் பின்பற்றுவோர் பல்லாயிரக் கணக்கில் இருப்பர். என்னைப் பின்பற்றுபவரோ பல நூறு பேர்கள்தாம்."

"அவரை நாங்கள் எவ்வாறு அறிவது?" என்று வினவினார் ஆனந்தா.

அதற்குப் புனிதர், "அவருடைய பெயர் மைத்ரேயா (அருட்கொடை, புனித மிகுந்தவர்) என்றிருக்கும்" என இயம்பினார்.

புத்தர் கூறிய அந்த மைத்ரேயா எம்பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்களேயன்றி வேறில்லை.

இந்துக்களின் புராணமாகிய பவிஷ்ய புராணம் பருவம் - 3, கண்டம்-3, அத்தியாயம்-3, சுலோகம்-5-8 இல் எம்பெருமானார் (ஸல்) அவர்களைப் பற்றிய முன்னறிவிப்பு அவர்களின் அழகுசால் திருப்பெயர் முஹம்மத் என்பதுடன் தெளிவாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஆர்ய சமாஜிகள் இப்புராணத்தை ஆதாரப் பூர்வமானதாக ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் சநாதனிகளோ இதனை ஆதாரப் பூர்வமான புராணமென்றே ஏற்றுக் கொள்கிறார்கள்.



அதிலே என்ன கூறப்பட்டுள்ளது என்பதைப் பார்ப்போம்:

"அப்பொழுது கல்வியறிவில்லாத (உம்மி) ஒருவர் ஆசான் (நபி) என்ற பட்டத்துடனும் முஹம்மத் என்ற பெயருடனும் தம் தோழர்களுடன் வந்தார். ராஜா (போஜ மகாராஜா தம் கனவில்) அரபு நாட்டினரான அந்த மகா தேவரை கங்கை நீராலும் பசுவின் ஐந்து பொருள்களாலும் கழுவி, சந்தனம் பூசி வழிப்பாடு செய்தார் (பின் வருமாறு) "அரபு நாட்டவரே! புனித மிகு அதிபரே! உமக்கு என்னுடைய வணக்கம். உலகத்திலுள்ள எல்லாத் தீமைகளையும் ஒழிக்க வழி வகைகளைக் கண்டு பிடித்தவரே! கல்வியறிவில்லாதவரிடையே தோன்றிய புனிதரே! பாவமற்றவரே! சத்திய ஆவியானவரே! சம்பூரண எஜமானரே! உமக்கு என் வணக்கம். உம் பாதங்களில் என்னை ஏற்றுக் கொள்வீராக!"

மேலும் அதர்வ வேதத்தில் "மக்களே! இதனை நன்றாகக் கவனியுங்கள், புகழுக்குரியவர் (முஹம்மத்) மக்களிடையே தோன்றுவார்."

"வலசை கிளம்பிய அவரை 60090 எதிரிகளிலிருந்து நாம் நம்முடைய பாதுகாப்பில் எடுத்துக் கொண்டோம். அவருடைய வாகனமோ இருபது ஆண், பெண் ஒட்டகைகளாகும். அவருடைய தகுதியோ வான் முகட்டை எட்டிப் பிடித்து அதனையும் அவருக்குக் கீழாக்கிவிடும். அவர் யாமரிஷிக்கு நூற்றுக்கணக்கான பொற்காசுகளையும், பத்து வட்டங்களையும், முன்னூறு அரபிக் குதிரைகளையும், பதினாயிரம் பசுக்களையும் கொடுப்பார்."

(அதர்வ வேதம், காண்டம்-20, சுக்தா-127, மந்த்ரா-1-3)

இவ்வாறு பற்பல நபிமார்களாலும் மறைகளாலும் முன்னறிவிப்புச் செய்யப்பட்ட இறுதித் தீர்க்கதரிசியான பெரிக்லிட் தோன்றப் போவதை அறிந்த கிறிஸ்தவர்களில் சிலர் தாங்களே அவர்களைப் பின்பற்றுபவர்களில் முதல்வராக இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர்கள் எங்குத் தோன்றப் போகிறார்கள், எங்குத் தோன்றப் போகிறார்கள் என்று ஏங்கித் தவித்துத் தங்களிடையேயுள்ள அறிஞர்களிடம் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். கிறிஸ்துவ சகாப்தம்·இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்த மண்டேனஸ் என்பவர்தாம் பெரிக்லிட் என்று சிலர் தவறாக எண்ணி அவரைப் பின்பற்றலாயினர். அவரும் அவ்வாறே பாவனை செய்து அவர்களை வழி கெடுத்து விட்டு மாய்ந்தொழிந்தார்.

சில யூதக் கிளையினர், அந்த இறுதி மாநபி கற்களடர்ந்த இரு பூமிகளின் இடையே பேரீச்ச மரங்களால் சூழப்பெற்ற ஒரு சிற்றூருக்கு வருகை தந்து அதனையே தம்முடைய இருப்பிடமாகவும் அடக்க இடமாகவும் ஆக்கிக் கொள்வார் என்பதை அறிஞர் மூலமாக அறிந்து தேடித் திரிந்தனர். அவர்கள் தைமாஉ என்ற ஊரை அடைந்ததும் அங்குப் பேரீச்ச மரங்கள் அடர்ந்து வளர்த்திருப்பதைக் கண்டு அதுவே அந்த இறுதி மாநபி குடியேறும் இடமாக இருக்க வேண்டும் என்று எண்ணி அங்கேயே தங்கி விட்டனர். மற்றும் சிலர் கைபரில் பேரீச்சம் சோலைகள் நிறைந்திருப்பதைக் கண்டு அங்குக் குடியேறினர். வேறு சிலர் யத்ரிபுக்கு வந்த பொழுது அதுவே இறுதி மாநபி குடியேறும் புனித நகராக இருக்கவேண்டுமென்று எண்ணி அங்கேயே தங்கி வாழத் துவங்கினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் தோன்றுவதற்கு ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகளுக்கு முன் யமன் நாட்டை ஆண்டு வந்த துப்பவு என்னும் மன்னர் மக்கா வந்த பொழுது அங்கு வாழ்ந்து வந்த மக்கள் தமக்கு மரியாதை செய்யாததைக் கண்டு வெகுண்டு கஃபாவை இடித்துத் தள்ள எண்ணியக் கால் தீரா நோய் ஒன்றுக்கு ஆளானார்



அவர். பின்னர் அறிஞர்களின் ஆலோசனையின் பேரில் அவர் கஃபாவின் இறைவன் பால் மன்னிப்புக் கோர அவர் நோய் நீங்கப் பெற்றார். அது கண்டு பெரிதும் மகிழ்ந்த அவர் இறைவனுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு கஃபாவிற்கு முதன் முதலாகப் போர்வை போர்த்தினார்.

இதன் பின் அவர் தம் யமன் நாடு திரும்பியக்கால் வழியில் இரண்டாயிரம் யூத ரப்பிகளைச் சந்தித்தார். அவர்கள் அவரிடம் இறுதி மாநபியின் வரவைப் பற்றி எடுத்துரைத்தார்கள். அவர்கள் குடியேறும் இடத்தை அந்த யூத ரப்பிகள் மூலமாக அறிந்து அவர்களில் நானூறு பேர்களுடன் யத்ரிப் சென்று குடியேறி அந்த இறுதி மாநபியின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தார். வெகு நாட்கள் காத்திருந்தும் அவர்கள் வராமல் போகவே அவர் அந்த யூத ரப்பிகளை அங்கு வாழுமாறும் இறுதி மாநபியின் அவர்களிடம் தம் மடலைக் கொடுக்குமாறும் கூறி விட்டுச் சென்றார். அந்த மடல் இறுதியாக அந்த யூத ரப்பிகளின் வழித்தோன்றலாகிய அபூ ஐயூப் அன்ஸாரியின் கையில் வந்தது. துப்பவு மன்னர் தம் மூதாதையருக்கு நிர்மாணித்துக் கொடுத்த அதே வீட்டில் அவர் வாழ்ந்து வந்தார்.* பெருமானார் (ஸல்) அவர்கள் ஏறி வந்த அல்கஸ்வா என்ற ஒட்டகை அவரின் வீட்டின் முன் வந்து அமர்ந்ததும், அவர் பெருமானார் (ஸல்) அவர்களை அன்போடு வரவேற்று உள்ளே அழைத்துச் சென்று உபசரித்தார். அப்பொழுது அவர் அம்மடலைப் பெருமானார் (ஸல்) அவர்களிடம் கொடுத்து அது பற்றிய விவரத்தைக் கூறினார். அதிலே,

"துப்பவுவாகிய நான் இறுதி மாநபிக்கு எழுதிக் கொள்வது. தங்களின் வரவை எதிர்பார்த்து நெடுநாட்களாக நான் இங்குக் காத்திருந்தும் தாங்கள் வராததால் நான் என் நாடு செல்கின்றேன். நான் இறைவன் ஒருவன்

* அந்த வீடு இப்பொழுதும் அதே நிலையில் மதீனாவில் உள்ளது. வாயலில், 'இது அபூ ஐயூப் அன்ஸாரியின் வீடு' என்று அரபியில் பொறிக்கப்பட்டுள்ளது.

என்றும் தாங்கள் இறுதி மாநபி என்றும் ஏற்றுக் கொள்கிறேன். தாங்கள் எனக்காக மறுமையில் இறைவனிடம் பரிந்துரைக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்'' என்று எழுதப்பட்டிருந்தது.

இவ்வாறு நபிமார்களெல்லாம் முன்னறிவிப்புச் செய்ய அது கேட்டு இறுதி மாநபியின் வரவை எதிர் பார்த்துப் பலர் காத்துக் கொண்டிருந்தார்கள். காத்துக் கொண்டிருந்ததோடல்லாது தம் மக்களே அந்த இறுதி மாநபியாக இருக்க வேண்டும் என்ற விருப்பத்துடன் தம் மக்களுக்கு முஹம்மத் என்னும் அழகு சால் திருப் பெயரிட்டு அழைத்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் இறைவனோ தான் விரும்பியவரின் மணி வயிற்றிலே அந்த இறுதி மாநபியைத் தோற்றுவிக்கும் நோக்குடன் இஸ்மாயீல் (அலை) அவர்களின் வழியிலே நஜர், மாலிக், பெஹ்ர், காலிப், லுவை, காஅப், முர்ரா, குஸை, அப்து முனாப், ஹாஷிம் ஆகியோர் வழியாக அந்த நூரெ முஹம்மதிய்யாவைக் கொண்டு வந்து கொண்டிருந்தான். ஹாஷிமின் திருநுதலில் ஒளிர்ந்த அந்த நூரெ முஹம்மதிய்யா அதன்பின் அவரின் மகன் அப்துல் முத்தலிபின் திருநுதலில் இலங்கி இறுதியாக அவரின் அருமந்த மைந்தன் அப்துல்லாஹ்வின் திருநுதலிலே ஒளிவிட்டுச் சுடர் வீசிக் கொண்டிருந்தது.

நூரெ முஹம்மதிய்யா தம் திருநுதலில் இலங்கிக் கொண்டிருந்ததன் காரணமாக அப்துல்லாஹ் அழகெல் லாம் திரண்ட ஓர் ஆணழகராகக் காட்சி வழங்கினார். எனவே திருமணத்தின் மூலம் அவரின் கரம் பற்ற எத்தனையோ இளம் பெண்கள் ஏங்கிக் கிடந்தார்கள். மக்காவிலுள்ள பெண்கள் மட்டுமின்றி பலஸ்தீனின் ஆளுநரின் அருமைத் திருமகள் பாத்திமாவும் பலஸ்தீனிலிருந்து மக்கா வந்து அவரை மணமுடிக்கத் தவம் கிடந்தார். உறவின் முறை பாராட்டி வரகா இப்னு நௌஃபலின் உடன் பிறந்தாளும் அவரை வதுவை செய்ய வரம் வேண்டி நின்றாள்.



ஒரு நாள் அப்துல்லாஹ் தம் தந்தையுடன் மக்காவின் வீதி ஒன்றிலே சென்றக்கால் தம்மை மணமுடிக்குமாறு அவரிடம் வேண்டினாள் ஓர் ஆரணங்கு. ஆனால் அவ் வேண்டுகோளைச் சிறிதேனும் பொருட்படுத்தாது மடமட வென்று தம் தந்தையின் பின்னே நடந்து சென்ற அவ்விளவல் அன்றிரவு தம் தூரத்து உறவினர் வஹ்பின் அழகுத் திருமகள் ஆமினாவை மணமுடித்து மருவினர். அவரின் திருநுதலில் ஒளிர்ந்து கொண்டிருந்த நூரெ முஹம்மதிய்யா அந்நல்லிரவில் ஆமினாவின் மணிவயிற்றிலே நுழைந்து கருவாக ஜனித்தது.

அடுத்த நாள் அப்துல்லாஹ் அவ்வழியே தம் இல்லம் திரும்புங்கால் அவர் திரும்பி வருவார் என்ற எண்ணத் துடன் வைத்த விழி வாங்காது அவர் சென்ற வழியைப் பார்த்துக் கொண்டிருந்த அம்மங்கை அவரின் முகத்தை ஏறிட்டுப் பார்த்ததும் அதில் இதுகாறும் ஒளிர்ந்து கொண்டிருந்த பேரொளியைக் காணாது பெரிதும் ஏமாற்றமுற்று, "என்ன, உம் முகம் இவ்வாறு சோபை இழந்து கிடக்கின்றது! இதுகாறும் உம் முகத்தில் இலங்கிய பேரழகை இன்று காணேனே" என்று கூறி ஏங்கினாள்.

ஆமினாவின் மணி வயிறு நுழைந்த அந்த நூரெ முஹம்மதிய்யா கருவாக வளர்ச்சியுற்றது. கரு வளர்ந்த முதலாம் மாதம் ஆதம் (அலை) அவர்கள் ஆமினாவின் கனவில் திருத்தோற்றம் வழங்கி அவரின் மணிவயிற்றி லிருந்து இறுதி மாநபி உதிக்கப் போவதாகவும் அதற்கு அஹ்மத் என்னும் அழகுசால் திருப்பெயரிடுமாறும் கூறி மறைந்தனர். இரண்டாம் மாதத்தில் இத்ரீஸ் (அலை) அவர் களும் மூன்றாம் மாதத்தில் நூஹ் (அலை) அவர்களும் நான்காம் மாதத்தில் இப்ராஹீம் (அலை) அவர்களும், ஐந்தாம் மாதத்தில் இஸ்மாயீல் (அலை) அவர்களும், ஆறாம் மாதத்தில் மூஸா (அலை) அவர்களும், ஏழாம் மாதத்தில் தாவூத் (அலை) அவர்களும், எட்டாம் மாதத்தில் சுலைமான் (அலை) அவர்களும், ஒன்பதாம் மாதத்தில்

ஈஸா (அலை) அவர்களும் பத்தாம் மாதத்தில் அமரர்களும் ஆமினாவின் கனவில் திருத்தோற்றம் வழங்கி நன்மாராயம் நவின்று சென்றனர்.

இதனிடையே அப்துல் முத்தலிபின் கனவிலும் ஒருவர் திருத்தோற்றம் தந்து ஆமினாவின் மணி வயிறு உதிக்கப் போகும் மாமகனுக்கு முஹம்மத் என்னும் திருப் பெயரிடு மாறு கூறி மறைந்தார்.

கரு முதிர்ந்து பத்தாம் மாதம் ஆனபொழுது பிள்ளைக் கனி அமுதாக, இவ்வுலகை வாழ்விக்கும் ஏந்தலாக, இறுதி மாநபியாக எம்பொருமானார் (ஸல்) அவர்கள் தோன்றினார்கள்.

ஸல்லல்லாஹு அலா முஹம்மத்
ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.



# 2. பெருமானாரின் மாண்பு

பெருகிய கோடி சந்திரப் பிரகாசமாய்
வருமொரு பெருங்கதிர் மதியம் போலவே
கருணை வீற்றிருந்த செங்கமலக் கண்ணினைத்
திருநபி வருமவ தாரம் செப்புவாம்.

என்னும் ஆழமும் அழகும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற ஆணி முத்தனைய கவி ஒன்றால் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் பிறப்பு பற்றிய படலத்தை துவங்குகின்றார் கவிஞரேறு உமறு. இஃது ஒரு கவிஞரின் மிகைப்படக் கூடிய கருத்து என்று எண்ணுவதற்கிடமில்லை. உண்மையில் பெருமானார் (ஸல்) அவர்கள் கோடி கோடி சந்திரப் பிரகாசம் பொருந்தியவர்களாகவே விளங்கினர். இதனையே இறைவனும் "நிச்சயமாக, அல்லாஹ்விடமிருந்து 'நூர்' வந்துள்ளது" (5:12) என்று கூறினான். மேலும் பெருமானார் (ஸல்) அவர்களைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது நூருல் முபீன்' (பகிரங்கமான ஒளி) என்றும் 'ஸிராஜுன் முனீர்' (ஒளிவிளக்கு) என்றும் இயம்புகின்றான். பெருமானார் (ஸல்) அவர்களும் தங்களின் இதயத்திலும் கண்களிலும் சதையிலும் எலும்பிலும் தோலிலும் இரத்தத்திலும் தம் வலப்புறமும் இடப்புறமும் தம் முன்னும் பின்னும் ஒளியை உண்டு பண்ணுமாறும் தம்மை ஓர் ஒளி உருவாக ஆக்கியருளுமாறும் இறைஞ்சியுள்ளார்கள். அவர்கள் இவ்வாறு இறைஞ்சியது ஒளி உருவாகிய அவர்கள் தங்களை அதிகமாக ஒளி உருவாக ஆக்குமாறு மேலும் மேலும் இறைஞ் சியதேயன்றி வேறில்லை.

இதன் காரணமாகவே எம்பெருமானார் (ஸல்) அவர்கள் பேசுவதற்குத் தம் பவள வாய் திறந்தக்கால் அவர்களின் வெண்முத்தனைய பற்களிலிருந்து ஒளி சுடர் விட்டது என்று இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் வாயார்ந்து கூறுகின்றனர். இதன் காரணமாகவே அவர்களின் திருமுகம் கதிரவன் போன்று ஒளிர்ந்தது என்றும் அவர்கள் அதரம்

திறந்து சிரிப்பின் எதிரிலுள்ள சுவர்களில் ஒளி வீசியது என்றும் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் வியந்து வியந்து இயம்புகின்றார்கள்.

அவர்கள் பார்வைக்கு எலும்பும் தசையும் உடையவர்களாய்த் தோற்றம் வழங்கிய போதினும் உண்மையில் அவர்கள் பரிதியினும் மேலான ஒளி உருவினராக விளங்கினர். எனவேதான் அவர்களின் நிழல் மண்ணிலே விழவில்லை. அவர்களின் உடல் முழுவதும் ஒளி பெற்றிருந்ததனால் அவர்கள் தம் முன்னால் நடப்பதைப் பார்ப்பது போன்று பின்னால் நடப்பதையும் பார்த்தார்கள்.

ஒளி உருவினராகிய அவர்கள் ஈடிணையற்ற பேரழகராகவும் விளங்கினர்.

"பூரண மதியம் பொலிவுற்றுத் திகழும் ஓர் இரவில் நான் பூரண மதியை ஒரு முறை பார்த்தேன். எம்பெருமானார் (ஸல்) அவர்களின் அழகுத் திருமுகத்தை ஒரு முறை பார்த்தேன். முழு மதியும் வெட்கித் தலைகுனியும் வண்ணம் முஹம்மத் (ஸல்) அவர்களின் முகமதியம் பொலிவுற்றுத் திகழ்ந்தது" என்று புகழ் பாடுகிறார் நபித் தோழர் ஒருவர்.

எம்பெருமானார் (ஸல்) அவர்கள் பெரும்பாலும் தம் பார்வையைக் கீழ் நோக்கிச் செலுத்திய வண்ணம் வீற்றிருப்பதைக் கண்ட அவர்களின் ஆருயிர் நண்பர் அபூ பக்கர் (ரலி) அவர்கள் அதற்கான காரணத்தை அவர்களிடம் வினவிய பொழுது "நான் மக்களை ஏறிட்டுப் பார்ப்பின் என்னுடைய கண்களின் அழகு அவர்களை மயக்கமுறச் செய்துவிடுமோ என்று அஞ்சியே நான் அவ்வாறு செய்கின்றேன்" என்று பதிலிறுத்தனர் எம்மான்.

எம்பெருமானார் (ஸல்) அவர்களுடைய அழகுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது யூஸுஃப் (அலை) அவர்களின் அழகு பாதியளவே இருக்கும் என்று கூறும் வண்ணம் அவர்களுடைய அழகு அமைந்திருந்தது. எனவேதான் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் அன்புத் துணைவியார் ஆயிஷா (ரலி) அவர்களும்,



"எழிலார் யூஸுஃப் தம் அழகை இரு கண்ணாரச்
சுவைத்தன்று
பழமென் றெண்ணித் தம்விரலைப் பாங்காய் நறுக்கும்
பாவையரோ
எழில்சேர் எம்மான் முகம்மதுவின் அழகுத்திருமுகம்
காண்கிலவர்
எழிலில் மயங்கித் தம் இதயம் தன்னை நறுக்கி மாய்குவரே"

என்று பண் இசைத்தார்கள்.

உண்மையில் யூஸுஃப் (அலை) அவர்களின் அழகு குர்ஸின் ஒளியிலிருந்து படைக்கப்பட்டது. ஆனால் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் அழகோ அர்ஷின் ஒளியிலிருந்து படைக்கப்பட்டதாகும். யூஸுஃப் (அலை) அவர்களின் அழகு பெண்களைக் கவரக் கூடிய அழகாகும். அது குழப்பத்தை ஏற்படுத்தித் துனபத்தையும் துயரத்தையும் தரவல்லது. ஆனால் என்னுடைய அழகோ நற்பண்புகளுடன் கூடியதாகும். எனவே அது மக்களுக்கு மகிழ்ச்சியையும் அமைதியையும் அளிக்கக் கூடியதாகும் என்று எம்பெருமானார் (ஸல்) அவர்களே இயம்பியுள்ளார்கள்.

அழகு உருவினராக இருந்த அவர்களுக்கு அழகுத் திருப்பெயரை சூட்டி மகிழ்ந்தான் இறைவன். நூரே முஹம்மதிய்யாவாக இருந்த அவர்கள் அல்லாஹ்வை அதிகமதிகமாகப் புகழ்ந்தேற்றி வழுத்தி வந்ததன் காரணமாக அவர்களுக்கு 'அதிகமாகப் புகழ்பவர்' என்று பொருள்படும் அஹ்மத் என்னும் அழகுசால் திருப்பெயரைச் சூட்டுமாறு கனவின் மூலம் பணித்தான் அவன். அப்பெயரை அதற்குமுன் எவருமே அணிந்திருந்ததில்லை.

அவர்கள் அல்லாஹ்வை அதிகமதிகமாகப் புகழ்ந்து வழுத்தி வந்ததன் காரணமாக அல்லாஹ்வும் அவர்கள் மீது அளவற்ற மகிழ்ச்சியுற்று அவர்களை அதிகமதிகமாகப் புகழ்ந்தான். எனவே 'அதிகமாகப் புகழப்பட்டவர்' என்று பொருள்படும் முஹம்மத் என்னும் எழிலாரும் நற்

பெயரைச் சூட்டுமாறு கனவின் மூலம் கட்டளையிட்டான் எம்மிறைவன்.

எம்பெருமான் (ஸல்) அவர்களின் ஆஸ்தான கவிஞரான ஹஸ்ஸான் இப்னு தாபித், அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களைப் பற்றிப் புகழ்ப்பா இசைக்கும் பொழுது, 'அல்லாஹ் தன்னுடைய தூதரைக் கௌரவிப்பதற்காகத் தம் பெயரின் மூலத்திலிருந்தே அவர்களின் பெயரை உற்பத்தி செய்தான். அர்ஷில் அமர்ந்திருக்கும் அவனின் பெயர் மஹ்மூத் என்றால் இவர்களின் பெயரோ முஹம்மதாக உள்ளது' என்று பாடிப் பரவசமுறுகிறார்.

பத்ருப் போரின்போது மன்னிப்பு அருளப்பெற்ற மக்காவின் கவிஞர் அப்துல் உஸ்ஸா பெருமானார் (ஸல்) அவர்களின் மீது புகழ்ப்பா பாடுங்கால், "முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு என் செய்தியைத் தெரிவிப்பீர்களாக! உண்மையில் அவர்கள் (முஹம்மத்) அதிகமாகப் புகழப்பட்டவர்களேயாவர். அல்லாஹ்வோ புகழுக்குரியோனாக (ஹமீதாக) உள்ளான்" என்று பண்ணிசைத்தார்.

எகிப்து நாடு ஈன்றெடுத்த மாபெரும் சூஃபியாகிய இப்னு சிஃபரீத் மக்கா வந்தபொழுது கவிஞர் அல்ஹரீரி எழுதிய கண்ணியாகிய,

"எவர்க்கும் தீமை புரியார் யார்?
எல்லாப் பண்பும் அமைந்தோர் யார்?"

என்பதனைத் தனியாக அமர்ந்து பாடிக் கொண்டிருந்தக்கால்,

"எவர் பால் ஜிப்ரீல் இறங்கினரோ, எவர் பேர்
முஹம்மத் என்பதுவோ
அவரே அவரே அவரேதான், அவரே, அவரே
அவரேதாம்"

என்று திரும்பத் திரும்ப அசரீரி முழங்குவதைச் செவியுற்றார்.



இவ்வாறு எவர்க்கும் தீமை புரியாதவர்களாய் எல்லா நலன்களும் ஒருங்கே அமையப் பெற்றவர்களாய் அவர்கள் இருந்ததன் காரணமாக அவர்களுக்குத் தன் பெயரிலிருந்து பெயர் சூட்டி மாண்பளித்த இறைவன், "முஹம்மத், அஹ்மத் என்னும் பெயருடைய எவரையும் நான் நரகம் புகவிடமாட்டேன்" என்று அருண்மொழி பகர்ந்தான். (ஹதீதுல் குத்ஸி)

இது பற்றிப் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறுங்கால், "எவன் என் மீது அன்பு வைத்து என் பெயரைக் கொண்டு நற்பேறு பெறுவதற்காகத் தன் மகனுக்கு முஹம்மத் என்று பெயர் வைப்பானோ அவனும் என் பெயர் சூட்டப்பெற்ற அவனின் மகனும் சுவனம் புகுவர்" என்று திருவாய் மலர்ந்தனர். மேலும், "மறுமையில் முஹம்மத், அஹ்மத் என்னும் பெயருள்ளவர்களைக் கேள்வி, கணக்கின்றி சுவனம் புக வைக்குமாறு ஒலி பிறக்கும்" என்றும் அமுதவாய் விண்டனர்.

மேலும் அவர்கள் கூறுங்கால், "ஒருவனுக்கு மூன்று மக்கள் பிறந்து அவர்களில் ஒருவருக்கேனும் அவன் முஹம்மத் என்ற என் பெயர் சூட்டவில்லையாயின் அவன் நிச்சயமாக மடத்தனம் செய்துவிட்டான். திட்டமாக, அவன் என்னை வெறுத்து விட்டான்" என்றும் இயம்பினார்கள்.

இன்னும் அவர்கள் இயம்புங்கால், "ஒருவனின் மனைவி கருவுற்றிருக்க, அவன் தனக்குப் பிறக்கவிருக்கும் குழந்தை ஆண் குழந்தையாக இருக்க வேண்டும் என்று விரும்பின் அவன் தன் மனைவியின் வயிற்றில் கையை வைத்து, 'இக்குழந்தை ஆணாக இருப்பின் அதற்கு முஹம்மத் என்று பெயர் வைத்துவிட்டேன்' என்று சொல்லவும். அல்லாஹ்வின் பேரருளால் அது ஆண் குழந்தையாகப் பிறக்கும்" என்று மொழிந்தார்கள்.

எம்பெருமானார் (ஸல்) அவர்களிடம் பெண்ணொருத்தி வந்து, "நான் பெறும் குழந்தைகளில் ஒன்றேனும் உயிரோடு பிறக்கவில்லையே, என் செய்வேன் நாயகமே!"

என்று ஏங்கித் தவித்து அலறிய பொழுது "அம்மணி! கவலற்க. இனி நீ பெறும் குழந்தைக்கு முஹம்மத் என்னும் பெயர் வைப்பதாக அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு உறுதி எடுத்துக் கொள்" என்று திருவுளமாயினர் ஏந்தல். அவ்வாறே அவளும் செய்ய அழகே உருவெடுத்தாற் போன்று ஆண் குழந்தை ஒன்று பிறந்ததென வரலாறு சான்று பகர்ந்து கொண்டிருக்கிறது.

"ஒருவருடைய வீட்டில் வாழ்பவர்களில் மூவருக்கு என் பெயராகிய முஹம்மத் என்பது சூட்டப்பட்டிருப்பின் அவ்வீட்டை ஒருபோதும் துன்பம் சூழாது. என் பெயர் இருக்கிற வீட்டில் வறுமை புகாது. மக்கள் ஒரு விஷயத்தைப் பற்றி ஆலோசிக்குங்கால் அதில் முஹம்மத் என்ற பெயரையுடையவரையும் வைத்துக் கொண்டு ஆலோசனை செய்தால் அவ்வாலோசனை நன்மையாக முடிவுறும்" என்றும் பெருமானார் (ஸல்) அவர்கள் மொழிந்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களின் பெயர்களாகிய முஹம்மத், அஹ்மத் ஆகியவற்றின் மாண்பினைப் பற்றி ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் கூறும்பொழுது, "முஹம்மத், அஹ்மத்" என்று பெயர் தாங்கிய ஒருவன் மறுமையில் இறைவனின் திருமுன் நிற்குங்கால் "என்னுடைய ஹபீபின் பெயர் சூட்டப் பெற்ற நீ எனக்கு மாறு செய்வதில் நாணமுறவில்லையே" என்று இறைவன் கூறுவான். அப்பொழுது அவன் நாணித் தலைகுனிந்து, "இறைவனே! நான் உனக்கு மாறு செய்து விட்டேன்" என்று இயம்புவான். அப்பொழுது இறைவன் ஜிப்ரீலை நோக்கி, "என்னுடைய ஹபீபுடைய பெயர் தாங்கியவனை நான் நரகத்தில் வீழ்த்த நாணமுறுகிறேன். எனவே அவனைச் சுவனம் புகச் செய்யும்" என்று கூறுவான், எனக் கூறியுள்ளார்கள்.

"இறைவனிடம் சில வானவர்கள் உள்ளனர். அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களைச் சிறப்புச் செய்வதற்காக அவர்களின் திருப்பெயர் இருக்கும் வீட்டைத் தரிசிப்பதைத் தான் தங்களுடைய மாண்பாரும் வணக்கமாகக் கொண்டுள்ளனர்" என்று இப்னு யூனுஸ் (ரஹ்) அவர்கள் கூறுகின்றனர்.



தம் பெயர்களைப் பற்றிப் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறும்பொழுது "என் பெயர் தௌராத்தில் அகீகு என்றும் ஸபூரில் மாஹீ என்றும் இஞ்சீலில் அஹ்மத் என்றும் குர்ஆனில் முஹம்மத் என்றும் உள்ளது" என மொழிந்துள்ளார்கள். ஒட்டு மொத்தமாக அவர்களுக்கு ஓராயிரம் பெயர்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு ஓராயிரம் பெயர்கள் அமைந்த ஒருவர் இவ்வுலகில் எம்பெருமானர் (ஸல்) அவர்களைத் தவிர வேறு எவருமே இலர் என்றும் துணிந்து கூறுமளவுக்கு அவர்களின் மாண்பு சிறந்து விளங்குகிறது.

ஆயிரம் பெயர் பெற்ற அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வுலகில் தோன்றிய இலட்சத்து இருபத்து நாலாயிரம் நபிமார்கள் ஆற்றிய அலுவலை அதாவது உருவமற்ற ஒரே இறை வணக்கத்தை நிறைவு படுத்தி நிலை நிறுத்தினார்கள். அவர்கள் உலகில் தோன்றி இராவிடின் உலகில் ஓரிறை வணக்கம் முழுமை பெற்று நிலை நின்றிராது. ஏனெனில் அந்த ஒரு லட்சத்து இருபத்து நாலாயிரம் நபிமார்களைப் பின்பற்றியவர்கள் அனைவருடைய எண்ணிக்கையையும் ஒன்று கூட்டிப் பார்ப்பினும் ஒரு லட்சத்து இருபத்து நாலாயிரம் பெயர்கள் இருக்க மாட்டார்கள். ஏறத்தாழ ஓராயிரம் ஆண்டுகள் நூஹ் (அலை) அவர்கள் இவ்வுலகில் ஓரிறை வணக்கப் பிரச்சாரம் செய்த போதினும் அவர்களைப் பின்பற்றியவர்கள் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலர்தாம். அவர்களின் மனைவியும் மகனுமே அவர்களுக்கு மாறு செய்தார்கள். ஈஸா (அலை) அவர்களைக் காட்டிக் கொடுத்தவர் அவர்களின் மாணவர் யூதாஸ்தான். அந்தந்த நபிமார்களைப் பின்பற்றியவர்கள் அவரவர்களின் காலத்திலேயே அவர்களுக்குமாறு செய்த தோடு அவர்களுக்குப் பின் உருவத் தொழும்பில் ஈடுபட்டு அழிச்சாட்டியத்தில் ஈடுபடலாயினர். உலகமே நரகமாக மாறிக் கொண்டிருந்தது. உலகில் அல்லாஹ்வை வணங்குவது இருக்கட்டும் - அவனின் திருப்பெயரை ஜபிப்பதற்குக் கூட ஒருவரும் இல்லாத நிலை ஏற்பட்டது. அதுகண்டு, "இறைவனே!

என்னை நரகமாக்கி விடாதே" என்று இம்மண் அலறியது. "இல்லை; உன்னைச் சுவனமாக்குவதற்காக என் இறுதி மாதூதை அனுப்பி வைக்கிறேன் என்று ஆறுதல் கூறினான் இறைவன். அவ்வாறே எம்பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வுலகில் திருத்தோற்றம் வழங்கி எங்கணும் ஓரிறை வணக்கத்தைப் பரத்தி அதனை உலகுள்ளளவும் நிலைத்து நிற்கும் வண்ணம் நிறுவி நிறைவு செய்தார்கள். எனவேதான் மௌலானா ரூமியும், "நூறு என்ற எண்ணின் கீழ் தொண்ணூற்றொன்பது எண்கள் அடங்கி இருப்பது போன்று அஹ்மத் என்னும் பெயருக்குள்ளே இலட்சத்து இருபத்து நாலாயிரம் நபிமார்களும் அடங்கியுள்ளனர்" என்ற கருத்தை,

> நாமெ அஹ்மத் நாமெ ஜூம்லா அம்பியாஸ்த்
> சூன்கெஸத்(து) ஆமத் நவத்ஹம் ஃபர்ஷிமாஸ்த்

என்ற கண்ணியில் அமைத்துப் பண்ணிசைக்கின்றார்கள். இதனையே,

> ஒரு நூறு என்றவுடன் ஒன்பது சேர் தொண்ணூறும்
> ஒரு சேர அதன் கீழ் ஒன்றடங்கி விடுவது போல்
> பெருமைமிகு அஹ்மதெனும் பேராளர் பேர் மொழியின்
> அருள் நபிமார் லட்சத்து நாலாயிரர் அடங்குவரே

என்று நாம் பைந்தமிழ்க் கவி பாடிப் பரவசமுறுகின்றோம். மேலும் நாம் இறைவனை நோக்கி,

> "எத்தனையோ நபிமாரை விண்மீன் போல் நீ அனுப்பி
> வைத்தபோதும்
> இத்தரையில் ஒளிபாய்ச்சி இருட்படலம் தனைச் சிய்க்க
> இயலவில்லை
> முந்தனைய முஹம்மதுவாம் முழுமதிநேர் எம்பெருமான்
> ஈங்குற்றபோது
> எத்திசையும் இருள் அறுத்து உன் வணக்கம் தனைநிறுவி
> உய்வித்தாரே"

என்று கூறிப் பெருமை பாராட்டி மகிழ்கின்றோம். எம்பெருமானார் (ஸல்) அவர்களைக் கொண்டு நாம் பெருமை



பாராட்டுவது இறைவன் நமக்கு அளித்த மாபெரும் பேறல்லவா?

இனிமேல் அவ்வலுவலை ஆற்ற நபிமார்களை அனுப்பத் தேவையில்லை; அவ்வலுவல் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மூலம் முழுமை பெற்று முத்திரை வைக்கப் பட்டுவிட்டது என்பதை உணர்த்து முகத்தான் அவர்களை 'ஹாத்த முன் நபிய்யீன்' (நபிமார்களின் முத்திரை) என்று கூறி இறைவனும் கௌரவித்தான். அதற்கு அடையாளமாக அவர்களின் முதுகில் இரு புயங்களுக்கும் இடையில் புறா முட்டை அளவு ஒரு சதைக் கட்டியை உண்டு பண்ணி அதைச் சூழ முடிகள் முளைத்திருக்குமாறும் செய்தான். அதன் உட்பொருளை உணராத அபூரிம்தா என்ற மருத்துவர் அதனை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றி விடுவதாகக் கூறியபொழுது, "அதனை மாபெரும் மருத்துவனல்லவா அங்கு வைத்துள்ளான்" என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினர்.

ஹாத்தமுன் நபிய்யீன் என்பதற்கு நபிமார்களின் இறுதி அல்லது நபிமார்களின் உச்சம் என்றும் பொருள் கூறலாம். விலாயத்தின் முடிவு நுபுவ்வத்தின் துவக்கமாக இருப்பது போன்று நுபுவ்வத்தின் முடிவு அதாவது உச்சம் எம்பெருமானார் (ஸல்) அர்ஷிற்குச் சென்று இறைவனை தரிசித்து வந்ததாக உள்ளது. இப்பேற்றினை வேறு எந்த நபியும் பெறவில்லையாதலால் எம்பெருமானர் (ஸல்) அவர்கள் 'ஹாத்தமுன் நபிய்யீன்' என்று அழைக்கப் பெற்றனர் என்றும் சிலர் கூறுகிறார்கள்.

ஓரிறை வணக்கத்தை நிறைவு செய்ய எம்பெருமானார் (ஸல்) அவர்களை இவ்வுலகிற்கு அனுப்பி வைத்த இறைவன் அவர்களுக்கு அப்பணியை நிறைவுற செய்வதற்கான தகுதியையும் வழங்கி அவர்களை நிறைமனிதராக, 'இன் ஸானெ காமில்' ஆகவும் ஆக்குவித்தான். அவர்களுக்கு முன் போந்த மூஸா (அலை) அவர்களோ 'ஜலாலிய்யத்' (வன்மை) மிகுந்தவராக விளங்கினர். எனவே ஒருவன் செய்த தீமைக்கு அவன் மீது பழி வாங்குவதே வாழ்வின் அறநெறி என்று அவர்கள் போதித்தார்கள். எனவே

கண்ணுக்கு கண், காலுக்கு கால், கைக்குக் கை பழி வாங்க வேண்டும் என்பது அவர்கள் போதித்த நெறி நீதியாக இருந்தது. அவர்களுக்குப் பின்னர் போந்த ஈஸா (அலை) அவர்களோ ஜமாலியத் (மென்மை) மிகுந்தவராக இலங்கினர். எனவேதான் "ஒருவன் உன்னை ஒரு கன்னத்தில் அறைந்தால் அவனை மறு கன்னத்தில்அறைந்து விடாதே. அதற்கு மாறாக அவனுக்கு உன்னுடைய மறு கன்னத்தைக் காட்டு" என்று அவர்கள் போதனை புரிந்தனர். ஆனால் எம்பெருமானார் (ஸல்) அவர்களோ, 'கமாலிய்யத்' (சம்பூரணத்தன்மை) மிகுந்தவர்களாயிருந்தமையின், "ஒருவன் உனக்குச் செய்த தீமைக்குப் பழி வாங்க உனக்கு உரிமை இருந்தபோதிலும் பழி வாங்கிவிடாதே. அதற்காக அவனுக்கு மறு கன்னத்தையும் காட்டாதே. அதற்குப் பதிலாக அவனைப் பெருமனத்துடன் மன்னித்துவிடு" என்று அறபோதம் வழங்கினர். மூஸா (அலை) அவர்கள் காட்டிய வழி ஒரு துருவம் என்றால் ஈஸா (அலை) அவர்கள் காட்டிய வழியோ மறு துருவமாக உள்ளது. இரண்டிற்கும் இடையே எம்பெருமானார் (ஸல்) அவர்கள் காட்டிய வழியோ நடுவழியாக, எல்லாரும் பின் பற்றத் தகுந்த நெறிமுறையாக, அருள் நெறியாக உள்ளது. எம்பெருமானார் (ஸல்) அவர்களின் இத்துணை சிறந்த மாண்பினைக் கண்டு,

மூஸாவோ ஜலாலியத் மிகுந்தவராய்த் துலங்கினரே
ஈஸாவோ ஜமாலியத் மயமாகி இலங்கினரால்
ஜமாலுடனே ஜலாலும்சேர் சம்பூர்ண மானிடராய்
கமாலாகக் காத்தமுல் அன்பியா தோன்றினரே.
மூஸாவோ ஜலாலதனால் பழிக்குப் பழி என மொழிந்தார்
ஈஸாவோ ஜமாலதனால் இருகன்னம் காட்டென்றார்
கமாலதனால் எம்பெருமான் பழிவாங்கும் உரிமையினும்
சமாதானம் தனைவிழைந்து மன்னித்தல் சால்பென்றார்.
மூஸாவின் மார்க்கமது ஒருதுருவம் என்றாலே
ஈஸாவின் மார்க்கமது மறுதுருவம் என்பேமால்
சகமுழுதும் ஏற்றிடு நல் சன்மார்க்க மாகியதை
முஹம்மதுதான் போதித்து மெய்வழியைக் காட்டினரே



என்று நம்மை அறியாமல் நாம் பண்ணிசைத்து மகிழ்கின்றோம்.

எம்பெருமானார் (ஸல்) அவர்கள் சம்பூரண மானிடராய் இருந்து ஒரே இறை வணக்கத்தை இவ்வுலகில் முழுமைப்படுத்தியதன் காரணமாகவே இறுதி ஹஜ்ஜின் போது, "நாம் இன்று உம்முடைய மார்க்கத்தை நிறைவு செய்தோம்" என்ற அருட் செய்தியை இறைவன் அவர்களுக்கு அனுப்பிவைத்தான். அது ஒரு வெள்ளிக்கிழமையாக இருந்தது. பிற்காலத்தில் ஒரு யூதர், உமர் (ரலி) அவர்களிடம் கூறும் பொழுது "இத்தகைய அருட்செய்தி வந்த நாள் எங்களின் வரலாற்றில் இடம் பெற்றிருப்பின் நாங்கள் அதனை ஒரு பெருநாளாகக் கொண்டாடியிருப்போம்" என்று இயம்பியதிலிருந்து அத்தகைய பாக்கியம் பெற்ற நாள் அவர்களின் வரலாற்றில் இடம் பெறவில்லை என்பது நன்கு தெளிவாகிறது. அத்தகைய பாக்கியம் பெற்ற நாள் ஹாத்தமுன் நபிய்யீனாகிய எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கே இறைவனால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் பொழுது வேறு எந்த நபியின் வாழ்வில் தோன்றியிருக்கும்?

ஒரே இறைவணக்கம் எம்பெருமானார் (ஸல்) அவர்களால் நிறைவுற்றுவிட்டதால் அதன்பின் உலகில் தோன்றும் மக்கள் அனைவரும் நேர்வழி பெறும் பொருட்டு எம்பெருமானார் (ஸல்) அவர்களையே பின்பற்ற வேண்டும் என்பது நன்கு பெறப்படுகிறது. எனவேதான் தம் தோழர் ஒருவர் தௌராத்தை ஓதிக் கொண்டிருப்பதைக் கண்ட எம்பெருமானார் (ஸல்) அவர்களின் கண்கள் கொவ்வையங் கனி போல் சிவந்தனவென்றும், 'இக்காலை மூஸா உயிரோடிருந்த போதினும் அவர் என்னையே பின் பற்றி இருப்பார்' என்று அவர்கள் கூறியதாகவும் வரலாறு உள்ளது. எனவே தான் உலக முடிவு நாள் அண்மும் பொழுது விண்ணிலிருந்து ஈஸா (அலை) அவர்கள் இறங்குங்கால் அவர்கள் நபியாக வரமாட்டார்கள் என்றும் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் உம்மத்தாகவே இவ்வுலகிற்கு வந்து சிலுவைகளை உடைத்தெறிந்து தீனுல் இஸ்லாத்தை இவ்வுலகில் பரப்புவார்களென்றும் மற்றொரு வரலாறு எடுத்தியம்புகிறது.

திருக்குர்ஆனில் இறைவன் தன் அருள் தூதரை அழைக்கும் பொழுது, 'ஏ நபி!' என்று அழைக்காது, 'யா அய்யுஹன்னபீ' என்று மரியாதையுடன் அழைப்பதும் மேலும் அவர்களின் பெயரைக் கூறும் பொழுது மட்டும் ரஸூலல்லாஹ் என்று குறிப்பிடுவதும் மற்ற இடங்களில் 'இந்த நபி' என்று மரியாதையுடன் மொழிவதும் இறைவன் வேறு எந்த நபிக்கும் காட்டாத கௌரவமாகும். மற்ற நபிமார்களையெல்லாம் அவர்களின் பெயர் கொண்டே இறைவன் குறிப்பிடுவதும் கவனிக்கத் தக்கதாகும்.

மேலும் அவர்களைப் பற்றி இறைவன் தன் திருமறையில் கூறும்பொழுது, 'ரஹ்மத்துன்லில் ஆலமீன்-உலகங்களுக்கு அருளப்பெற்ற அருட்பெரும் கொடை' என்று பன்மையில் கூறுகின்றான். உலகத்திற்கு என்று அவன் ஒருமையில் கூறிஇருப்பின் அதன் பொருளை நாம் ஒருவாறு விளங்கிக் கொள்ளலாம். பெருமானார் (ஸல்) அவர்கள் மட்டும் இவ்வுலகில் தோன்றி இராவிடின் ஒரே வணக்கம் என்ற ஒளிவிளக்கே அணைந்தொழிந்து நாம் அனைவரும் அந்தகார இருளில் கிடந்து தத்தளித்துக் கொண்டிருப்போம்.

எம்பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வுலகில் திரு அவதாரம் செய்து உலகிற்கே ஸிராஜுன் முனீராக ஒளிவிளக்காக விளங்கி நம்மை இறை வழியில், எழில் வழியில், ஏற்றமாம் சுவன வழியில் அழைத்துச் செல்கின்றார்கள். இதறகாக நாம் அவர்களுக்குக் கோடானு கோடி ஆண்டுகள் நன்றிக் கடன் ஆற்றிய போதினும் அது கூடப் பற்றாது என்றுதான் கூற வேண்டும்.

ஆனால் இறைவன் அவர்களை 'உலகங்களுக்கு அருளப்பெற்ற அருட்கொடை' என்று பன்மையில் கூறுகின்றான். இதற்குச் சிலர், 'உலகத்திலுள்ள படைப்பினங்கள் அத்தனைக்கும்' என்று பொருள் விரிக்கின்றனர். ஆனால் இதன் உண்மையான பொருள் பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வுலகத்திற்கும் இதிலுள்ள படைப்பினங்களுக்கும் மட்டுமின்றி அகில உலகங்களுக்கும், அண்ட கோளங்க



ளுக்கும் அருட் பெரும் கொடையாக உள்ளார்கள் என்பதேயாகும். பெருமானார் (ஸல்) அவர்களில்லையேல் அவை ஒன்றும் படைக்கப்பட்டிராது என்பதனாலும் பெருமானார் (ஸல்) அவர்களின் பொருட்டால்தான் அவை அனைத்தும் படைக்கப்பட்டன என்பதனாலும் பெருமானார் (ஸல்) அவர்கள் அகிலங்கள் அனைத்திற்கும் அருளப்பெற்ற அருட் பெருங்கொடையேயன்றி வேறென்ன?

இதுமட்டுமின்றி, அவர்களை இறைவன் ரஹ்மத்துன் லில் ஆலமீன் என்று கூறியிருப்பதன் உட்பொருள் மற்றொரு வரலாற்றினாலும் நன்கு தெளிவாகத் தெரிய வருகிறது.

விண்ணேற்றத்தின் போது ஓரிடத்தில் ஒட்டகங்கள் சாரி சாரியாகச் செல்லவும், ஒட்டகங்கள் ஒவ்வொன்றின் மீதும் ஓர் ஒட்டகம் ஓட்டுபவர் அமர்ந்திருக்கவும் கண்டு, "இஃது என்ன புதுமையாக உள்ளது! இவ்வாறு எத்துணை காலம் சென்று கொண்டுள்ளது?" என்று பெருமானார் (ஸல்) அவர்கள் ஜிப்ரீல் (அலை) அவர்களிடம் வியப்புடன் வினவிய பொழுது, "எனக்கு இதுபற்றி யாதொன்றும் தெரியாது. நான் இங்கு வந்த காலத்திலிருந்து இவ்வாறு தான் சென்று கொண்டுள்ளது. தாங்கள் விரும்பின் இது பற்றி இறைவனிடமே கேளுங்கள்" என்று அவர்கள் பதிலுரைத்தார்கள்.

அவ்வாறே எம்பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவனிடம் அது பற்றி வினவ, இறை ஆணைப்படி அவ்வொட்டகங்களில் ஒன்றின்மீது இவர்ந்து சென்ற ஒட்டகம் ஓட்டுபவர் தம் ஒட்டகத்தைப் பெருமானார் (ஸல்) அவர்களின் அருகே ஓட்டிச் சென்று அதன் இரு பக்கங்களிலும் தொங்கிக் கொண்டிருந்த சுமைகளில் ஒன்றை அவிழ்த்தார். அதில் ஒரு கோளம் தென்பட்டது. அத்னைப் பெருமானார் (ஸல்) அவர்களின் திருமுன் வைத்து அதன் திறவுகோலையும் அவர்களின் கையில் கொடுக்க எம் பெருமானார் (ஸல்) அவர்கள் அதனைத் திறந்து கொண்டு உள்ளே சென்றனர். ஆங்குக் குதிரையுடன் நின்று கொண்டிருந்த வீரர் ஒருவர் எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் உரைத்து அக்குதிரையையும் அவர்களிடம் ஒப்படைத்தார். அதன்மீது இவர்ந்து சென்ற பெருமானார்

(ஸல்) அவர்கள் அங்கு நாடுகளும், நகரங்களும், காடுகளும், கழனிகளும் இருப்பதையும் அங்கு மக்கள் இறைவனைத் துதித்துக் கொண்டும் தம்மீது ஸலவாத்து ஓதிக் கொண்டும் இருப்பதையும் கண்டு பெரு வியப்பெய்தினர்.

இதிலிருந்து எண்ண முடியாக் கோளங்கள் உள்ளன; அவற்றில் மனிதர்களும் உள்ளனர்; அவர்களுக்கும் பெருமானார் (ஸல்) அவர்களே நபியாகவும் ரஸூலாகவும் உள்ளனர் என்பது நன்கு பெறப்படுகிறது. விஞ்ஞானிகளும் பிரபஞ்சத்திலுள்ள எண்ணிலடங்காக் கோளங்களில் நம் பூமி போன்று தட்ப வெப்ப நிலையைப் பெற்றுள்ள கோளங்கள் எத்தனை எத்தனையோ உள்ளனவென்றும் அவற்றிலெல்லாம் நிச்சயம் மனித உற்பத்தி தோன்றியே இருக்க வேண்டும் என்றும் அதில் மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருப்பார்கள் என்றும் இயம்புகின்றனர். அவ்விதமாயின் அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள் அகில உலகங்களுக்கும் அருளப் பெற்ற அருட்பெருங் கொடையேயன்றி வேறென்ன?

மேலும் இறைவன் எம்பெருமானார் (ஸல்) அவர்களைத் தன் அன்புத் தோழராக, அருமை நேசராக (ஹபீபாக) தேர்ந்தெடுத்தான். இதன் காரணமாகவே அவர்களுக்கு ஹபீபுல்லாஹ் என்று சிறப்புப் பெயரும் ஏற்பட்டது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு வழங்கப் பெற்ற இந்த ஹபீபுல்லாஹ் என்ற சிறப்புப் பெயர் ஆதம் (அலை) அவர்களின் சிறப்புப் பெயராகிய ஸஃபீயுல்லாஹ் என்பதைவிட நூஹ் (அலை) அவர்களின் சிறப்புப் பெயராகிய நஜீஹுல்லாஹ் என்பதைவிட இப்ராஹீம் (அலை) அவர்களின் சிறப்புப் பெயராகிய கலீலுல்லாஹ் என்பதைவிட மூஸா (அலை) அவர்களுடைய சிறப்புப் பெயராகிய கலீமுல்லாஹ் என்பதைவிட இஸ்மாயீல் (அலை) அவர்களுடைய சிறப்புப் பெயராகிய தபீஹுல்லாஹ் என்பதைவிட தாவூத் (அலை) அவர்களுடைய சிறப்புப் பெயராகிய கலீபத்துல்லாஹ் என்பதைவிட ஈஸா (அலை) அவர்களுடைய சிறப்புப் பெயராகிய ரூஹுல்லாஹ் என்பதைவிட எவ்வளவோ மாண்புடைத்ததாகும்.



இறைவன் பெருமானார் (ஸல்) அவர்களைத் தன் அன்பிற்குரிய அருள் நேசராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டதன் காரணமாகவே உஹதுப் போர்க்களத்தில் வைத்து எதிரிகளின் மீது பெருமானார் (ஸல்) அவர்கள் மண்ணை அள்ளி வீசிய பொழுது "அதனை நீர் வீசவில்லை, நாம் வீசினோம்" என்று கூறினான் இறைவன். ஹுதைபிய்யா வெளியில் பெருமானார் (ஸல்) அவர்களின் கரத்தோடு கரம் இணைத்து முஸ்லிம்கள் உறுதிப் பிரமாணம் செய்து கொடுத்த பொழுது, "உம்மிடம் உறுதிப் பிரமாணம் செய்து கொடுப்பவர்கள் அல்லாஹ்வின் மீதே உறுதிப் பிரமாணம் செய்து கொடுப்பவர்களாவர். அல்லாஹ்வின் கையே அவர்களின் கையின் மீதுள்ளது" என்றும் அருண்மொழி பகர்ந்தான் இறைவன். இத்தகு பெருமையை அவன் வேறு எந்த நபிக்கும் நல்கவில்லை; எந்த ரஸூலுக்கும் வழங்கவில்லை.

அது மட்டுமன்று, இறைவனுடன் உரையாடியவர்கள் என்று பொருள்படும் கலீமுல்லாஹ்வாகிய மூஸா (அலை) அவர்கள் தூர்ஸீனாய் மலையின் அண்மையில் ஒரு நெருப்பைக் கண்டு நெருப்பு எடுத்து வருவதற்காகச் சென்ற பொழுது இறைவன் 'தஜல்லி'யானதால் எரிந்து கொண்டிருந்த ஒரு மரத்திலிருந்து, 'மூஸாவே! நிச்சயமாக நான் தான் அல்லாஹ். நான் யாவரையும் மிகைத்தவன், யாவற்றையும் நன்கறிந்த ஞானமுடையவன்" என்று அசரீரி முழங்கியது. அதைத் தொடர்ந்து, "மூஸாவே! உம்முடைய காலணிகள் இரண்டையும் கழற்றி விடும். நிச்சயமாக, நீர் 'துவா' என்னும் தூய இடத்தில் உள்ளீர்" என்று மீண்டும் ஒலி முழங்கியது. அவ்வாறே மூஸா (அலை) அவர்கள் செய்தார்கள்.

பின்னர் இறைவனிடம் இஸ்ரவேலர்களுக்கான சட்டம் வேண்டி மூஸா (அலை) அவர்கள் பல்லாண்டுகளாக இறைஞ்ச அவர்களை தூர்ஸீனாய்க்கு வருமாறு பணித்தான் இறைவன். ஆனால் அவர்கள் அங்குச் சென்று முப்பது நாட்களும் பின்னர் இறைவன் கட்டளையிட்ட வண்ணம் மேற்கொண்டு பத்து நாட்களும் நோன்பு நோற்றபின் மூஸா

(அலை) அவர்கள் இறைவனைக் காண விழைந்தனர். 'உம் புறக்கண்ணால் என்னைக காண இயலாது' என்று இறைவன் எவ்வளவோ கூறியும் அவர்கள் கேளாததனால் ஊசியின் காதுத்துளை அளவு தன் பேரொளியைக் காட்டினான் இறைவன். அதனைத் தாங்க இயலாது தூர்ஸினாய் மலை துகள் துகளாகச் சிதறியது. மூஸா (அலை) அவர்களோ மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்து ஒரு நாள் வரைக் கிடந்தார்கள். அவர்கள் மீது இரங்கி அவர்கள் நின்று கொண்டிருந்த கல்லைக் கூடை போன்று அவர்களை மூடிக் கொள்ளுமாறு செய்து அவர்கள் கரிந்து சாம்பராகா வண்ணம் காத்தருளினான் இறைவன்.

ஆனால் இறைவன் தன் ஹபீபுக்குச் செய்த கௌரவமோ இதைவிட ஆயிரம் ஆயிரம் மடங்கு மேலானதாகும். எம்பெருமானார் (ஸல்) அவர்களுடன் இறைவனே உரையாட விரும்பி அவர்களை அர்ஷிற்கு அழைத்து வருமாறு தன் தூதுவராகிய ஜிப்ரீலை 'புராக்' என்ற வாகனத்துடன் அனுப்பி வைத்தான். பைத்துல் முகத்தஸ் பள்ளியில் வைத்து நபிமார்களுக்கெல்லாம் இமாமாக நின்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தொழவைத்தபின் அவர்களின் விண்ணேற்றம் துவங்கியது. விண்ணேற்றத்தின் போது ஒரு கட்டத்தில் வைத்து 'இறைவுன் தொழுது கொண்டுள்ளான்' என்று அவர்களுக்கு அறிவிக்கப் பட்டது. 'இறைவன் யாரைத் தொழுகின்றான்? அவனையல்லவோ எல்லோரும் தொழுகிறார்கள்?' என்று அவர்கள் வியப்புற்ற பொழுது அதன் பொருள் இறைவன் தன் அருள் நேசராகிய தம்மீது ஸலவாத்துக் கூறி தன் அருண்மாரியைப் பொழிந்து கொண்டுள்ளான் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள்.

ஸித்ரத்துல் முன்தஹா வரையில் அவர்களுடன் வந்த ஜிப்ரீல் அதற்கு மேல் தாம் விரல் அளவு கூட வர இயலாதென்றும் வரின் இறைவனின் நூரெ ஜலாலால் தாம் கரிந்து சாம்பராகி விட நேரிடும் என்றும் கூறப் பெருமானார் (ஸல்) அவர்கள் மட்டும் தன்னந்தனியராய் இது வரை யாருமே சென்றிராத பாட்டையில் அடியெடுத்து வைத்து நடந்து சென்றார்கள். அவர்கள் அர்ஷை அடைந்ததும் தங்களின் காலணிகளைக் கழற்றிய பொழுது, "காலணிகளைக் கழற்றாதீர். உம் காலணிகளால் இந்த அர்ஷ் தூய்மை பெறட்டும்" என்று கூறினான் இறைவன்.



இதன் பின் தம் அருகே வருமாறு தன் அருள் நேசரை அழைத்தான் இறைவன். அவ்விதமே எம்பெருமானார் (ஸல்) அவர்கள் செய்ய அல்லாஹ்வும் அவனின் அருள் நேசரும் மிகவும் நெருக்கமாக வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவனை அவனுடைய சிறந்த தோற்றத்தில் தங்களின் கண்களாலும் இதயத்தாலும் கண்டனர். அண்ட கோளங்களையும் மிகவும் சிறிய அளவில் அவர்களுக்குக் காட்டினான் இறைவன். மறுமை நாள் வரை நடக்கவிருப்பவை அத்தனையையும் அவர்களுக்கு அறிவித்தான் இறைவன். எந்த நபிக்கும் எந்த வானவருக்கும் அறிவிக்காத பல இரகசியங்களையெல்லாம் அவர்களுக்கு உணர்த்தினான் இறைவன்.

இறைவனைத் தரிசித்துவிட்டு எம்பெருமானார் (ஸல்) அவர்கள் திரும்பியதும் அவர்கள் மயக்க நிலையில் வராது மிகவும் சோபிதமாக வருவதைக் கண்டதும், மூஸா (அலை) அவர்களுக்கு வியப்பு, வியப்பாக இருந்தது. எனவேதான் தொழுகையைக் குறைத்து வரம்பெற்று வருமாறு கூறி அவர்களைப் பல தடவை இறைவனிடம் அனுப்பி வைத்தார்கள் மூஸா. ஆனால் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவனைத் தரிசித்து விட்டு மீண்டும் மீண்டும் அதிக சோபிதமாக வருவதைக் கண்டு மூஸா (அலை) அவர்களின் வியப்போ பன்மடங்கு அதிகமாகியது. ஊசியின் காதளவு இறைவனின் பேரொளி பாயப் பெற்றதன் காரணமாக தூர்ஸினாய் மலைத் துகள் துகளாக ஆகவும் தாம் ஒரு நாள் வரை மூர்ச்சையுற்றுக் கிடக்கவும் செய்ய இவர்கள் பல தடவை இறைவனை நேருக்கு நேராகத் தரிசித்து வந்தும் சோபிதமாய்ப் பொலிவுடன் திரும்புவதைக் கண்டு எம்பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவனின் அன்பிற்குரிய அருள் நேசர்தாம் என்பதை உணர்ந்தார்கள் அவர்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அர்ஷ் வரைச் சென்று இறைவனைத் தரிசித்து இறைஞான இரகசியங்களை அறிந்து வந்தது மூஸா (அலை) போன்று நாற்பது நாட்கள் நோன்பு நோற்றபின் அல்ல. ஒரு நொடிப் பொழுதில் நிகழ்ந்தது. அவர்கள் படுத்திருந்த படுக்கையின் சூடு மாறுவதற்கு முன், அவர்கள் புறப்படும் பொழுது கால் இடறித் தட்டிவிடப்பட்ட நீர்க் குவலையிலுள்ள நீர் முற்றிலும் கொட்டி முடிவதற்குமுன் நிகழ்வுற்றது.

விண்ணகம் சென்ற இத்ரீஸ் (அலை) அவர்கள் இனி இம்மண்ணகம் திரும்பேன் என்று கூறி அங்கேயே தங்கி விட்ட பொழுது அர்ஷ் அளவில் சென்று இறைவனுடன் உரையாடிய எம்பெருமானார் (ஸல்) அவர்களோ இத்ரீஸ் (அலை) அவர்கள் போன்று தன்னலனே பெரிதெனக் கொண்டு அங்கேயே தங்கிவிடவில்லை. மன்பதைகளை வாழ்விப்பதற்காகவே மண்ணகம் திரும்பினார்கள். இது கண்டு நாம்,

> விண்ணகம் விரைந்த இத்ரீஸோ தன்னலம் தன்னைப்
> பெரிதெண்ணி
> மண்ணகம் மீளேன் என மொழிந்து விண்ணகமதிலே
> தங்கினரால்
> விண்ணக முகடாம் அர்ஷு"வரை வியன் நபி சென்ற
> போதினுமே
> மண்ணகம் மீண்டது மண்ணவர் மேல் அன்னவர்
> கொண்ட அன்பன்றோ?

என்று பண் இசைத்து மகிழ்கின்றோம்.

தன் அன்பிற்குரிய நேசரை இறைவன் தன்னளவில் அழைத்து உரையாடியதோடல்லாது அவர்களுடன் அடிக்கடி தன் தூதுவர் ஜிப்ரீல் மூலமாகத் தொடர்பு கொண்டிருந்தான் அவன். மற்ற எந்த நபிமார்களுக்கும் செய்தி கொண்டு வந்ததைவிட எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கே ஜிப்ரீல் (அலை) அவர்கள் அதிகமான தடவை இறைவனிடமிருந்து 'வஹீ' கொண்டு வந்தார்கள். ஆதம்



(அலை) அவர்களிடம் பன்னிரண்டு தடவைகளும், இத்ரீஸ் (அலை) அவர்களிடம் நான்கு தடவைகளும், நூஹ் (அலை) அவர்களிடம் ஐந்து தடவைகளும், இப்ராஹீம் (அலை) அவர்களிடம் நான்கு தடவைகளும், மூஸா (அலை) அவர்களிடம் நானூறு தடவைகளும், ஈஸா (அலை) அவர்களிடம் பத்து தடவைகளும் 'வஹீ' கொண்டு வந்த ஜிப்ரீல் (அலை) அவர்கள் எம்பெருமானார் (ஸல்) அவர்களிடமோ 24000 தடவைகள் 'வஹீ' கொண்டு வந்தார்கள் எனின் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் மாண்பினைத்தான் என்னென்போம்.

மற்ற நபிமார்களுக்கு அருளப் பெற்ற வேதங்களுக்கும் எம்பெருமானரர் (ஸல்) அவர்களுக்கு அருளப் பெற்ற ஃபுர்கானுல் மஜீத் என்ற திருமறைக்கும் எவ்வளவோ தாரதம்மியம் உள்ளது. மற்ற நபிமார்களுக்கு அருளப் பெற்ற வேதங்களெல்லாம் இறைவனுடைய கருத்துக்கள் தாம். அந்த அந்த நபிமார்கள் தம் தம் மொழியால் மக்களுக்கு அவற்றை எடுத்தோதினார்கள். ஆனால் எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அருளப் பெற்ற திருக்குர்ஆனோ முழுக்க முழுக்க இறைவனுடைய வார்த்தைகளால் ஆனதாகும். முந்தைய வேதங்களெல்லாம் எவ்வளவோ மாற்றப்பெற்றிருக்கும் பொழுது இதுவோ இன்று வரை அதிலுள்ள ஒரு புள்ளி கூட மாற்றப் பெறாமல் உள்ளது.

மாறாப் புகழ் பெற்ற மாண்புசால் திருக்குர்ஆனை எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு வழங்கியதோடல்லாது அவர்கள் போதித்த மார்க்கத்திற்கு சாந்தி மார்க்கம் (இஸ்லாம்) என்ற அழகுத்திருப்பெயரையும் நல்கினான் இறைவன்.இத்தகு பேற்றினை வேறு எந்த நபிக்கும் இறைவன் நல்கவில்லை. மூஸா (அலை) அவர்கள் போதித்த மார்க்கம் யூதமதம் என்றும் ஸோராஸ்ட்ரர் போதித்த மார்க்கம் ஸோராஸ்ட்ரிய மதம் என்றும் ஈஸா (அலை) அவர்கள் போதித்த மார்க்கம் கிறிஸ்தவ மதம் என்றும் உலகத்தினரால் அழைக்கப்படுகிறதேயொழிய அவற்றிற்கு அவர்களுக்களிக்கப்பட்ட வேதங்களில் எந்தப் பெயரையும் இறைவன் வழங்கவில்லை.

மேலும் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் உம்மத்களாகிய முஸ்லிம்களை இறைவன் இம்மையிலும் மறுமையிலும் மேன்மைப்படுத்தினான். அவர்களைப் பற்றி இறைவன் தன் திருமறையில் கூறும்பொழுது "நீங்கள் தாம் மனிதர்களில் தோன்றிய உம்மத்களிலெல்லாம் மிகவும் மேன்மையாளர்கள்" (3:110) என்ற பாராட்டு மொழி பகர்ந்தான்.

மேலும் இறைவன் தன் திருமறையில் "நம்முடைய அடியார்களிலிருந்து நாம் தேர்ந்தெடுத்துக் கொண்ட அவர்களுக்கு நாம் இந்நூலை உரிமைப்படுத்துகிறோம்" (35:32) என்று இயம்பினான். இத்திருவசனம் இறங்கியதும் "இறைவன் இந்த உம்மத்களை மற்றைய உம்மத்களை விடத் தேர்ந்தெடுத்துக் கொண்டான்" என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மகிழ்ச்சி மொழி பகர்ந்தார்கள்.

இம்மட்டோடு இறைவன் நிற்கவில்லை. விண்ணேற்றத்தின்போது இறைவன் எம்பெருமானார் (ஸல்) அவர்களை நோக்கி, 'நீர் சுவனம் புகுமுன் மற்ற நபிமார்கள் சுவனம் புகுவது ஹராம். உம்முடைய உம்மத்கள் சுவனம் புகுமுன் மற்ற உம்மத்கள் சுவனம் புகுவது ஹராம்" என்றும் அருண்மொழி பகர்ந்தான்.

மேலும் "உம்முடைய உம்மத்கள் தங்களின் அடக்க இடங்களில் அதிகமான நாட்கள் தங்கி இராததற்காக அவர்களை இறுதியாகப் படைத்தேன். முந்தைய உம்மத்களுக்கோ ஒன்றுக்கு ஒன்றுதான் கூலி. உம்முடைய உம்மத்களுக்கோ ஒன்றுக்குப் பத்தும் எல்லையற்ற அளவும் கூலியாக நல்கப்படும்" என்றும் இறைவன் நன்மாராயம் நவின்றான்.

ஒரு நாள் மூஸா (அலை) இறைவனை நோக்கி, "இறைவனே! நீ என்னுடைய உம்மத்களுக்கு மேகத்தை நிழலிடச் செய்து மன்னு-ஸல்வாவை உணவாக வழங்கினாய். அவ்விதம் நீ சிறப்புச் செய்த என்னுடைய உம்மத்களைவிட மாண்பாரும் உம்மத் ஏதேனும் உண்டா?" என்று வினவினர். அதற்கு இறைவன் 'ஆம், உண்டு! அதுவே என்னுடைய இறுதி மாநபியாம் முஹம்மதின் உம்மத்'



என்று மறுமொழி பகர்ந்தான். "அவ்விதமாயின் நீ என்னை அவருடைய உம்மத்தில் ஆக்குவாயாக!" என்று மூஸா (அலை) அவர்கள் இறைஞ்ச, "நீர் அவரை அடைய மாட்டீர். எனினும் அந்த உம்மத்களின் பேச்சை நீர் கேட்க விரும்புகின்றீரா?" என்று இறைவன் வினவ, "ஆம்" என்று மறுமொழி பகர்ந்தனர். மூஸா (அலை) அவர்கள். உடனே இறைவன், "முஹம்மதுடைய உம்மத்களே!" என்று விளிக்க, அவர்கள் "லப்பைக் அல்லாஹும்ம லப்பைக்" (இதோ அடி பணிந்தோம் இறைவனே! இதோ அடி பணிந்தோம்) என்று மறுமொழி பகர்ந்தனர். அப்பொழுது இறைவன் அவர்களை நோக்கி, "முஹம்மதுடைய உம்மத்களே! என் பேரருள் என் சினத்தை மிகைத்து விட்டது. நீங்கள் எனக்கு மாறு செய்யுமுன்பே நான் உங்களை மன்னித்து விட்டேன். நீங்கள் கேட்குமுன்பேயே நான் கொடுத்து விட்டேன். 'லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்' என்று கலிமாச் சொன்னவரை நான் சுவனம் புகச் செய்வேன். அவருடைய பாவங்கள் கடல் நுரை போன்றும் விண்மீன்கள் போன்றும் உலகின் நாட்கள் போன்றும் இருந்தாலும் சரியே" என்று கூறினான் இறைவன்.

ஒரு தடவை ஈஸா (அலை) அவர்கள் ஒரு வழியே சென்று கொண்டிருந்தபொழுது ஆங்கு ஒரு மலை ஒளி உருவாய் நின்று கொண்டிருப்பதைக் கண்டு வியப்புற்று 'இறைவனே! இம்மலையை என்னுடன் பேசுமாறு செய்' என்று வேண்ட அவ்விதமே செய்தான் இறைவன். அப்பொழுது அம்மலை ஈஸா (அலை) அவர்களை நோக்கி, 'தாங்கள் என்னிடமிருந்து எதை விரும்புகின்றீர்கள்?" என்று வினவ, "நீ இவ்வாறு ஒளிர்ந்து கொண்டிருப்பதற்குக் காரணம் என்ன?" என்று வினவியபொழுது, "என்னிடம் ஒரு மனிதர் உள்ளார். அவரின் பொருட்டு நான் இவ்வாறு ஒளிர்ந்து கொண்டுள்ளேன்" என்று பதிலிறுத்தது அம்மலை. உடனே ஈஸா (அலை) அவர்கள் இறைவனிடம் அந்த மனிதரை தமக்குக் காட்டியருளுமாறு வேண்ட உடனே அம்மலை பிளந்தது. அதிலிருந்து அழகான வயோதிகர் ஒருவர் வெளிப்பட்டு, "ஈஸாவே! நான் மூஸா

(அலை) அவர்களின் உம்மத்தைச் சேர்ந்தவன். இறுதி நபியாம் முஹம்மத் (ஸல்) அவர்களின் மாண்பினைப் பற்றிக் கேள்வியுற்று அவர்களின் உம்மத்களில் ஒருவனாக நான் இருக்க வேண்டுமென்று இறைவனிடம் இறைஞ்சினேன். என் இறைஞ்சுதலை இறைவன் ஏற்று இம்மலையில் வைத்து என்னைப் பரிபாலித்து வருகிறான். அறு நூறு ஆண்டுகளாக இம்மலையிலேயே நான் வாழ்ந்து கொண்டுள்ளேன்" என்று கூறினார் எனில் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் மாண்பினை நாம் என்னென்போம்!

எல்லாவற்றிற்கும் மேலாக இறைவன் எம்பெருமானார் (ஸல்) அவர்களை மறுமையில் மகோன்னதமான தலமாகிய 'மகாமுல் மஹ்மூதா' என்பதில் அமரச் செய்து கௌரவிப்பான். இதனையே இறைவன் தன் திருமறையில், "நபியே! உம்மை அல்லாஹ் மகாமுல் மஹ்மூதில் எழுப்பப் போதுமானவன்" என்று அருள் உரை பகர்கின்றான்.

மறுமையில் 'மகாமுல் மஹ்மூதா'வில் அமரும் பதவி சாமான்யப் பதவியல்ல-அந்த மகாமுல் மஹ்மூதாவில் அமர்த்தப் பெறும் பேறு தமக்கே கிடைக்க வேண்டும் என்ற பேரவாவின் காரணமாகவே பெருமானார் (ஸல்) அவர்கள் தம் தோழர்களை நோக்கி, "நீங்கள் என் மீது ஸலவாத்துச் சொல்லின் எனக்கு வஸீலாவை வழங்கும்படி இறைவனிடம் இறைஞ்சுங்கள்" என்று கூறினர். அதுகேட்ட தோழர்கள் "வஸீலா என்றால் யாது?" என்று வினவிய பொழுது, 'அது சுவனப் பதவிகளில் மாண்பாரும் பதவியாகும். அது ஒரே ஒருவருக்குத்தான் அருளப் பெறும். அந்த ஒருவர் நானாகவே இருக்க வேண்டுமென்று நான் விழைகிறேன். இருப்பேன் என்றும் நம்புகிறேன்' என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

பாங்கு கூறப்பட்டபின் ஓதப்படும் 'துஆ'வில் இந்த வஸீலாவும் அடங்கியிருப்பதாலேயே "பாங்கு துஆ ஓதியவருக்கு என்னுடைய பரிவுரை கடமையாகிவிட்டது" என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.



'மகாமுல் மஹ்மூதா'வில் அமர்ந்து இறைவனிடம் பரிந்துரைக்கும் அந்த மகோன்னதத் தகுதியை எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தங்களுடைய அளப்பரும் பொறுமையினாலும் பண்பாலும் பொறுப்புணர்வாலுமே அடையப் பெற்றனர். மற்ற நபிமார்களெல்லாம் தங்களின் கூட்டத்தினர் தங்களுக்குச் செய்த கொடுமைகளைத் தாளாது மனக் கொதிப்படைந்த பொழுது அக்கூட்டத்தினர் அழித்தொழிக்கப்பட்டதை எண்ணிய பொழுது எம்பெருமானார் (ஸல்) அவர்களின் உள்ளம் நைந்துருகியது. நூஹ் (அலை) அவர்களின் கூட்டத்தினர் பிரளயத்தினாலும் ஹூத் (அலை) அவர்களின் கூட்டத்தினர் புயலினாலும், ஸாலிஹ் (அலை) அவர்களின் கூட்டத்தினர் நில அதிர்வாலும், லூத் (அலை) அவர்களின் கூட்டத்தினர் மண்மாரியாலும், மூஸா (அலை) அவர்களை எதிர்த்த ஃபிர்அவ்னின் கூட்டத்தினர் நீல நதியாலும் அழித்தொழிக்கப்பட்டதையும் தாவூத் (அலை) அவர்களின் கூட்டத்தினர் சிலர் அவர்களுக்கு மாறு செய்ததன் காரணமாகப் பன்றிகளாகவும் குரங்குகளாகவும் மாறி மாய்ந்தொழிந்ததையும் அதே போன்று ஈஸா (அலை) அவர்களின் வெஞ்சின மொழியால் சிலர் பன்றிகளாக ஆனதையும் எண்ணியபொழுது அவர்களின் அருள் நெஞ்சம் செந்நீர் சிந்தியது. எனவேதான் அவர்களுக்கு மக்காக் குறைஷிகள் சொல்லொணாக் கொடுமை இழைத்த போதும் தாயிஃப் மக்கள் அவர்களுக்கு ஆற்றொணா அல்லல் தந்த போதும் கருணையங்கடலாகிய எம்பெருமானார் (ஸல்) அவர்களின் உள்ளத்தில் அணுவத்தனை வருத்தமும் ஏற்படவில்லை. தாயிஃபிலிருந்து வெருட்டப்பட்டு அவர்கள் வெருண்டோடி வருங்கால் ஜிப்ரீல் (அலை) பெருமானார் (ஸல்) அவர்களின் முன் தோன்றி, ஆணையிடின் ஆங்குள்ள மலைகளைப் புரட்டி அந்நகரையே, அந்நகர மக்களையே அழித்து விடுவதாகக் கூறிய பொழுது அகிலங்களுக்கு அருளப்பெற்ற அருட் பெருங்கொடையாகிய எம்பெருமானார் (ஸல்) அவர்களின் அருள்

நெஞ்சம் பதறிவிட்டது, "வேண்டாம், வேண்டாம். இவர்கள் நேர்வழி பெறாவிடினும் இவர்களின் சந்ததிகளாவது நேர்வழி பெறுவர்" என்று பதறிப் பதறிக் கூறினார்கள் அவர்கள். அது மட்டுமல்லாது அருட்பெரும் வள்ளலாகிய எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தம் இருகரம் ஏந்தி "இறைவ எம்பெரும! இவர்கள் அறியாது பிழை செய்கின்றார்கள். எனவே இவர்களின் பிழை பொறுத்து இவர்களுக்கு நேர்வழியைக் காட்டியருள்வாயாக!" என்று இறைஞ்சினார்கள். அப்பொழுது அவர்களின் கமலக் கண்களும் அழுதன. இதயக் கமலமும் அழுதது.

இத்தகு தனிப்பெரும் மாண்பாரும் பண்பாலேதான் எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இறைவன் மறுமையில் மாட்சிமிகும் தனிப்பெரும் தகுதியை மகாமுல் மஹ்மூதாவில் விற்றிருக்கும் மகோன்னதத் தகுதியை வழங்கிச் சிறப்புச் செய்தான்.

மஹ்ஷர் வெளியில் மக்களெல்லாம் மயங்கித் தியங்கியாது செய்வதென அறியாது ஆதம் (அலை) அவர்களை அடைந்து "தாங்கள் தாம் எங்களின் தந்தையராவீர். எனவே எங்களுக்காக இறைவனிடம் பரிந்துரையுங்கள்" என்று வேண்டுவர். அதற்கு அவர்கள் "நான் விலக்கப்பட்ட மரத்தின் பழங்களை உண்டு இறைவனுக்கு மாறு செய்துள்ளேன். எனவே நஃப்ஸீ, நஃப்ஸீ என்று கூறி என் ஆன்ம விமோசனத்திற்கே இறைவனிடம் மன்றாடிக் கொண்டிருக்கும் பொழுது இறைவனிடம் உங்களுக்காக நான் எவ்வாறு பரிந்துரைக்க இயலும்? எனவே நூஹிடம் சென்று வேண்டுங்கள்" என்று பதிலிறுப்பர். அவ்வாறே அவர்கள் நூஹ் (அலை) அவர்களிடம் சென்று வேண்ட "நான் என்னுடைய கூட்டத்தினரைச் சபித்து மாய்த்தொழித்ததை எண்ணி நஃப்ஸீ, நஃப்ஸீ என்று கூறிக் கொண்டுள்ளேன். நான் உங்களுக்கு எவ்வாறு பரிந்துரைப்பது? நீங்கள் இப்ராஹீமிடம் சென்று வேண்டுங்கள்" என்று கூறுவர். அவ்வாறே அவர்கள் இப்ராஹீம் (அலை) அவர்களிடம் சென்று வேண்ட "நான் உலகில் மூன்று பொய்யுரைத்தேன். அதற்காக இறைவன் எனக்கு என்ன தண்டனை நல்குவானோ என்று அஞ்சி நஃப்ஸீ, நஃப்ஸீ என்று கூறிக் கொண்டுள்ளேன். எனவே மூஸாவிடம் சென்று வேண்டுங்கள்" என்று இயம்புவர். அவ்விதமே அவர்கள், மூஸா (அலை) அவர்களிடம் சென்று வேண்ட, "நான் இறைவனின் அனுமதியின்றி ஒருவனை கொன்றொழித்ததை எண்ணி, எண்ணிக் கவலுற்று என் கதி யாதாகுமோ என்று நஃப்ஸீ, நஃப்ஸீ என்று கூறிக் கொண்டுள்ளேன். என் நிலையே இவ்வாறிருக்கும் பொழுது உங்களுக்கு நான் எவ்வாறு உதவுவது? எனவே நீங்கள் ஈஸாவிடம் செல்லுங்கள்" என்று கூறுவர். அவ்வாறே அவர்கள் ஈஸா (அலை) அவர்களிடம் சென்று வேண்ட "இறைவன் என்றுமில்லா வண்ணம் இன்று கடுஞ்சினத்தோடு உள்ளான். எனவே என் நிலை யாதாகுமோ என்று கதி கலங்கி நஃப்ஸீ, நஃப்ஸீ என்று கூறிக் கொண்டுள்ளேன். எனவே நீங்கள் இறுதி நபியாம் முஹம்மத் (ஸல்) அவர்களை சென்று வேண்டுங்கள்" என்று கூறுவர். அவ்வாறே அவர்கள் எம்பெருமானார் (ஸல்) அவர்களிடம் சென்று தங்களுக்காக இறைவனிடம் பரிந்துரைக்குமாறு வேண்டுவர். அப்பொழுது எம்பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவனின் திருமுன் தலை தாழ்த்தி உம்மத்தீ, உம்மத்தீ என்று அலறிப் பரிந்துரை செய்வர். அவர்களின் உம்மத்களில் கடைசி மனிதன் நரகத்திலிருந்து வெளிப்படும் வரையில் அவர்கள் தங்களின் தலையை மேலே உயர்த்த மாட்டார்கள்; பரிவுரையே அவர்களை நோக்கி 'தாங்கள் தங்களுடைய உம்மத்களின் மீது இறைவனின் சினத்தை அவித்து என் மீது இறைவனின் சினத்தைப் பெற்றுத் தந்து விட்டீர்களே? எனவே என் மீது இரங்கி எனக்காக இறைவனிடம் பரிந்துரையுங்கள்' என்று கூறி அழும் வண்ணம் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவனின் திருமுன் தம் உம்மத்களுக்காகப் பரிந்துரைத்து அழுவார்கள். இதனையே ஒரு கவிஞரும்,

பரிவுரை பெருமான் தமைநோக்கிப் பெரிதும் எனை நீர்
பயன்படுத்தி
பெரியோன் சினத்தைப் பிறர் கவித்து பெரியோன்
சினத்தை எனக்களித்தீர்
பரிந்தே என்மேல் இறை முன்னர் பரிந்தே உரைப்பீர்
உரைப்பீரென
பரிவுரை சொல்லி அழும் வண்ணம் பரிவுரை செய்து
அழுவாரே

என்று பாடுகிறார்.

அக்காலை இறைவன் அவர்களை அர்ஷின் மீதும் குர்ஷின் மீதும் அமரச் செய்வான். அப்பொழுது அவர்களின் கையில் 'ஹம்து' என்னும் கொடி கொடுக்கப்படும். அதன் நிழலிலே நபிமார்கள் அனைவரும் வந்து தங்குவார்கள். அப்பொழுது எல்லோருக்கும் முன்பாக எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தம் உம்மத்களுக்காக இறைவனிடம் பரிந்துரைப்பார்கள். எல்லோருக்கும் முன்னதாக அவர்களின் பரிவுரைதான் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படும். அன்று அல்லாஹ்விடத்தில் அனைவரிலும் எம்பெருமானார் (ஸல்) அவர்களே மிகவும் நெருக்கமானவர்களாகவும் சங்கைக்குரியவர்களாகவும் திகழ்வர். இந்தத் தனிப் பெரும் தன்மை அன்று அவர்கள் ஒருவருக்கே வழங்கப்பெறும். எனவேதான் விண்ணேற்றத்தின்போது இப்ராஹீம் (அலை) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை நோக்கி "என்னரும் மகனே! மறுமையில் உன் வயோதிகத் தந்தையை மறந்து விடாதீர்" என்று நீர் மல்கும் கண்களுடன் இயம்பினர்.

அன்றையத் தினம் மஹ்மூதென்னும் அழகுசால் பெயர் சூட்டப் பெற்ற எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தம் பெயருக்கேற்ப மகாமுல் மஹ்மூத் என்னும் புகழ்ப் பெற்ற மகோன்னத இடத்தில் வீற்றிருப்பார்கள். மஹ்மூதெம்மான் வீற்றிருப்பதனால் மகாமுல் மஹ்மூத் சிறப்புற்றதோ? மகாமுல் மஹ்மூதில் வீற்றிருப்பதனால் மஹ்மூதெம்மான் சிறப்புற்றனரோ என்று மக்கள் ஐயுறும் வண்ணம் அவர்கள் வீற்றிருப்பார்கள். மஹ்மூத் எம்மான் வீற்றிருப்பதனால்தான் மகாமுல் மஹ்மூத் இத்துணைச் சிறப்புற்றது என்று மக்கள் பேசிக் கொள்ளும் வண்ணம் அவர்கள் மகோன்னதமாக வீற்றிருப்பார்கள். எனவே நாமும்,



மஹ்மூதென்னும் புகழ்பெயரார் மஹ்மூதென்னும்
இடம்தனிலே
மஹ்மூதென்னும் பெயர்க்கேற்ப மகோன்னதமாக
அமர்ந்ததனால்
மஹ்மூதெனும் இடம் சிறந்ததுவோ?
மஹ்மூதெம்மான் சிறந்தனரோ?
மஹ்மூதெம்மான் அமர்ந்தன்றோ மஹ்மூதெனுமிடம்
சிறந்ததுவே

என்று எம்பெருமானர் (ஸல்) அவர்களின் மீது புகழ் பாடுவோம். துதி இசைப்போம்.

# 3. பெருமானாரின் மீது அன்பு

தன் திருமறையில் பல்வேறு இடங்களில் தன் அருள் நேசரின் மாண்பினைப் பற்றி எடுத்துரைத்த இறைவன் அவர்களிடம் மிகவும் மரியாதையுடன் ஒழுகுமாறும் அவர்களுடைய குரலுக்கு மேலாகத் தம் குரலை உயர்த்தி அவர்களுடன் உரையாட வேண்டாம் என்றும் அவர்களிடம் அனாவசியமாகக் கேள்விகள் கேட்க வேண்டாம் என்றும் அருள் எச்சரிக்கை புரிந்தான். எனவேதான் எம்பெருமானார் (ஸல்) அவர்களுடன் உரையாடும் பொழுது தமக்கொரு தடைக்கல்லாக இருக்கட்டுமென்று அபூ பக்கர் (ரலி) அவர்கள் தம் வாயில் கூழாங்கற்களைப் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

அல்லாஹ்வின் பேரருளுக்கும் பெருமானார் (ஸல்) அவர்களின் ஆசிக்கும் தாம் முழுக்க முழுக்க பாத்திரமாக இருக்க வேண்டுமென்பதற்காக அவர்கள் தம்மையும் தம் சொத்தாகிய நாற்பதாயிரம் திர்ஹங்களையும் இறைவனுக்காக, இறை தூதருக்காக, இறை மார்க்கத்திற்காக அர்ப்பணிக்கச் சிறிதேனும் தயங்கவில்லை. தபூக் யுத்தத்திற்காக அனைவரும் தங்களால் இயன்றதைப் போர் நிதியில் கொண்டு வந்து சேர்த்த பொழுது அபூ பக்கர் (ரலி) அவர்களோ தங்களிடமிருந்த உடைமைகள் அனைத்தையும் கொண்டு வந்து அதிலே குவித்தார்கள். இதனை விளங்கிக் கொண்ட எம்பெருமான் (ஸல்) அவர்கள், "தங்களின் குடும்பத்தினருக்கு ஏதேனும் வைத்து வந்துள்ளீர்களா?" என்று வினவிய பொழுது 'அல்லாஹு வரஸூலுஹு' (அல்லாஹ்வையும் அவனுடைய ரஸூலையும் வைத்து வந்துள்ளேன்) என்று பதிலிறுத்தார்கள் அபூ பக்கர். இதனையே மகாகவி இக்பாலும்,

பர்வான்கு சிராஹ்ஹே புல்புக்கு பூல்பஸ்
ஸித்தீக்கே லியேஹே ஹுதாகா ரஸூல்பஸ்

விட்டிற் பூச்சிக்கு விளக்கு போதுமானது. தேன் சிட்டுக்கு பூ போதுமானது. அபூ பக்கர் ஸித்தீக் (ரலி) அவர்



களுக்கு அல்லாஹ்வுடைய ரஸூல் போதுமானவர்கள் என்று பாடிப் பரவசமுறுகிறார்.

இதனையே பிற்காலத்தில் அபூ பக்கர் ஷிப்லி (ரஹ்) அவர்கள் கூறும் பொழுது, "இரண்டரை சதவிகிதம் ஜகாத் கொடுப்பதே எல்லார்க்கும் விதியாகும். ஆனால் ஸித்தீக்குடைய ஜகாத் விதியோ நூற்றுக்கு நூறு சதவிகிதம் கொடுப்பதாகும்" என்று இயம்பினர்.

"(என்) தூதுவர் (இரஸூல்) முஸ்லிம்களுக்கு அவர்களின் ஆன்மாவைவிட மேலானவர்" (33:6) என்று இறைவன் தன் திருமறையில் கூறுகிறான். இதனை மெய்ப்பிக்கும் முறையில் தம்முடைய இன்னுயிரையும் துரும்பென மதித்து அபூ பக்கர் (ரலி) அவர்கள் எம்பெருமானார் (ஸல்) அவர்களுடன் இரவோடிரவாக மதீனா புறப்பட்டதும் இறைவனுக்காக, இறை தூதருக்காகத் தம் பொருள் அனைத்தையும் செலவழித்ததையும் சொல்லொணா இன்னல்களுக்கு ஆளானதையும் நாம் இன்று நினைவு கூறும்பொழுது நம் உடலெல்லாம் சிலிர்க்கிறது. தமக்காக அவர்கள் செய்த மாபெரும் தியாகத்தை எம்பெருமானார் (ஸல்) அவர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். எனவேதான் "நான் எல்லார்க்கும் நன்றிக் கடனாற்றிவிட்டேன் ஆனால் அபூ பக்கருக்கு மட்டும் என்னால் ஆற்ற இயலவில்லை" என்று கூறித் தம் ஆற்றாமையை வெளிப்படுத்தினார்கள்.

எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மீது அபூ பக்கர் (ரலி) அவர்கள் கொண்டிருந்த அன்போ இவ்வளவுதான் என்று வரையறுத்து அளவிட முடியாததாயிருந்தது. விடிந்தெழுந்ததும் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் திருமுகத்தில் தாம் முதன் முதலாக விழிக்க வேண்டும்; பெருமானார் (ஸல்) அவர்களும் துயிலெழுந்து தொழப் பள்ளி வரும் பொழுது அவர்களின் கண்கள் முதன் முதலாகப் பார்க்கும் பேறு தமக்கு ஏற்பட வேண்டும் என்பதற்காக தமக்கு மதீனாவில் பல வீடுகள் இருந்த போதிலும் அபூ பக்கர் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் வீட்டு வாயற்படியிலேயே தலை வைத்துப் படுத்துறங்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள் உமர் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை அணுகி, "நாயகமே! நான் தங்களை அதிகமாக நேசிக்கிறேன். எனினும் என் இன்னுயிரைவிடத் தங்களை அதிகமாக நேசிக்க இயலவில்லையே" என்று கூறிய பொழுது, "நீர் என்னை உம்முடைய இன்னுயிரைவிட அதிகமாக நேசிக்கவில்லையாயின் உம்முடைய இறை நம்பிக்கை (ஈமான்) நிறைவு பெறவில்லை என்றுதான் பொருள்" எனப் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினர். அது கேட்ட உமர் (ரலி) அவர்கள் அலறித் துடித்துக்கீழே விழுந்து அரற்றினார்கள். அப்பொழுது பெருமானார் (ஸல்) அவர்கள் உமர் (ரலி) அவர்களைக் கை தூக்கி விட்டு அவர்களின் நெஞ்சில் தம் திருக்கரத்தைவைத்து, "உமரே! இப்பொழுது உமக்கு என் மீதுள்ள நேசம் எவ்வாறு உள்ளது?" என்று வினவினர். அது கேட்ட உமர் (ரலி) அவர்கள், "நாயகமே! இப்பொழுதுதான் தாங்கள் என் உயிரினும் மேலாக உள்ளீர்கள்" என்று விடையிறுத்தார்கள். அப்பொழுது பெருமானார் (ஸல்) அவர்கள் உமர் (ரலி) அவர்களை நோக்கி, "உமரே! இப்பொழுதுதான் உம்முடைய இறை நம்பிக்கை (ஈமான்) நிறைவு பெற்றது" என்று நன்மாராயம் மொழிந்தனர்.

அரபு அவனி முழுவதையும் ஒரு குடையில் ஆளும் பொழுதும் கலீபா உமர் (ரலி) அவர்கள் தம்மை எம்பெருமானார் (ஸல்) அவர்களின் அடிமை என்று பிறர் சொல்வதைக் கேட்டுப் புளகாங்கிதமுற்றனர். ஒரு தடவை பெருமானார் (ஸல்) அவர்களின் அருமைப் பேரர் ஹுஸைன் (ரலி) அவர்களுக்கும் கலீபா உமர் (ரலி) அவர்களின் சின்னஞ்சிறு மகன் ஒருவருக்கும் சண்டை ஏற்பட்ட பொழுது "நீ என்ன பெரியவனோ? உன் தந்தை என் பாட்டனாரின் அடிமைதானே" என்று கூறினார் சிறுவர் ஹுஸைன் அவரை நோக்கி. இதனை உமர் (ரலி) அவர்களின் மகன் தம் தந்தையிடம் அழுது கொண்டு வந்து கூறிய பொழுது. உடனே தம் மகனை அழைத்துக்கொண்டு ஹுஸைன் (ரலி) இடம் சென்ற உமர் (ரலி), அவரை அழைத்துக் கொண்டு பெருமானார் (ஸல்) அவர்கள்



அடங்கப் பெற்றுள்ள ரௌலா ஷரீபை அடைந்து, "அண்ணல் நபி (ஸல்) அவர்களின் திருப்பெயரரே! நான் தங்களின் பாட்டனாரின் அடிமையென்று என் மகனிடம் தாங்கள் கூறினீர்களாமே? அதனைத் தங்களின் பாட்டனாரின் திருமுன் என் செவி குளிர, என் உடல் குளிர, என் உள்ளமெல்லாம் குளிர மீண்டும் ஒரு முறை கூறி விடுங்கள்" என்று கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தோட மொழிந்தனர்.

பெருமானார் (ஸல்) அவர்கள் மீது தமக்கு இருந்த அளவற்ற பக்தியின் காரணமாக அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் இறந்துவிட்ட செய்தியைத் துவக்கத்தில் ஏற்றுக் கொள்ளவும் மறுத்து விட்டார்கள். "எவரேனும் பெருமானார் (ஸல்) அவர்கள் இறந்து விட்டார்கள் என்று கூறின் அவருடைய தலையைத் துணித்து விடுவேன்" என்று அவர்கள் இடி முழங்கினாற் போன்று முழங்கவும் செய்தார்கள்.

உதுமான் (ரலி) அவர்கள் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அளப்பரும் அன்பையும் பக்தியையும்தாம் என்னென்போம். "அல்லாஹ்வின் பேரால் ஏதாவது தாருங்கள்" என்று இரந்தவரிடம் ஏதாவதைக் கொடுத்த உதுமான் (ரலி) அவர்கள் "அல்லாஹ்வின் ரஸூலின் போரால் ஏதாவது தாருங்கள்" என்று மீண்டும் வந்து அவரே வேண்டிய பொழுது பணப்பெட்டியில் இருந்த அனைத்தையும் கொண்டு வந்து கொட்டி எடுத்துச் செல்லுமாறு கூறினர். காரணம் வினவப்பட்டபொழுது, "அல்லாஹ்தான் நிகரற்றவன்; என்றுமுள்ளவன். ஆனால் இந்த இரஸூல் தோன்றியிராவிடின் நானும் நீயும் அல்லாஹ்வை அறிந்திருக்க மாட்டோம். உலகமே நேர் வழி பெற்றிராதே" என்று நீர் மல்கும் கண்களுடன் இயம்பினார்கள் அவர்கள். இதனையே ஒரு ஞானியும்,

"நஹோத்தே ஆப்மௌலாகர்
குதா ஹோத்தா கஹான் ஜாஹிர்"

"தாங்கள் உலகிற்குத் தளபதியாக இல்லாவிடின் அல்லாஹ்வை உலகிற்கு வெளிப்படுத்துபவர் யார்" என்று பாடினார்.

அலீ (ரலி) அவர்கள் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த உள்ளன்பை என்னென்பேம். உணர்ச்சிவயப் பட்டுப் பாய்ந்து ஒருவருக்காக உயிரை விடுவது வேறு; அமைதியாகச் சிந்தித்து ஒருவருக்காகத் தம் உயிரைத் தியாகம் செய்ய முன்வருவது வேறு.

இறப்புப் படுக்கை போன்றிருந்த பெருமானார் (ஸல்) அவர்களின் படுக்கையில் கஃபன் போன்றிருந்த அவர்களின் பச்சை நிற 'ஹலரமௌத்' போர்வையைப் போர்த்திக் கொண்டு மௌத் (இறப்பு) தமக்கு ஹாலிராகி (ஆஜராகி) விட்டது போன்று எண்ணிப் படுத்துக் கொண்டு, "இறையருளால் நலமே செல்லுங்கள்" என்று கூறிப் பெருமானார் (ஸல்) அவர்களை மதீனாவுக்குப் பயணம் அனுப்பி வைத்த அலீ (ரலி) அவர்களின் பக்தியை, மெய்யன்பை விவரிக்க நமக்கு வார்த்தைகளில்லையே. என்செய்வேம். பெருமானார் (ஸல்) அவர்களின் உயிர் காப்பதற்காக, தம் இன்னுயிரையும் போக்க முன்வந்த அலீ (ரலி) அவர்களின் துணிவை எண்ணும் பொழுது,

கப்ர் போன்றிருந்த பெருமானின் கனமிகு படுக்கை
தனில் அலியார்
கபன் போன்றிருந்த பசும்ஹலர மௌத்துப் போர்வை
தனைப் போர்த்தி
கபனை அணிந்தேன் மௌத்தே நீ கணமே வருவாய்
நீயும்தான்
கபனை அணிந்தே வந்திடுவாய் என்பது போன்று
படுத்தனரே

என்று நம்மையறியாமல் நாம் பண்ணிசைக்கின்றோம்.

அக்காலை பெருமானார் (ஸல்) அவர்களுக்கே அலீ (ரலி) அவர்களின். நிலையை எண்ணிக் கண்கள் கலங்கின



"அலீயே! இறைவன் நம்மை இப்ராஹீம் (அலை) அவர்களையும் இஸ்மாயீல் (அலை) அவர்களையும் சோதித்தது போன்று - இல்லை, இல்லை - அதைவிட அதிகமாகச் சோதிக்கின்றான். இஸ்மாயீல் (அலை) அவர்களின் கழுத்து அவர்களின் தந்தையாரால் இறை ஆணைப்படி துணிக்கப் பெற இருந்தது. ஆனால் நீரோ நீரே விரும்பி உம் கழுத்தை எதிரிகளின் கொடுவாளுக்கு இரையாக்க முன் வந்துள்ளீர். தைரியமாய் இரும். அல்லாஹ் உம்மைக் காப்பாற்றப் போதுமானவன்" என்று நா தழதழக்கக் கூறினர் அவர்கள்.

அலீ (ரலி) அவர்கள் போன்று ஆயிரம் ஆயிரம் தோழர்கள் தங்களின் இன்னுயிரினும் அதிகமாகப் பெருமானார் (ஸல்) அவர்களை நேசித்தனர். எனவே அவர்கள் தங்களுடைய இன்னுயிரையும் பெருமானார் (ஸல்) அவர்களுக்காக அர்ப்பணம் செய்யத் தயாராக இருந்தனர். மூஸா (அலை) அவர்களிடம் பனீ இஸ்ராயீல்கள், "நீங்களும் உங்களின் இறைவனும் சென்று சண்டை செய்யுங்கள் என்று கூறியது போன்று நாங்களும் கூறமாட்டோம்" என்று அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் சொன்னதோடு அவ்வாறே செயலாற்றியும் காட்டினார்கள். இதன் காரணமாகவே இறைவனும் அவர்களை நேசித்தான். பெருமானார் (ஸல்) அவர்களும் அவர்களை நேசித்தார்கள்.

எம்பெருமானார் (ஸல்) அவர்களுடன் தொடர்பு கொண்டதன் காரணமாக அவர்களின் உள்ளத்தில் நூரே முஹம்மதிய்யா பாயப் பெற்று அவர்களுக்கு ஆன்மீக ஒளி நல்கியது. எனவேதான் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தம் தோழர்களைப் பற்றிக் கூறும் பொழுது, "அவர்கள் வானிலே ஒளிரும் விண்மீன்கள் போன்றவர்கள், அவர்களில் எவர் ஒருவரையேனும் பின்பற்றின் நீங்கள் நேர்வழி பெற்று விடுவீர்கள்" என்று உலக முடிவு நாள் வரைத் தோன்றவிருக்கும் முஸ்லிம்களுக்கு அறிவுரை பகர்ந்து சென்றனர். மேலும் "என்னைக் கண்டவரும் என்னைக் கண்டவரைக் கண்டவரும் நற்பேறு பெற்றவர்கள்" என்று

அருண்மொழி பகர்ந்து சென்றனர். எனவேதான் பிற் காலத்தில் தோன்றிய மாபெரும் ஆத்ம ஞானி முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜெய்லானி (ரஹ்) அவர்களும், 'நாங்கள் நபித் தோழர்களில் கடைசித் தரத்திலுள்ள ஒருவரின் குதிரையின் கால் தூசிக்குக் கூடச் சமமாக மாட்டோம்' என்று தாழ்மையுடன் இயம்பினார்கள்.

எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தம் தலையில் ஒரு தடவை கை வைத்து ஆசீர்வதித்தார்கள் என்பதற்காக எம் பெருமானார் (ஸல்) அவர்களின் கைபட்ட அம்முடியை அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் (ரலி) அவர்கள் பின்னர் வெட்டவே செய்யாது அதனை அவ்வப்பொழுது முத்த மிட்டு வரும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார்கள்.

உஹத் போர்க்களத்தில் எம்பெருமானார் (ஸல்) அவர் களுக்கு ஒரு பல் முறிந்து விட்டது என்பதைக் கேள்வியுற்ற உவைஸுல் கர்னீ (ரஹ்) அவர்கள் அப்பல் எப்பல் என்று பலரிடமும் விசாரித்தும் தெரியாததன் காரணமாகத் தம் பற்கள் அனைத்தையும் பிடுங்கி விட்டார்கள். அதுகேட்டு 'ஏன் அவர்கள் அத்துடன் நின்றார்கள்? எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கே பற்கள் இல்லாதபொழுது உலகத்தி லுள்ள எவருக்குத்தான் பற்கள் இருக்க வேண்டும்? அவர் கள் அனைவருடைய பற்களையும்தாம் ஏன் பிடுங்கி வீசி எறிந்திருக்கக் கூடாது?' என்று நமக்கு உணர்ச்சி பொங்கி,

ஒப்பாரில்லான் திருநபிக்கு உஹதில் ஒருபல்
முறிந்ததனால்
அப்பல் எப்பல் என அறியா தம்பல் அனைத்தும
முறித்த உவைஸ்
ஒப்பாரில்லான் திருநபிக்கு உஹதில் ஒருபல்
முறிந்ததன் பின்
இப்பாருள்ளோர் கெதற்கென்றே ஏனோ
முறிக்கத் தவறினரே

என்று நம்மையறியாமல் கவிதையொன்று கேள்வி உருவில் வெளிப்படுகிறது.



உஹத் போர்க்களத்தில் எம்பெருமானார் (ஸல்) அவர் களின் முகத்தில் இரு இரும்புத் துண்டுகள் ஆழமாகப் பதிந்திருந்த பொழுது அவற்றைத் தம் இரு முன் பற்களால் மாலிக் இப்னு ஸினான் கடித்து வெளியே இழுத்தக்கால் அவருடைய இரு பற்களும் விழுந்து விட்டன. இரும்புத் துண்டுகள் பதிந்திருந்த காயத்திலிருந்து இரத்தம் பீறிட்டு வெளிவந்த காலை அதனை வாயால் உறிஞ்சிக் குடித்து விட்டார் அவர். அதனைக் கீழே துப்பி விடுமாறு எம் பெருமானார் (ஸல்) அவர்கள் எவ்வளவோ கூறியும் அவர் கேட்கவில்லை. "எம்பெருமானார் (ஸல்) அவர்களின் திருமேனியில் ஓடிய இரத்தத்தை நான் இந்த மண்ணிலேயா துப்புவேன்? இறைவன் மீது ஆணையாக! ஒருபோதும் மாட்டேன்" என்று கூறி விழுங்கி விட்டார் அவர். அதைக் கண்ட எம்பெருமானார் (ஸல்) அவர்கள், "எவருடைய உடலில் என் இரத்தம் கலந்துள்ளதோ அவருடைய உடலை நரக நெருப்புத் தீண்டாது" என்று நன்மாராயம் மொழிந்தனர்.

பிற்காலத்திலும் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மீது அளவற்ற அன்பு செலுத்துவோர் இஸ்லாத்தில் அருகி இருக்கவில்லை. எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கொண்ட அளவற்ற பக்தியின் காரணமாக இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் மதீனாவின் தெருக்களிலே வாகனத்தின் மீது இவர்ந்து சென்றது கூடக் கிடையாது. எம்பெருமா னார் (ஸல்) அவர்களின் காலத்திலிருந்த வீடுகளைக் காணின் "எம்பெருமானார் (ஸல்) அவர்களின் அருட் பார்வை விழுந்த கட்டடமல்லவா இவை?" என்று கூறி அவற்றை அவர்கள் ஓடோடிச் சென்று முத்தமிடுவார் களாம். எம்பெருமானார் (ஸல்) அவர்கள் அடக்கப் பெற்றுள்ள மதீனாவிலேயே தாம் இறந்து நல்லடக்கம் செய்யப்பட வேண்டும் என்பதற்காக அவர்கள் வேற்றூர் களுக்குச் செல்வதே இல்லை. கலீபாவின் அழைப்பை ஏற்று பக்தாதுக்குக் கூடச் செல்லவில்லை. மக்காவிற்குக் கூடத் தம் ஹஜ்ஜுக் கடமையை ஆற்ற ஒரே ஒரு தடவைதான்

சென்றனர். காரணம் தாம் அங்குச் சென்றிருக்கும் பொழுது தமக்கு இறப்பு அண்மி விடின் தாம் மதீனாவில் ஜன்னத்துல் பகீயில் அடங்கப் பெற்று மறுமையில் எம்பெருமானார் (ஸல்) அவர்களுடன் உயிர்த்தெழும் பேற்றினை இழந்துவிட நேரிடுமே என்ற அச்சத்தினாலேயாம்.

ஷைகு அப்துர் ரஹீம் புர்யீ (ரஹ்) அவர்கள் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அளப்பரும் அன்பை நாம் இன்று எண்ணும்பொழுதுகூட நம்முடைய உடலெல்லாம் சிலிர்க்கிறது. 'இந்தியாவிலிருந்து இன்ன பெயரும் இன்ன அடையாளமும் உள்ள என் அருள்நேசர் ஒருவர் வருகிறார். அவர் என்னுடைய அடக்க இடத்தை அடைந்துவிடின் அவர் மீது எனக்குள்ள அளவற்ற அன்பின் காரணமாக நான் அவரை வரவேற்க என்னுடைய அடக்க இடத்திலிருந்து வெளிக்கிளம்ப ஏற்பட்டுவிடும். எனவே அவர் என்னை அடையாது தடுத்து நிறுத்துக!" என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவின் ஆளுநரின் கனவில் தோன்றிப் பணித்து விட்டும் மறைந்துவிட்டனர். அவ்வாறே அவ்வாளுநர் அவர்களை இலக்குக் கண்டு பிடித்துத் தாம் கண்ட கனவை அவர்களிடம் விண்டு அவர்களைத் தடுத்து நிறுத்தியபொழுது அவர்கள் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் மீது கொண்ட அளப்பரும் காதலினால் நீர் போல் உருகி அவ்விடத்திலேயே இறப்பெய்தினர். அவர்களின் அடக்க இடம் இன்றும் பத்ரிலிருந்து மதீனா செல்லும் பாட்டையில் சற்று விலகி மலையடிவாரத்தில் உள்ளது.

சுல்தான் மஹ்மூத் கஜ்னவீ பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பும் பக்தியும் அளப்பரியதாக இருந்தது. அவருக்குக் குற்றேவலனாக அயாஸின் மகன் முஹம்மத் என்பான் பணியாற்றி வந்தான். ஒரு நாள் அவர் அவனை வழக்கம் போல் பெயர் சொல்லி அழைக்காது 'அயாஸின் மகனே!' என்று அழைத்து 'ஒலு'ச் செய்யத் தண்ணீர் கொண்டு வருமாறு கூறினார். இது அவனின் உள்ளத்தில் சுருக்கெனத் தைத்தது. "நான் அரசருக்கு என்ன



தவறு செய்தேனோ அறியேனே, என் பெயர் சொல்லி அழகாக அழைக்கும் அவர் இன்று அயாஸின் மகனே என்று அழைத்தாரே" என்று எண்ணி வருத்தமுற்றவனாய் இதனைத் தம் தந்தையிடமும் கூறினான். அயாஸ் வாய்ப்புக் கிடைத்த பொழுது இதனை சுல்தான் மஹ்மூத் கஜ்னவீயிடம் கூறி, "என் மகன் ஏது பிழை செய்தான், கூறுங்கள். அவனைத் தண்டிக்கிறேன்" என்று வினயமாக வேண்டிய பொழுது "அவன் யாதும் பிழை செய்யவில்லை. அன்று நான் ஒலுவில்லாமல் இருந்தேன். நான் 'ஒலு' வில்லாமல் இருக்கும் பொழுது பெருமானார் (ஸல்) அவர்களின் திருப்பெயராகிய முஹம்மத் என்பதனை வாயாலும் உச்சரிப்பதில்லை. எனவேதான் அவனை அவன் பெயர் கூறி அழைக்காது 'அயாஸின் மகனே' என்று அழைத்தேனேயன்றி வேறில்லை" என்று நவின்றார்.

ஒரு நாள் சுல்தான் மஹ்மூத் கஜ்னவீ 'ஜும்ஆ'வுக்குச் சற்றுத் தாமதமாக வந்தபொழுது தொழுகை நடந்து கொண்டிருந்தது. பள்ளிவாயல் மக்களால் நிரம்பி வழிந்ததால் மக்கள் காலணிகளைக் கழற்றி வைக்கும் இடத்தில் நின்று தம் மணிமுடி தரித்த தலை அக்காலணிகளிடையே போய்ப் புதையும் வண்ணம் தொழுதார். தொழுகை முடிந்ததும் சுல்தான் மஹ்மூத் கஜ்னவீ காலணிகளிடையே அமர்ந்திருப்பதைக் கண்ட அமைச்சர் மக்களை சுல்தானுக்கு வழிவிடும் வண்ணம் விலகுமாறு கூற அது கண்டு வெகுண்ட சுல்தான் "நீர் மஹ்மூதைக் கௌரவிக்க விரும்புகிறீரே ஒழிய மஹ்மூதின் வழிமுறையை (சுன்னத்தை) கௌரவிக்கவில்லையே" என்று கடுமையுடன் கூறினார். பெருமானார் (ஸல்) அவர்களின் வழிமுறை, கிடைத்த இடத்தில் அமர்ந்து தொழுவதேயன்றி மக்களை விலக்கிக் கொண்டு முன் செல்வதல்ல என்பதை இவ்வாறு உணர்த்தினார் அவர்.

ஒலுச் செய்யும் பொழுது கை விரல்களுக்கிடையே கோதிக் கழுவுவதான எம்பெருமானார் (ஸல்) அவர்களின் வழிமுறையைப் பின்பற்றத் தவறியதற்காக ஒரு வலியினு

டைய விலாயத்தையே (வலித்தனம்) முஹ்யித்தீன் ஆண்டகை அவர்கள் பறித்து விட்டனர் என்று வரலாறு கூறுகிறது.

எம்பெருமானார் (ஸல்) அவர்களின் சின்னஞ்சிறு செயலையும் பின்பற்றுவதைப் பெரும்பேறாக ஆன்றோர்கள் கருதினர். அவ்விதம் செய்வதே தாங்கள் எம்பெருமானார் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதற்கான உண்மையான அறிகுறி என்றும் அவர்கள் கருதினார்கள். ஒரு தடவை அலீ (ரலி) ஒரு வழியே புரவி இவர்ந்து சென்ற பொழுது ஓர் இடத்தை அடைந்ததும் அங்கு நின்று கொண்டு ஒரு திசையைப் பார்த்து புன்முறுவல் பூத்தார்கள். காரணம் வினவப்பட்ட பொழுது தாமும் பெருமானார் (ஸல்) அவர்களும் ஒரு நாள் அவ்வழியே வந்த பொழுது அவ்விடத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் பூத்ததாகவும் எனவே தாமும் அவ்விதமே செய்வதாகவும் கூறினார்கள் அவர்கள்.

இப்னு உமர் (ரலி) அவர்கள் ஹஜ்ஜு செய்யப் புறப்பட்ட பொழுது எம்பெருமானார் (ஸல்) அவர்கள் எந்த எந்த இடங்களில் தங்கி எந்த எந்த வணக்கங்களை நிகழ்த்தினார்களோ அந்த அந்த இடங்களில் தங்கி அந்த அந்த வணக்கங்களை அணுவத்தனையும் பிசகாது செய்தனர்.

எம்பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஜ்ஜுச் செய்யப் புறப்பட்டு வருங்கால் ஓர் இடத்தை அடைந்ததும் அங்கு மீன் உணவு அருந்தினர் என்பதற்காக இன்றும் யாத்திரிகர்கள் அவ்விடத்தில் தங்கி மீன் உணவு அருந்துகிறார்கள். அன்று எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அங்கு மீன் உணவு கிடைத்தது போன்று இன்றும் யாத்திரிகர்களுக்கு அங்கு மீன் உணவு கிடைக்கிறது.

மகாகவி இக்பாலுக்கு பெருமானார் (ஸல்) அவர்கள் மீது இருந்த அளவற்ற அன்பின் காரணமாக அவர்களின் திருப் பெயரை உச்சரிக்கும் பொழுது அவரின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தோடியது.



பல்லக்கு வலியுல்லாஹ் அவர்களுக்குப் பெருமானார் (ஸல்) அவர்கள் மீதிருந்த அளவற்ற அன்பின் காரணமாகப் பெருமானார் (ஸல்) அவர்களின் திருப்பெயரைக் கூறும் பொழுது அவர்களின் உள்ளத்தையும் உடலையும் ஒரு விதத் திடுக்கம் ஆட்கொண்டது.

எம்பெருமானார் (ஸல்) அவர்களின் மீது மக்கள் கொண்டுள்ள அளவற்ற அன்பின் காரணமாக அவர்களின் திருமுடி, நகம், உடை ஆகியவையெல்லாம் மிகவும் புனிதமான பொருள்களாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தன; வருகின்றன.

நம்பிராட்டிமார்களில் ஒருவரான உம்மு ஸல்மா (ரலி) அவர்கள் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் திருமுடிகளில் ஒன்றைப் பத்திரமாகப் பாதுகாத்து மக்களுக்குக் காட்டி வந்தனர். அவர்களின் திருமுடிகளில் ஒன்று டில்லியிலுள்ள ஜும்ஆ மசூதியிலும் மற்றொன்று கஷ்மீரிலுள்ள பள்ளிவாயல் ஒன்றிலும் உள்ளது. பின்னையதில் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் திருமுடி வைக்கப்பட்டிருப்பதன் காரணமாக அதற்கு 'ஹஸரத் பால் மஸ்ஜித்' என்ற பெயர் ஏற்பட்டுள்ளது.

முஆவியா (ரலி) அவர்கள் இறக்கும் பொழுது தாம் சேகரித்து வைத்திருந்த பெருமானார் (ஸல்) அவர்களின் நகங்களைப் பொடி செய்து தம் வாயிலும் கண்களிலும் தூவுமாறும் பெருமானார் (ஸல்) அவர்கள் தமக்குத் தந்திருந்த துணியால் கஃபனிட்டுத் தம்மை நல்லடக்கம் செய்யுமாறும் இறுதி உரை கூறி விட்டுச் சென்றார்கள். இவர்கள் இறந்ததும் அவ்வாறே செய்யப்பட்டது.

கஃப் இப்னு ஸுஹைர் என்ற கவிஞர் பாடிய 'பானத் ஸுவாத்' என்ற கவிதையைக் கேட்டுப் பெரிதும் மகிழ்ச்சியுற்ற எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தாம் அணிந்திருந்த போர்வையை அவருக்கு அன்பளிப்பாக வழங்கினர். அதனை நாற்பதாயிரம் திர்ஹங்களுக்கு விலைக்கு வாங்கினர் முஆவியா (ரலி). கிர்கா ஷரீஃப் என்று அழைக்கப்படும் அப்போர்வை கி.பி. 1849-ஆம் ஆண்டில் சுல்தான்

அப்துல் மஜீதின் அன்னை சுல்தானா வாலிதாவால் இஸ்தம்பூலில் அதற்கென நிர்மாணிக்கப்பட்ட கிர்கா ஷரீஃப் ஜாமி என்ற பள்ளிவாயலில் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. உதுமானியப் பேரரசின் காலத்தில் ஒவ்வோர் ஆண்டும் ரமலான் திங்கள் பதினைந்தாம் நாள் சுல்தான் முதல் மக்கள் வரை தரிசிப்பதற்காக அது காட்டப்பட்டு வந்தது. அன்று துருக்கி முழுவதும் ஒரு பெருநாளாகவே கொண்டாடப்பட்டு வந்தது. முதலில் சுல்தான் அதனை முத்தியிடுவார். பின்னர் அமைச்சர்கள், ஷைகுல் மில்லத் ஆகியோர் அதனை முத்தமிடுவர்.

எம்பெருமானார் (ஸல்) அவர்களின் கொடி இன்றும் ஸன்ஜக் ஷரீப் என்ற பெயருடன் இஸ்தம்பூலில் பேணுதலாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. பன்னிரண்டு அடி உயரமுள்ள அக்கொடியின் உச்சியில் உதுமான் (ரலி) அவர்களால் எழுதப்பட்ட குர்ஆன் வைக்கப்பட்டுள்ளது. அது உமர் (ரலி) அவர்களின் கொடியினால சுற்றப்பட்டு பச்சைத் துணியாலான பெட்டியில் வைக்கப்பட்டுள்ளது. இக்கொடியை முதலாம் ஸலீம் மன்னர் எகிப்திலிருந்து ஹிஜ்ரி 923-ம் ஆண்டில் துருக்கிக்குக் கொண்டு வந்தார். துருக்கி சுல்தான்கள் போர்மேற் செல்லும் பொழுது அது முந்நூறு அமீர்களின் பாதுகாப்பில் அவர்களுக்கு முன் எடுத்துச் செல்லப்பட்டு அதற்கென நிர்மாணிக்கப்பட்ட கூடாரத்தில் நட்டப்படும். போர் முடிந்ததும் மரியாதையுடனும் பிரார்த்தனையுடனும் சுருட்டி அதற்குரிய பெட்டியில் வைத்துக் கொணரப்படும். உதுமானியப் பேரரசின் காலத்தில் அதனைப் பாதுகாக்கும் பொறுப்பில் நாற்பது அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். படையணியில் கலகங்கள் ஏற்படும் பொழுதெல்லாம் அது வெளியே கொணரப்பட்டு நாட்டப்பட்டது. அதைக் கண்டதும் வீரர்கள் அமைதியுறலாயினர்.

எம்பெருமானார் (ஸல்) அவர்களின் அற்புதங்களில் ஒன்று அவர்களின் கால்தடம் மணலில் பதியாததும் எனினும் கல்லில் பதிந்திருப்பதுமாகும் என்று கூறப்படுகிறது. அவர்களின் கால்தடம் பதிந்த கற்கள் கதம் ஷரீஃப் என்ற பெயருடன் பற்பல இடங்களில் மரியாதையுடன் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கெய்ரோவிலுள்ள காயித்பே சமாதியில் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் திருப்பாதங்கள் பதிந்த கல் ஒன்று உள்ளது. அதனை காயித்பே இருபதாயிரம் தீனாருக்கு வாங்கினார் என்று அஹ்மத் தஹ்லான் கூறுகிறார்.



கி.பி.1579-ஆம் ஆண்டில் மக்காவிற்கு அக்பர் அனுப்பி வைத்த யாத்திரிகர் குழுவின் தலைவரான மீர் அபூதுராப் என்பவர் அங்கிருந்து அண்ணல் அவர்களின் வலது பாதம் மட்டும பதிந்த ஒரு கல்லைக் கொண்டு வந்தார். அதனை மரியாதையுடன் பெறுவதற்காக பேரரசர் அக்பர் ஆக்ராவிலிருந்து பல கல்தொலை சென்று அதனை பெற்றுத் தம் தோளின் மீது சுமந்து கொண்டு நூறு அடி தூரம் நடந்து வந்தார். அதன் பின் அதனை அமைச்சர் பெருமக்கள் அவ்வாறே மிகவும் மரியாதையுடன் சுமந்து வந்தார்கள்.

டில்லி ஜாமிஆ மஸ்ஜிதில் இத்தகு கதம் ஷரீஃப் ஒன்று எம்பெருமானார் (ஸல்) அவர்களின் மற்ற நினைவுப் பொருள்களுடன் பேணுதலாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

ஃபிரோஸ் ஷா துக்ளக்கின் மகன் ஃபதஹ்கானின் சமாதியிலுள்ள கதம் ஷரீஃப் கல்தான் இந்தியாவிலுள்ள கதம் ஷரீஃப் கற்களில் மிகவும் பிரக்கியாதி பெற்றதாக உள்ளது. எம்பெருமானார் (ஸல்) அவர்களின் இடது பாதம் பதியப்பட்ட அக்கல் ஒரு தண்ணீர் தேக்கத்தில் வைக்கப்பட்டுள்ளது. அத்தண்ணீர் எல்லா விதமான நோய்களையும் போக்கும் அருமருந்தாகக் கருதி அருந்தப்பட்டு வருகிறது. இதே போன்று கட்டாக் நகரிலும் ஒரு கல் உள்ளது.

## 4. முஹம்மத் (ஸல்) அவர்கள் ஹயாத்துன்னபி

எண்ணத் தொலையா ஆண்டுகளுக்கு முன் இறைவனின் பேரொளியிலிருந்து படைக்கப்பட்ட நூரெ முஹம்மதிய்யா அன்று தொட்டு இன்று வரை இந்த அண்டகோளங்களை ஆட்கொண்டு ஆட்சி செய்து கொண்டுள்ளது. ஏறத்தாழ 1400 ஆண்டுகளுக்குமுன் மக்கமா நகரத்தில் அப்துல்லாஹ்வின் திருமகனாக அது மனித உருவெடுத்துத்தோன்றி 63 ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்து மதீனமா நகரில் புனித ரௌலாஷரீஃபில் அடங்கப்பெற்ற போதினும் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் இன்னும் 'ஹயாத்துன்னபி' யாகவே இவ்வுலகில் வாழ்ந்து கொண்டுள்ளார்கள்.

எம்பெருமானார் (ஸல்) அவர்கள் 'ஹயாத்துன்னபி' யாக விளங்கி ஆற்றிவரும் அற்புதங்கள் ஒன்றா, இரண்டா? அவற்றை எல்லாம் ஒன்று திரட்டி ஒரு பெருநூலே எழுதி விடலாம் என்பது போன்று அவை அத்துணை அதிகமாக உள்ளன. எனினும் அவற்றில் சிலவற்றை இங்கு எடுத்துரைப்பது பொருத்தமெனக் கருதுகிறோம்.

ஹிஜ்ரி ஆறாம் நூற்றாண்டில் ஒரு நாள் நூருத்தீன் ஷஹீத், தஹஜ்ஜுத் தொழுகை தொழுது விட்டு துயில் கொண்டுள்ளார். அப்பொழுது எம்பெருமானார் (ஸல்) அவர்கள் அவரின் கனவில் திருத்தோற்றம் வழங்கி, இரு பரங்கி நிறத்தவரை அவரிடம் சுட்டிக் காட்டி, "நீர் இவர்களின் விஷமத்தைத் தடுப்பீராக!" என்று அருண் மொழி பகர்ந்து விட்டு மறைந்தனர். இவ்வாறு அவ்விரவில் அவர் மூன்று முறை கனாக் கண்டு விழித்தெழுந்தார். அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் அருட் கட்டளையைப் பெற்ற அவர் மதீனாவில்தான் ஏதோ விஷமத்தனம் நிகழ்ந்திருக்குமென்று எண்ணி அவ்விரவே தம் அமைச்சர் ஜமாலுத்தீன் முஸலீயையும் இருபது ஏவலாளர்களையும் அழைத்துக் கொண்டு ஏராளமான பொருட்களுடன் மதீனா புறப்பட்டார்.



சின்னாட்களில் மதீனா வந்தடைந்த அவர் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் ரௌலா ஷரீஃபின் முன் மிகவும் மரியாதையுடன் நின்று ஸலாம் கூறியபின் மஸ்ஜிதெ நபவீயின் ஒரு பக்கல் அமர்ந்து தாம் வந்திருப்பதாகவும் மதீனா வாழ் ஆண்கள் அனைவருக்கும் தாம் அன்பளிப்புச் செய்ய விரும்புவதாகவும் எனவே அவர்கள் தம்மிடம் வந்து அவ்வன்பளிப்புகளைப் பெற்றுச் செல்லலாமென்றும் அந்நகர முழுவதும் அறிவிக்க ஏற்பாடு செய்தார்.

மதீனா வாழ் மக்கள் ஒருவர் பின் ஒருவராக அவரிடம் அன்பளிப்புப் பெற வந்த பொழுது அவர் அவர்களின் முகத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள் தமக்குக் கனவில் காட்டிச் சென்ற உருவினராக அவர்களில் ஒருவரும் இல்லாமல் இருப்பதைக் கண்டதும் அவருக்கு ஏற்பட்ட ஏமாற்றத்திற்கு அளவில்லை. எல்லாரும் வந்து அன்பளிப்புப் பெற்றுச் சென்ற பின், 'இன்னும் எவரேனும் பாக்கியுள்ளனரா?' என்று அங்கிருந்தவர்களிடம் அவர் வினவ, "ஆம்! மிகப் பெரும் செல்வர்களும், பக்திமான்களுமான இருவர் இங்கு உள்ளனர். அவர்கள் தங்களிடம் அன்பளிப்புப் பெற வரவில்லை" என்று ஆங்கிருந்தோர் கூற அவர்களை அழைத்து வருமாறு ஆணையிட்டார் அவர். அவர்களும் அரச ஆணை ஏற்று உடனே வந்தார்கள். என்ன வியப்பு! சுல்தான் நூருத்தீன் ஷஹீதுக்குத் தம் கண்களையே தம்மால் நம்ப இயலவில்லை. எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தமக்கு கனவில் காட்டிய அதே பரங்கி நிறத்தவர்கள்தாம் அவர்கள்.

அவர்களை அமரச் செய்து அவர்களின் வரலாற்றை சுல்தான் விசாரித்தபொழுது தாங்கள் ஸ்பெய்ன் நாட்டைச் சேர்ந்தவர்களென்றும் ஹஜ்ஜுச் செய்ய வந்த தாங்கள் மதீனாவில் தங்கி எம்பெருமானார் (ஸல்) அவர்களின் அடக்க இடத்தைத் தினந்தோறும் தரிசித்து வரும் பேறு பெற்று வருவதாகவும் கூறினர். அவர்களை அங்கேயே அமர்ந்திருக்குமாறு கூறிவிட்டு அவர்கள் தங்கி இருந்த அறைக்குச் சிலருடன் சென்று சுல்தான் அதனைச்

சோதித்துப் பார்த்தார். அங்கு ஒரு பாய் விரிக்கப்பட்டிருந்தது. அதனை அப்புறப்படுத்தவே அதன் கீழே சுரங்கம் தோண்டப்பட்டு இருப்பதையும் அது எம்பெருமானார் (ஸல்) அவர்களின் அடக்க இடம் வரை சென்றிருப்பதையும் கண்டார்.

திரும்பி வந்த அவர்கள் அங்கு வந்து தங்கி இருப்பதற்கான உண்மைக் காரணத்தைக் கூறுமாறு வினவ அவர்கள் முன்னர் கூறியதையே மீண்டும் கூறினார்கள். உடனே அவர்களைத் தூணில் கட்டி நையப் புடைக்குமாறு ஆணையிட்டார் சுல்தான். அவ்வாறே செய்ய அவர்கள் அடி தாங்க இயலாது உண்மையை எடுத்துரைத்தார்கள். தாங்கள் ஸ்பெயின் நாட்டுக் கிறிஸ்தவர்கள் என்றும் தங்களின் அரசரின் ஏவல்படி நபி அவர்களின் உடலைத் திருட்டுத்தனமாக எடுத்துச் செல்ல இங்கு வந்து தங்கி இருப்பதாகவும் கூறினார்கள். அது கேட்டு சுல்தானுக்கு ஆற்றொணா அழுகை பீறிட்டு வந்தது. அவர்களைச் சிரச்சேதம் செய்யுமாறு கட்டளையிட்டு விட்டு அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்களுடையவும் அபூ பக்கர் (ரலி), உமர் (ரலி), ஆகியோருடையவும் அடக்க இடத்தைச் சூழத் தரை மட்டம் வரை ஈயத்தால் சுவர் எழுப்பி அரண் செய்துவிட்டுத் தம் தலைநகர் மீண்டார் அவர் என்று வரலாறு கூறுகிறது.

“உங்களிடையே இருந்து உங்களில் ஒருவராக ரஸூல் வந்துள்ளார். அவர் உங்களின் துயர் கண்டு துயருறுகிறார். உங்களின் நன்மைகள் அதிகப்படுவதில் அவர் பெரிதும் ஆவலுள்ளவராய் உள்ளார். உண்மையான இறை நம்பிக்கையாளர்கள் மீது அவர் அன்பும் அருளும் உடையவர்” (9:128) என்று இறைவன் தன் திருமறையில் கூறி இருப்பதற்கேற்ப அவர்கள் அன்றும் இருந்தார்கள்; இன்றும் இருக்கின்றார்கள்; என்றும் இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

உலகத்தின் துவக்கம் முதற்கொண்டு அவ்வப்பொழுது தோன்றும் துன்பங்களிலெல்லாம் தோன்றாத் துணையாக நின்று கொண்டிருந்த எம்பெருமானார் (ஸல்) அவர்கள் இன்றும் அடியார்களின் துயர் போக்க அவர்களின்



கனவில் திருத்தோற்றம் வழங்கி ஆவன செய்து கொண்டுள்ளார்கள்; இஸ்லாமிய அறநெறியை உலகில் பரப்புவதற்கான அருட் கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டுள்ளார்கள். காஜா முயீனுத்தீன் கூஷிஸ்தி (ரஹ்) அவர்களுக்கும் சிந்தா மதார் ஷா (ரஹ்) அவர்களுக்கும் இந்தியா சென்று தீன் சுடர் கொளுத்துமாறு பணித்ததும் எம்பெருமானார் (ஸல்) அவர்கள்தாம். மதீனாவின் ஆளுநராக இருந்த ஸையித் இப்ராஹீம் (ரஹ்) அவர்களின் கனவில் திருத்தோற்றம் வழங்கி தமிழ்நாடு சென்று தீன் பயிர் விளைக்குமாறு அருட்கட்டளை பிறப்பித்ததும் எம்பெருமானார் (ஸல்) அவர்கள்தாம். உந்தலூஸின் மீது தாரிக் படையெடுத்தக் கால் நடுக்கடலில் கப்பலில் வைத்து அவரைச் சிறு உறக்கம் ஆட்கொள்ள அப்பொழுது அவரின் கனவில் திருத்தோற்றம் வழங்கி அவரை ஆசீர்வதித்து அருட்செய்ததும் எம்பெருமானார் (ஸல்) அவர்கள்தாம். சுல்தான் மஹ்மூத் கஜ்னவியின் தந்தையான சுபுக்தகின் சாதாரணப் போர் வீரராக இருந்த காலை வேட்டைக்குச் சென்றபொழுது தாம் வேட்டையாடிய தாய் மானைக் கண்டு அதன் சேய்கள் கதறித் துடித்தபொழுது அவற்றிற்கு இரங்கி தாம் வேட்டையாடிய மானைக் காட்டிலேயே விட்டு வந்ததற்காக அவரின் கனவிலே திருக்காட்சி நல்கி, “நீர் ஒரு மானுக்கு இரங்கியதற்காக விரைவில் இறைவன் உமக்கு ஓர் அரசாங்கத்தைத் தந்தருள்வான்” என்று நன்மாராயம் மொழிந்துவிட்டு மறைந்ததும் எம்பெருமானார் (ஸல்) அவர்கள்தாம்.

இவ்வாறு தீன் பயிர் விளைக்கவும் தீன் கொடி பறக்கவும் ஆசீர்வதித்த எம்பெருமானார் (ஸல்) அவர்கள் பலரின் கனவில் தோன்றி இஸ்லாத்தைத் தழுவுமாறு பணித்து விட்டுச் சென்றுள்ளார்கள். ஒரு தடவை பிக்தால் சென்னை வந்திருந்தபொழுது “தங்களை இஸ்லாத்தில் இணையுமாறு செய்த கடைசி நிகழ்ச்சி யாது?” என்று ஜமால் முஹம்மத் ஸாஹிப் வினவிய காலை, “எம்பெருமானார் (ஸல்) அவர்கள் என் கனவில் திருத்தோற்றம் வழங்கி என்னை இஸ்லாத்தைத் தழுவுமாறு பணித்துவிட்டுச் சென்றதுதான்” என்று நீர் மல்கும் கண்களுடன் கூறினார் அவர்.

வெளியூரைச் சேர்ந்த செல்வர் ஒருவர் காஜி ஸாஹிப் ஒருவரை அணுகித் தம் பெயர், ஊர் முதலியவற்றைக் கூறாது தமக்குக் கலிமாச் சொல்லித் தருமாறு வேண்ட அவ்விதமே காஜி ஸாஹிப் சொல்லிக் கொடுத்தார் என்றும் அதன்பின் அவரை நோக்கி, "தாங்கள் யார்? எந்த ஊர்?" என்று வினவியபொழுது "அவற்றைச் சிறிது காலத்திற்கு மறைத்து வைத்திருப்பதே நல்லது என்று நான் கருதுகிறேன்" என அவர் கூறியதாகவும், "தாங்கள் இஸ்லாத்தைத் தழுவுவதற்கான காரணம் யாது?" என்று காஜி ஸாஹிப் வினவிய பொழுது "நபி பெருமானார் என் கனவில் தோன்றி இஸ்லாத்தைத் தழுவுமாறு பணித்து விட்டு மறைந்தனர்" என்று அவர் சொல்லி அவ்விடத்தை விட்டு அகன்றதாகவும் கவிஞர் இக்பால் ஒரு நிகழ்ச்சியை கூறுகிறார்.

ஆலிப் புலவருக்கும் உமறுப் புலவருக்கும் காசிம் புலவருக்கும் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் திருத் தோற்றம் வழங்கி ஆவன செய்து அருள் செய்ததை நாம் அனைவரும் நன்கறிவோம்.

பக்கவாதத்தால் துன்புற்ற இமாம் பூஸரி (ரஹ்) அவர்கள் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் அருள் வேண்டி புகழ்ப்பா பாடிய பொழுது அவர்களின் கனவில் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் திருத்தோற்றம் வழங்கித் தங்களின் மாண்பாரும் போர்வையை அவர்கள் மீது போர்த்தி விட்டு மறைய அவர்கள் அக்கணமே நோய் நீங்கப் பெற்றனர். அவர் இயற்றிய அந்தப் புகழ்ப்பாவும் இன்றும் புர்தா (போர்வைப்பா) என்ற சிறப்புப் பெயருடன் எம் பெருமானார் (ஸல்) அவர்களின் திருப்புகழைப் பார் முழுவதும் பறை முழக்கிக் கொண்டுள்ளது.

மக்கள் குடி தண்ணீரின்றிப் பெரிதும் துன்புற்ற பொழுது அதற்கான வழிவகை யாது என அறியாது சுல்தான் இல்த்துமிஷ் பெரிதும் துன்புற்றுக் கொண்டிருந்த காலை எம்பெருமானார் (ஸல்) அவர்கள் அவரின் கனவில் திருத்தோற்றம் வழங்கி ஓரிடத்தைச் சுட்டிக் காட்டி அவ்விடத்தில் குளம் வெட்டுமாறு பணித்து விட்டுச்



சென்றனர். வைகறையில் துயிலெழுந்ததும் அவர் அவ்விதமே செய்ய அதிலிருந்து நீர் குமிழியிட்டுக் கொண்டு வந்தது. 'ஹௌளு ஸ்மஸ்' என்று அழைக்கப்பட்டு வந்த அக்குளம் இப்பொழுதும் 'குத்பு ஸாஹிப் குளம்' என்ற பெயருடன் இருந்து வருகிறது. அதனை நிஜாமுத்தீன் ஔலியா பெரிதும் பாராட்டிப் பேசுவர் என்றும் அக்குளத்தின் மண்புனிதமாகக் கருதப்படுகிறது என்றும் இறை நேசச் செல்வர் பாபா ஃபரீதுத்தீன் கஞ்செ ஷகர் (ரஹ்) அவர்கள் தம் ஆன்மீக குருவின் அடக்க இடத்தைத் தயாரிப்பதில் அம்மண்ணைப் பயன்படுத்தினர் என்றும் கூறப்படுகிறது.

இறைநேசச் செல்வி ராபியா பஸரீ பிறந்த இரவு வீட்டில் விளக்கேற்றக் கூட எண்ணெய் இல்லாத அவல நிலையிலிருந்த அவருடைய தந்தை அண்டை வீட்டில் சென்று கேட்க நாணமுற்று அளவிட முடியா மனத்துயருடன் உறங்குங்கால் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் அவரின் கனவில் திருத்தோற்றம் வழங்கி, "ஒன்றும் கவலற்க! உம் மகள் பெண்களின் அரசியாக விளங்குவார். அவரின் பரிவுரையால் எழுபதாயிரம் பேர் சுவனம் புகுவர். இந்நகர ஆளுநர் ஈஸா ஸதனுக்கு நான் எழுதுவது போன்று ஒரு மடல் எழுதுவீராக! அதில் நீர் ஒவ்வோர் இரவும் நூறு ஸலவாத்களும் வெள்ளி இரவு நானூறு ஸலவாத்களும் ஓதுவது வழக்கமாயிருக்க சென்ற வெள்ளி இரவு என்னை மறந்து விட்டீரே. எனவே அதற்குப் பிராயச்சித்தமாக நானூறு தீனார்களை இம்மனிதருக்குக் கொடுப்பீராக!' என்று குறிப்பிடுக" என்று கூறிவிட்டு மறைந்தனர். அடுத்த நாள் காலையில் அவ்விதமே செய்து நானூறு தீனார்களைப் பெற்றுத் தம் வறுமை போக்கினார் ராபியாவின் தந்தை என்பது வரலாறு தரும் உண்மையாகும்.

இறைநேசச் செல்வர் யஹ்யா இப்னு முஆத் அநாதைகளுக்கும் ஆதரவற்றவர்களுக்கும் அள்ளி, அள்ளி வழங்கி ஒரு லட்சம் திர்ஹங்கள் வரைக் கடன் வாய்ப்பட்ட பொழுது யாது செய்வதென அறியாது அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்களின் துணைவேண்டி நின்றக் கால் அவ்வான்றோரின் கனவில் அவர்கள் திருத்தோற்றம்

வழங்கி "யஹ்யா! கவலற்க! உம் கவலை எம்மைப் பெரிதும் துன்புறச் செய்கிறது. குராஸானுக்குச் செல்லும். அங்கு ஒரு பெண்மணி உம் கடனை தீர்க்க உதவுவார். நாமும் இதோ அவரின் கனவில் திருத்தோற்றம் வழங்கி உமக்கு உதவி செய்யுமாறு பணித்து விட்டுச் செல்கின்றோம்" என்று கூறி மறைந்தனர்.

தமக்கு உதவி செய்யவிருக்கும் அப்பெண்மணி குராஸான் நாட்டில் எந்த ஊரில் வாழ்கின்றார் என அறியாது யஹ்யா இப்னு முஆத் (ரஹ்) அவர்கள் பற்பல ஊர்களிலும் சொற்பொழிவாற்றிச் சென்ற பொழுது இறுதியாக அவர்கள் ஹீரத்தை அடைந்தக்கால் அந்நாட்டு இளவரசி அவர்களின் சொற்பொழிவைக் கேட்டு அவர்களைத் தம் அரண்மனை அழைத்துச் சென்று அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்கள் தம் கனவில் தோன்றி அருட் கட்டளை பிறப்பித்துச் சென்றதையும் தாம் அவர்களின் வரவை எதிர்பார்த்துக் காத்திருப்பதையும் கூறித் தம் தந்தை தமக்கு அன்பளிப்பாகத் தந்த மூன்று லட்சம் திர்ஹம் மதிப்புள்ள சொத்துக்கள் அனைத்தையும் அவர்களிடம் ஒப்படைத்தார்.

இவ்வாறு துயருற்றோரின் துயர் களைய எம்பெருமானார் (ஸல்) அவர்கள் கனவில் திருத்தோற்றம் வழங்கி ஆற்றிய அற்புதங்களில் எதைக் கூறுவது, எதைக் கூறாது விடுவது என்று நமக்கே விளங்கவில்லை. எனினும், கனவில் நடந்தது உண்மையில் நனவில் கைவரப்பெற்ற நிகழ்ச்சிகள் இரண்டை அக்கனவுகளைக் கண்டவர் வாயிலாக எடுத்துரைத்து இவ்வத்தியாயத்தை முடிப்போம்.

ஷைகு அபுல் கைர் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் புனித ரௌளா ஷரீஃபைத் தரிசித்து வருவதற்காக மதீனா சென்றேன். ஐந்து நாட்களாக நான் அங்குமிங்கும் அலைந்து திரிந்தும் எனக்கு யாதொரு உணவும் கிடைக்கவில்லை. எனவே பெரிதும் உடல் சோர்வுடனும் உளச் சோர்வுடனும் ரௌளா ஷரீஃபுக்குத் திரும்பி எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கும் அபூ பக்கர் (ரலி) அவர்களுக்கும் உமர்



(ரலி) அவர்களுக்கும் ஸலாம் உரைத்து, "நாயகமே! நான் இன்று தங்களின் விருந்தினனாக வந்துள்ளேன்" என்று கூறிவிட்டு மிம்பருக்குப் பின் சென்று படுத்துக் கொண்டேன். அப்பொழுது அலீ (ரலி) அவர்கள் என் கனவில் தோன்றி எம்பெருமானார் (ஸல்) வந்திருப்பதாகக் கூறினர். நான் ஓடோடிச் சென்று அவர்களைத் தரிசித்து அவர்கள் இரு புருவங்களுக்கிடையில் முத்தமிட்டேன். அப்பொழுது எம்பெருமானார் (ஸல்) அவர்கள் என்னிடம் ஒரு ரொட்டியைக் கொடுத்தனர். அதனைப் பிய்த்து ஒரு துண்டைத் தின்றேன். மற்றொரு துண்டை என் கையில் வைத்திருந்தேன். அந்நிலையிலேயே நான் விழித்து விட்டேன். என்ன வியப்பு! அந்தப் பாதி ரொட்டித் துண்டு என் கையிலேயே இருந்தது.

டில்லி தந்த மாபெரும் மேதகை ஷா வலியுல்லாஹ் (ரஹ்) அவர்கள் தாம் அடைந்துள்ள உன்னத நிலைக்குக் காரணம் தாம் வழக்கமாக ஸலவாத்தை அதிகமதிகமாக ஓதி வந்ததுதான் என்று கூறுகிறார்கள். மேலும் தாமும் தம் தந்தையும் எம்பெருமானார் (ஸல்) அவர்களை நாற்பது தடவை கனவில் கண்ட நிகழ்ச்சிகளைத் தொகுத்து 'துர்ஸு~ தமீன்' என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்:

"என் தந்தை கடுமையான நோய்வாய்ப்பட்டிருந்தனர். அப்பொழுது எம்பெருமானார் (ஸல்) அவரின் கனவில் தோன்றி, "கவலற்க! நலம் பெற்று விடுவீர்" என்று நன்மாராயம் மொழிந்து தங்களின் தாடி உரோமங்கள் இரண்டை அவரின் கையில் கொடுத்துவிட்டு மறைந்தனர். திடுக்கிட்டு விழித்தெழுந்தபொழுது அந்த உரோமங்கள் இரண்டும் அவரின் கையில் இருந்தன. அவற்றில் ஒன்றை அவர் எனக்கு அன்பளிப்பு நல்கினார்."

என்னே எம்பெருமானார் (ஸல்) அவர்களின் மாண்பு!

எம்பெருமானார் (ஸல்) அவர்களின் மாண்புதான் என்னே!!